இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 125 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 29 – வெள்ளிக்கிழமை 15 டிசம்பர் 2023 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 125: Thiruvalluvar Year - 2054 - Karthigai 29- Friday 15 December 2023 - Dak 12 Pages ₹ 5.00


# அன்று கண்டதும்; இன்று காண்பதும் அதே நிலா!



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'இளைஞர்களுக்கு வழி விடுவோம்' எனும் தலைப்பில் முரசொலி'யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 'கலைஞர் கடிதங்கள்' எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.24 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தவிருக்கும் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**உடன்பிறப்பே,**

பழைய நினைவுகளை அசை போடும் பொழுது பனிக்கட்டியிலிருந்து கிளம்புகிற ஆவியை ரசிப்பது போன்ற ஓர் இன்பம்!

தம்பி மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறவிருக்கும் நெல்லை இளைஞர் அணி மாநாட்டுக்கு அணிவகுத்துச் செல்லும் அடுத்த தலைமுறை உடன்பிறப்புக்களுக்கு; அதே நெல்லை மாவட்டம், கோவில்பட்டியில் 1950ஆம் ஆண்டு என்னுடைய 25வது வயதில் தலைமையேற்று, இரு நாட்கள் மாநாட்டை நடத்தியதையும் - நான் அங்கே ஆற்றிய உரையை அச்சியற்றி சென்னை முன்னேற்றப் பண்ணை எனும் பதிப்பகத்தார் புத்தகமாக வெளியிட்டதையும் - இதோ நினைவு படுத்திக் கொள்கிறேன். அதற்கு 57 ஆண்டுகளுக்குப் பிறகு நெல்லையிலே இளைஞர் அணி மாநாடு நடைபெறுகிற நேரத்தில் - அப்போது என்ன பேசினேன் என்பதை இளைய திலகங்கள் இதயத்தில் பதித்துக் கொள்ள ஏதுவாக அதனை இப்போது இயக்க வளர்ச்சிக்கும் கட்டுக்கோப்புக்கும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறேன்.

"கோவில்பட்டியில் கூடும் இம்மாநாட்டில் நான் தலைமை வகிப்பதில் குறிப்பிடத்தக்க அம்சமொன்றுள்ளது. சென்ற ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க விழாவில் கோவில்பட்டியில் நானேதான் கலந்து கொண்டேன். இப்போது அதே நகரில் மாநாட்டிலும் கலந்து கொள்கிறேன் என்பதை நினைக்கும்போது மட்டிலா மகிழ்ச்சி கொள்கிறேன்.

என் போன்றவர்களுக்கு இந்தச் சிறப்பு வழங்கப்படுவதின் நோக்கம் இயக்கம் இளைஞர்களின் சொத்து - உழைப்பாளிகள் அமைத்த மாளிகை - அதில் உல்லாசபுரியினர் வாழ முடியாது என்பதை நாட்டுக்கும் - நாட்டிலே நம்மைப் பற்றி நச்சுக் கருத்துக்களை நடமாட விடுபவர்களுக்கும், எடுத்துக்காட்டத்தான் என்பது என் எண்ணம்.

தலைமை வகிப்பது என்பது கட்சியிலே ஒரு நட்சத்திரத்தை உண்டாக்குவது என்பதல்ல. அப்படி தலைமை வகிப்பவர்கள் கருதினாலும் - அல்லது தலைமை வகிப்பவரைப் பற்றிக் கருதினாலும் அது பெரும் தவறு! வரப் போகும் போராட்டங்களிலே இதுவரை கழகத்தின் சார்பாக நடைபெற்ற மாவட்ட மாநாடுகளின் தலைவர்கள் வரிசைக் கிரமமாக களத்திலே நிறுத்தப்பட வேண்டும். அந்தந்த மாவட்ட மாநாட்டுத் தலைவர்களின் சார்பாக நான் தலைமைக் கழகத்தை கேட்டுக் கொள்வதெல்லாம் 'எங்களை எதிர்காலப் போராட்டத்தின் தளபதிகளாக் குங்கள்' என்பதுதான்! மார்பிலே வேல்தாங்கி மரணத்தை அணைப்போமே தவிர மாற்றாரிடம் சரண்புக மாட்டோம். மாசற்றக் கொள்கைகளை எதிரிகட்குக் காணிக்கையாக்க மாட்டோம். இந்த உறுதியோடுதான் இன்றைய மாநாட்டுக்குத் தலைமை வகிக்கிறேன்.

தென்னிந்திய நல உரிமைச் சங்கமாக ஜஸ்டிஸ் கட்சியாக - திராவிடர் கழகமாக - திராவிட முன்னேற்றக் கழகமாக நாம் வளர்ந்திருக்கிறோம். ஒவ்வொரு மாறுதலின்போதும் ஒவ்வொரு புதுமை ஏற்பட்டு வந்திருக்கிறது. சுயமரியாதைக் கொள்கைகளைத் தேயவிடாமல் சுயநலத்திற்காக இயக்கத்தைப் பயன்படுத்திக் கொள்ளாமல் தொண்டுபுரிந்த சுத்த வீரர்கள்தான் இன்று அணி வகுத்து நிற்கிறோம். ஆனால் இன்றைய மாறுதல் - அதாவது சென்ற ஆண்டு நமது இயக்கத்தில் ஏற்பட்ட மாறுதல் நாமாகத் தேடிக் கொண்டதல்ல.

## கலைஞர் கடிதம்

செப்டம்பர் 17. . . . நாம் மறக்க முடியாத நாள் பெரியார் பிறந்த நாள். பெரியார் பிறந்த நாளும் - நாம் அவரை விட்டுப் பிரிந்த நாளும் அதுதான்! சிந்திய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மீண்டும் செயலில் இறங்கப் புறப்பட்ட நாள். அந்நாள் தோன்றி ஒரு ஆண்டு நிறையப்போகிறது. இந்த ஒரு ஆண்டில் நாம் போட்ட திட்டங்கள் எத்தனை - நாம் புரிந்த செயல்கள் எத்தனை - நாம் அடைந்த வெற்றிகள் எத்தனை - நாம் செய்யாமல் விட்டு விட்ட காரியங்கள் எத்தனை - என்பதை நன்றாகச் சிந்திக்க வேண்டும்.

பிரச்சாரக் குழு அமைத்தோம். சட்ட திட்டக் குழு அமைத்தோம். செயற்குழு அமைத்தோம். அமைப்புக் குழு அமைத்தோம், பொதுக்குழு அமைத்தோம். இந்த அமைப்புகள் எப்படியெப்படி வேலை செய்திருக்கின்றன என்பதை வரப்போகும் மாகாண மாநாட்டிலே நினைக்கத்தான் போகிறோம். நினைப்பின் விளைவு முழு நிம்மதியாக இருக்காது. ஏனெனில் நாம் செய்யாமல் விட்ட பணிகள் நிரம்ப உண்டு!

குறை சொல்லப் போகிறேன் என்று யாரும் கருத வேண்டாம். இயக்கம் குழந்தையென்பதும் - அதன் குரல்வளையைப் பிடித்துக் கொல்ல குள்ள நரிகள் சமயம் பார்த்திருப்பதும் யாரும் அறியாததல்ல. குழந்தை - ஓராண்டுக் குழந்தை - பேசிப் பாட வேண்டாம். ஆடியோட வேண்டாம். பாலாவது சாப்பிட்டு உடலைப் பலமாக்கிக் கொள்ள வேண்டாமா என்பதுதான் கவலை. 'குழந்தைக்குப் பாலுண்ண ஆசைதான் - கொடுப்பவர்கள் எங்கே?' என்று ஒரு குரல் கிளம்பலாம். அந்தத் தாய் வேலையைச் செய்ய வேண்டியவர்கள் இயக்கத்தின் முன்னணியினராக இருப்பவர்கள் மட்டுமல்ல - இயக்கத்தின் தொண்டர்களுங்கூடத்தான்.

ஒரே ஆண்டில் ஐந்நூறு கிளைகளை நிறுவியிருக்கிறோம். எந்த இயக்கமும் செய்து காட்ட முடியாத அரும்பெரும் செயல்! ஐந்நூறு கிளைகள். ஐம்பதுக்கு மேற்பட்ட பிரச்சாரக் காளையர்கள். அன்றாடம் கூட்டங்கள். மாவட்டந்தோறும் மாநாடுகள். இது தித்திப்பான செய்திதான். ஆனால் பூரண திருப்தியளிக்கக் கூடியதல்ல.

பல ஆண்டுகளாக இதைத்தான் செய்து பழக்கப்பட்டிருக்கிறோம். மேடைகள் அமைப்பதும் - பேச்சாளர்களை அழைத்து மேக மண்டலமதிரப் பேசச் செய்வதும் - அதன் விளைவாகப் பெரும் பகுதியினரை நம்மவராக்குவதும் தேவையற்ற வேலையென்று கூறவில்லை. நம் கொள்கையை கீதமாக்கிக் கொண்டவர்கள் - நம் பாதையில் நடந்து வரத் துணிந்தவர்கள் - நாலா பக்கங்களிலும் சிதறிக் - கிடக்கிறார்கள். அவர்களை இணைக்க முடியவில்லை. இணைக்கும் முயற்சி எடுத்துக் கொள்ளப்படவில்லை.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## புயலால் ஏற்பட்ட மிகப் பெரிய சேதங்களைச் சரிசெய்ய வேண்டியுள்ளது!

# நிவாரணத்துக்கு ரூ.12,659 கோடி வழங்கிட வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - ஒன்றியக் குழுவிடம் வலியுறுத்தல்!

**சென்னை, டிச.15-**

**மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட பாதிப்புகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட ஒன்றியக் குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுடன் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை நடத்தினார். மேலும் புயல் மழையால் ஏற்பட்ட பாதிப்புகளை சீர்செய்திட தற்காலிக நிவாரணத் தொகையாக 7,033 கோடி ரூபாயும், நிரந்தர நிவாரணத் தொகையாக 12,659 கோடி ரூபாயும் வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.12.2023) தலைமைச் செயலகத்தில், மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட கனமழையால் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட ஒன்றியக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

### கடும் மழை வெள்ளத்தால் பெரிதளவு ஏற்பட்ட சேதம்!

மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட கடுமையான மழைப்பொழிவின் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சி, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் பல்வேறு குடியிருப்பு பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்து, வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் பொதுமக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிப்பிற்குள்ளானது. மேலும் வரலாறு காணாத கனமழையின் காரணமாக, சாலை, பாலம், நீர்நிலை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் உட்கட்டமைப்புகளுக்கும் பெரிதளவு சேதம் ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது உத்தரவின் பேரில் மேற்கொள்ளப்பட்ட மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளின் காரணமாக, பாதிப்பிற்குள்ளான பகுதிகளில் மிக விரைவாக இயல்பு நிலை திரும்பியது.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (14.12.2023) தலைமைச் செயலகத்தில், மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட கனமழையால் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட ஒன்றியக் குழுவின் தலைவர், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ஆலோசகர் குணால் சத்யாத்ரி அவர்களிடம், மிக்ஜாம் புயல் பாதிப்புகள் மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்கான கோரிக்கை மனுவினை (Memorandum) அளித்தார். உடன் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஒன்றியக் குழு உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 5.12.2023 அன்று இந்தியப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், மிக்ஜாம் புயலின் தாக்கத்தினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சீரமைக்கவும், வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள பொது மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்கவும், தமிழ்நாட்டிற்கு உடனடியாக ரூ.5,060 கோடி நிதியை விடுவிக்குமாறும் கோரியிருந்தார்.

### ஒன்றிய அரசிடம் நிதி கோரிய முதல்வர்!

அதைத் தொடர்ந்து, ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் 7.12.2023 அன்று சென்னை வருகை தந்து, 'மிக்ஜாம்' புயல் பெருமழையால் ஏற்பட்ட பாதிப்புகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் தலைமைச் செயலகத்தில் ஆலோசனை மேற்கொண்டார். முதலமைச்சர் அவர்கள், மிக்ஜாம் புயலின் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளைத் தெரிவித்து இடைக்கால நிதி உதவி கோரும் கோரிக்கை மனுவினை அளித்து, தமிழ்நாட்டிற்கு உடனடியாக நிதியை விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் வெள்ளம் பாதித்த பகுதிகளை பார்வையிட வந்த ஒன்றிய அரசின் பல்துறை ஆய்வுக் குழு, 12.12.2023 மற்றும் 13.12.2023 ஆகிய நாட்களில் மழை, வெள்ளத்தால் ஏற்பட்ட

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 15-12-2023

# நாடாளுமன்றத்தையே காக்க முடியாதவர்கள்...

இந்தியாவின் புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை கடந்த மே 28 ஆம் தேதியன்று பிரதமர் நரேந்திரமோடி திறந்து வைத்தார். கடந்த 2019 ஆம் ஆண்டு இதற்கான கட்டுமானப் பணிகள் தொடங்கியது. அடிக்கல் நாட்டு விழாவை 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 10 அன்று பிரதமர் நரேந்திரமோடி நடத்தினார். 'இந்திய மக்கள் அமிர்தப் பெருவிழாவுக்காக ஒரு பரிசை வழங்கியுள்ளனர்' என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டார் பிரதமர்.

மூன்று நுழைவாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஞான துவார், சக்தி துவார், கர்ம துவார் என்றெல்லாம் பெயர் சூட்டினார்கள். புதிய கட்டடத்தின் மக்களவை அறையில் செங்கோல் வைக்கப்பட்டுள்ளது. 65 ஆயிரம் சதுர அடியில், பழைய நாடாளுமன்றக் கட்டடத்தை விட மூன்று மடங்கு பெரிதாகக் கட்டினார்கள். 940 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டது.

புதிய நாடாளுமன்றம் என்பது 140 கோடி மக்களின் பிரதிபலிப்பாகும் என்றும், இந்தியாவின் உறுதியை உலகுக்கு எடுத்துரைக்கும் நமது ஜனநாயகத்தின் கோவில் என்றும், இந்தியா அடிமை மனப்பான்மையை விட்டு கலையின் பழமையான பெருமையைத் தழுவி நிற்பதற்கு இந்த நாடாளுமன்றக் கட்டடம்தான் வாழும் உதாரணம் என்றும், இந்தக் கட்டடத்தின் ஒவ்வொரு துகளிலும் ஒரே பாரதம் உன்னத பாரதம் என்ற உணர்வை நாம் பெறுகிறோம் என்றும் சொல்லிக் கொண்டார்கள். இந்த அத்தனை பெருமைகளையும் கேள்விக்குள்ளாக்கிய, கேலிக்குள்ளாக்கிய நாளாக நேற்றைய தினம் அமைந்து விட்டது. நான்கு பேர் உள்ளே நுழைந்து கண்ணீர் புகையை வீசிவிட்டார்கள். இந்தியாவின் பாதுகாப்பை நினைத்து அனைவரது கண்களும் எரிகிறது.

2001 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்துக்குள் தீவிரவாதத் தாக்குதல் நடந்தபோதும் பா.ஜ.க.தான் ஆட்சியில் இருந்தது. இப்போதும் பா.ஜ.க.தான் ஆட்சியில் இருக்கிறது. 22 ஆண்டுகளுக்குப் பிறகு அதே நாளில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

நாடாளுமன்றத்துக்குள் செல்ல நான்கு கட்ட கடும் சோதனைகள் இருக்கும் நிலையில், தடை செய்யப்பட்ட பொருள்களுடன் மர்மநபர்கள் இரண்டு பேர் எப்படி நுழைந்தனர்?

நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல் நடந்த நினைவு நாளில், எவ்வாறு இப்படி ஒரு பாதுகாப்புக் குறைபாடு நடந்தது என்பதும் கேள்வியாக எழுந்துள்ளது. மர்மநபர்கள் இருவரும் காலணிக்குள் மறைத்து வைத்திருந்த புகைக் குண்டுகளை எடுத்து வீசியது, நாடாளுமன்ற கண்காணிப்பு கேமராக்களில் பதிவான காட்சிகள் மூலம் தெரிய வந்துள்ளது. திடீரென இரண்டு பேர் மக்களவைக்குள் குதித்ததைப் பார்த்த மக்களவை உறுப்பினர்கள், துரிதமாகச் செயல்பட்டு, அவர்கள் இருவரையும் மடக்கிப் பிடித்து அவைக் காவலர்களிடம் ஒப்படைத்ததால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. இல்லையென்றால், 2001 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நடைபெற்ற சம்பவம் போன்று மீண்டும் நடைபெற்றிருக்க வாய்ப்புள்ளதாகவும் எம்.பி.க்கள் கூறியுள்ளனர்.

மக்களவையின் பார்வையாளர்கள் மாடத்தில் அமர்ந்திருந்த இருவரும், திடீரென மக்களவைக்குள் குதித்து, 'சர்வாதிகாரம் ஒழிக' என்று கோஷம் எழுப்பி, வண்ணத்தை உமிழும் கண்ணீர் புகைக் கருவியை கையில் வைத்திருந்தபடி, நாடாளுமன்றத்துக்குள் புகுந்தனர்.

நாடாளுமன்ற வளாகத்துக்குள் செல்ல நுழைவு வாயிலில் செல்வதற்கு முதற்கட்ட சோதனை நடைபெறும். அதன்பிறகே, வரவேற்பறையிலேயே பார்வையாளர்களை புகைப்படம் எடுக்கப்பட்டு தனி அடையாள அட்டை வழங்கப்படும். புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை இருக்கிறதா என சோதிக்கப்படும். இவ்வாறு, நாடாளுமன்றத்துக்குள் ஒரு பார்வையாளர் நுழைய வேண்டும் என்றால் நான்கு கட்ட பாதுகாப்பு சோதனையைக் கடக்க வேண்டும். ஒவ்வொரு கட்டத்திலும் மெட்டல் டிடக்டர், மற்றும் ஸ்கேனர் சோதனை நடத்தப்படும்.

**இவ்வாறு நாடாளுமன்றத்தில் அவைக்குள் பார்வையாளர்களாக நுழைய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பரிந்துரைக் கடிதம் அவசியம், இந்தப் பரிசோதனைகளின்போது அந்தக் கடிதமும் சோதனை செய்யப்படும். இரண்டாவதாக நாடாளு மன்றத்தின் வரவேற்பறையில் பார்வையாளராக நுழைபவரின் பெயர், முகவரி, அடையாள அட்டை, எம்.பி.யின் பரிந்துரைக் கடிதம் அனைத்தும் சரிபார்க்கப்படும். பிறகு மக்களவை மற்றும் மாநிலங்களவைக்குள் நுழைவதற்கான இடத்தில் மூன்றாம் கட்டமாக சோதனை நடத்தப்பட்டு, நான்காம் கட்டமாக ஒவ்வொரு அவைக்குள்ளும் தனித்தனியாக சோதனை நடத்தப்படும். இவ்வாறு நான்கு கட்ட சோதனையைத் தாண்டித்தான் ஒருவர் நுழைய முடியும் என்பதால், தடை செய்யப்பட்ட பொருள்களுடன் இருவர், மக்களவைக்குள் எவ்வாறு நுழைந்தனர் என்பது இதுவரை பதில் கிடைக்காத கேள்வியாக உள்ளது. நாடாளுமன்றத்தில் பாதுகாப்புக் குறைபாடே இதற்குக் காரணம்.**

**கேட்டால், 'இது ஆபத்தான புகைக் குண்டு அல்ல' என்கிறார் சபாநாயகர் ஓம் பிர்லா. இந்தச் சொல்லைத் தான் பயன்படுத்தலாம், இதனைப் பயன்படுத்தக் கூடாது என்று பிரிக்கும் அளவுக்கு - வீசப்படத் தகுதியானது, வீசப்பட்ட தகுதியற்றது என்ற பகுப்பு குண்டுகளில் இருக்கிறதா? சபாநாயகர்தான் சொல்ல வேண்டும்.**

'சம்பவம் நடந்த போது பாதுகாவலர்கள் உள்ளே இல்லை' என்கிறார் சபாநாயகர். உள்ளே இல்லாதவர்களை பாதுகாவலர்களாக எப்படிச் சொல்ல முடியும்?

கோவையில் கார் சிலிண்டர் வெடித்தபோது, 'தமிழ்நாட்டை தீவிரவாதிகளின் புகலிடம்' என்று பரப்பிய பா.ஜ.க.வினர் இப்போது எங்கே போனார்கள்? கவர்னர் மாளிகை இருக்கும் சாலையில் பெட்ரோல் பாட்டில் வீசப்பட்டதை தேசிய முகமைதான் விசாரிக்க வேண்டும் என்றார்களே, நாடாளுமன்றத்தில் கண்ணீர் புகை வீசப்பட்டதை யார் விசாரிப்பது, ஐ. நா.சபையா? இண்டர்போலா? உலகநீதிமன்றமா?

**நாடாளுமன்ற வளாகத்துக்குள்ளேயே கண்ணீர் புகை வீச்சு என்பது ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு அவமானம் ஆகும். நாடாளு மன்றத்தின் பாதுகாப்பையே கோட்டை விட்டு விட்டார்கள். இதன் மூலமாக நாட்டின் பாதுகாப்பை கேள்விக்குள்ளாக்கி விட்டார்கள். நாடாளு மன்றத்தையே காக்க முடியாத பா.ஜ.க. ஆட்சிதான் நாட்டையும் நாட்டு மக்களையும் காக்கப் போகிறதா?**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (14.12.2023) தலைமைச் செயலகத்தில், மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட கனமழையால் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட ஒன்றிய குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார். இக்கூட்டத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 'மிக்ஜாம்' புயலால் பாதிக்கப்பட்ட சிறுவணிகர்கள், வர்த்தகர்கள்

# கடனை திருப்பிச் செலுத்த கால அவகாசம் வழங்கிடுக!

## ஒன்றிய நிதியமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, டிச. 15 -**

**"மிக்ஜாம்" புயலினால் பாதிக்கப்பட்ட சிறு வணிகர்கள், வர்த்தகர்கள் மற்றும் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் கடன் தொகையினைத் திருப்பிச் செலுத்தும் கால அட்டவணையை மூன்று மாதங்களுக்குத் தளர்த்திடக் கோரி, ஒன்றிய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழ்நாட்டில் "மிக்ஜாம்" புயல் வெள்ளத்தால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் பாதிக்கப்பட்டோர் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் கால அவகாசம் வழங்கிடக் கோரி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களுக்கு நேற்று (14.12.2023) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், "மிக்ஜாம்" புயலினால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் வசிக்கும் 37 இலட்சம் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதோடு, அவர்களது உடைமைகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களின் இயல்புநிலையை மீட்டெடுக்க முடிந்த நிலையிலும், அவர்களின் வாழ்வாதாரத்தின் மீதான தாக்கம் இன்னும் தொடர்வதாகவும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிறு வணிகர்கள், வர்த்தகர்கள் மற்றும் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் இன்னும் தங்கள் வழக்கமான பொருளாதார நடவடிக்கைகளுக்கு திரும்பவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

புயல் பாதிப்பிற்குள்ளான பலர் / வணிக நிறுவனங்கள் பல்வேறு நோக்கங்களுக்காக வங்கிகளில் கடன்களைப் பெற்றுள்ள நிலையில், தங்களது நிலுவைத் தொகையைத் திருப்பிச் செலுத்த முடியாமல் தற்போது தவிக்கின்றனர் என்றும், இந்த நெருக்கடியில் இருந்து அவர்கள் மீண்டு வரும் வரை கடனைத் திருப்பிச் செலுத்தும் கால அட்டவணைகளைத் தளர்த்திட வேண்டிய அவசரத் தேவை உள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், அனைத்து வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், அகில இந்திய நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனங்கள் வழங்கியுள்ள அனைத்து காலக் கடன்களுக்கும், 2023 டிசம்பர் 1 முதல் 2024 பிப்ரவரி 29 வரை தவணைத் தொகையைச் செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து, கடன் தவணையையும், வட்டியையும் செலுத்துவதில் மூன்று மாதங்கள் ஒத்திவைக்க அனுமதிக்கப்படலாம் எனத் தெரிவித்துள்ளார்.

எனவே, பிரச்சினையின் அவசரத்தை கருத்தில் கொண்டு, இந்த விஷயத்தில் ஒன்றிய நிதியமைச்சர் அவர்கள் தனிப்பட்ட முறையில் தலையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களின் திருப்பிச் செலுத்தும் சுமையைக் குறைக்கும் வகையில், தேவையான உத்தரவுகளை உடனடியாகப் பிறப்பிக்குமாறு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

### இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட

# 45 மீனவர்களை உடனே விடுவிக்க நடவடிக்கை எடுத்திடுக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சரிடம் வலியுறுத்தல்!

**சென்னை, டிச. 15 -**

**இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, இலங்கை வசமுள்ள 45 மீனவர்கள் மற்றும் 138 மீன்பிடிப் படகுகளை உடனடியாக விடுவித்திட உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

இலங்கைக் கடற்படையினரால் 13.12.2023 அன்று 6 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் கோரி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.12.2023) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், புதுக்கோட்டை மாவட்டம், ஜெகதாப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தைச் சேர்ந்த 6 மீனவர்கள், INDTN08MM26 என்ற பதிவு எண் கொண்ட இயந்திரப் படகில் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், அவர்களது மீன்பிடிப் படகுடன் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், கடந்த ஒரு வாரத்தில் இலங்கைக் கடற்படையினரால் மீனவர்கள் கைது செய்யப்படுவது இது மூன்றாவது சம்பவம் என கவலைபடத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்து நமது மீனவர்களின் பாரம்பரிய உரிமைகளை மீறும் வகையில் இதுபோன்று கைது நடவடிக்கையில் ஈடுபடுவதால், மீனவர்களின் வாழ்வாதாரம் பெருமளவில் பாதிக்கப்படுவதுடன், மீனவர்களின் வாழ்வில் பெருத்த அச்சத்தையும், பீதியையும் ஏற்படுத்துவதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இந்த ஆறு மீனவர்கள் தவிர்த்து, ஏற்கெனவே 39 மீனவர்களும், 137 படகுகளும் இலங்கை வசம் காவலில் உள்ளதாக தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இதில் உடனடியாகத் தலையிட்டு, இலங்கை வசமுள்ள 45 மீனவர்கள் மற்றும் 138 மீன்பிடிப் படகுகளை உடனடியாக விடுவித்திடத் தேவையான தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு குளறுபடி!

# ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா பதவி விலக வலியுறுத்தல்!

## எம்.பி.க்கள் 15 பேர் நீக்கம்! இரு அவைகளும் ஒத்திவைப்பு!

*புதுடெல்லி, டிச. 15-*

*நாடாளுமன்ற பாதுகாப்பு குளறுபடி விவகாரத்தில், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா பதவி விலக வலியுறுத்தி காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் முழக்கமிட்டனர். இதனால் நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.*

*நாடாளுமன்றத்திற்குள் அத்துமீறி நுழைந்த 2 பேர் புகைக் குண்டுகளை வீசிய சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என்று காங்கிரஸ், தி.மு.க உள்ளிட்ட கட்சிகள் ஒத்தி வைப்பு நோட்டீஸ் அளித்து இருந்தனர். இந்நிலையில் நேற்று காலை மக்களவை கூடியதும் நாடாளுமன்ற பாதுகாப்பு குளறுபடி விவகாரத்தில் உள்துறை அமைச்சர் அமித்ஷா பதிலளிக்க வேண்டும் என்றும், அவர் பதவி விலக வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. ஆனால் இந்த விவகாரத்தில் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் விளக்கம் அளித்தார். இதனை ஏற்க மறுத்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒன்றிய அமைச்சர் அமித்ஷா, விளக்கம் அளிக்க வலியுறுத்தி தொடர்ந்து முழக்கங்களை எழுப்பினர். இதனையடுத்து மக்களவையை பிற்பகல் 2 மணி வரை சபாநாயகர் ஓம் பிர்லா ஒத்தி வைத்தார்.*

*மாநிலங்களவையிலும் நாடாளுமன்ற பாதுகாப்பு விவகாரத்தை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்பினர். பாதுகாப்பு குளறுபடி குறித்து உடனடியாக விவாதம் நடத்த வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. ஆனால் இதற்கு அவைத்தலைவர் அனுமதி மறுத்ததால் அவையின் மையப்பகுதிக்குச் சென்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து முழக்கங்களை எழுப்பினர். இதனால் நண்பகல் 12 மணி வரை அவை ஒத்திவைக்கப்பட்டது. அவை 12 மணிக்கு கூடிய போதும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி முழக்கம் எழுப்பியதால், பிற்பகல் 2 மணிவரை அவை ஒத்திவைக்கப்பட்டது.*

*இதையடுத்து மக்களவை 2 மணிக்கு பிறகு மீண்டும் கூடியது. அப்போதும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தொடர்ந்து முழக்கமிட்டனர். இதனால் கனிமொழி கருணாநிதி, எஸ்.ஆர்.பார்த்திபன் மற்றும் ஜோதிமணி உட்பட காங்கிரஸ் எம்.பி.க்கள் 5 பேர் மக்களவையில் இருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர். ரம்யா ஹரிதாஸ், டி.என்.பிரதாபன், ஹிபி இடன் ஆகியோரை மக்களவையில் இருந்து நடப்பு கூட்டத் தொடர் முழுவதும் சஸ்பெண்ட் செய்து சபாநாயகர் ஓம்பிர்லா உத்தரவிட்டார். இதே போல் மாநிலங்களவையில் திரிணாமுல் காங்கிரஸ் எம்பி டெரிக் ஓ பிரையன், அவையின் மைய பகுதிக்கு வந்து தொடர்ந்து முழக்கமிட்டார். அவரை நடப்பு குளிர்கால கூட்டத்தொடர் முழுவதிலும் இருந்து சஸ்பெண்ட் செய்து துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர் உத்தரவிட்டார். எதிர்க்கட்சிகளின் தொடர் அமளியால் நாடாளுமன்றம் முடங்கியது.*

*இதனிடையே, நாடாளு மன்ற பாதுகாப்பு குறைபாடு குறித்து இருஅவைகளிலும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தொடர் முழக்கங்கள் எழுப்பிய நிலையில், இது குறித்து விளக்கம் அளிக்க பிரதமர்நரேந்திரமோடியோ ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவோ நாடாளுமன்றத்திற்கு வரவில்லை.*



சென்னை, தலைமைச் செயலகத்தில், நேற்று (14.12.2023) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நெடுஞ்சாலைத்துறையில், பணியின்போது மறைந்த ஈப்பு ஒட்டுநர், சாலைப் பணியாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில், 10 கோட்டங்களில் பணி நியமனத்திற்கு தெரிவு செய்யப்பட்ட, 2 இளநிலை உதவியாளர்கள் மற்றும் 8 அலுவலக உதவியாளர்கள் பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் நெடுஞ்சாலைத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், நெடுஞ்சாலைகள் துறை தலைமைப் பொறியாளர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

## புயல் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட – தகுதியுள்ள

# அனைவருக்கும் ரூ.6 ஆயிரம் நிச்சயம் வழங்கப்படும்!

## மணவிழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, டிச. 15 –**

**சென்னை கிழக்கு மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினரும் – மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவருமான அம்பத்தூர் பி.கே.மூர்த்தி இல்லத் திருமணத்தை, நேற்று காலை, சென்னை – எழும்பூர், இராணி மெய்யம்மை ஹாலில் தலைமையேற்று நடத்தி வைத்து உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட, தகுதியுள்ள அனைவருக்கும், அரசின் நிவாரணத் தொகையான ரூ.6 ஆயிரம் நிச்சயம் வழங்கப்படும்" என்று உறுதியளித்தார்.**

கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.12.2023) தலைமைச் செயற்குழு உறுப்பினரும், அம்பத்தூர் மண்டல குழுத் தலைவருமான பி.கே.மூர்த்தி அவர்களது இல்லத் திருமண விழாவில் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:-

பி.கே.மூர்த்தி – திருமதி ஷீலா தம்பதியரின் அருமை மகன் அபிஷேக் மூர்த்தி அவர்களுக்கும் மணிமாறன் – திருமதி இந்திரா தம்பதியரின் மகள் டாக்டர் மனோதர்ஷினி அவர்களுக்கும் நம்முடைய அன்பான வாழ்த்துகளோடு இந்த மணவிழாநிகழ்ச்சிநிறைவேறியிருக்கிறது.

இந்த மணவிழா நிகழ்ச்சியில் நானும் பங்கேற்று, மணவிழாவை நடத்தி வைத்து, அதேநேரத்தில் மணமக்களை வாழ்த்தக்கூடிய ஒரு சிறப்பான வாய்ப்பைப் பெற்றமைக்கு மகிழ்ச்சி அடைகிறேன். வாய்ப்பினை உருவாக்கி தந்திருக்கக்கூடிய மணக்கோலம் பூண்டிருக்கக்கூடிய மணமக்களுக்கும், மணமக்களுடைய பெற்றோர்களுக்கும், உற்றார் உறவினர்களுக்கும், குறிப்பாக இந்தத் திருமணத்திற்குக் கட்டாயம் வந்திட வேண்டும் என்று நம்முடைய சேகர் பாபு அவர்கள் என்னை வலியுறுத்தி இதில் பங்கேற்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தமைக்காக அவருக்கும் மற்ற அனைவருக்கும் நான் முதலில் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

**இயக்கப் பணி மட்டுமல்ல; பொதுப் பணிகளையும் சிறப்பாக ஆற்றி வருபவர் மூர்த்தி!**

நம்முடைய அருமை சகோதரர் மூர்த்தி அவர்களைப் பற்றி வாழ்த்தி உரையாற்றி இருக்கக்கூடிய அனைவரும் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். முதன்முதலில் 1993ஆம் ஆண்டு மூர்த்தி அவர்கள் இளைஞரணியில் தன்னை இணைத்துக்கொண்டு, கழகப் பணியை ஆற்றத் தொடங்கி, அதற்கு பின்னால் அம்பத்தூர் நகராட்சியில் வட்டச் செயலாளராகப் பொறுப்பேற்று, பணியாற்றி, மூன்று முறை மாவட்ட கழகப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அம்பத்தூர் பகுதியில் மாமன்ற உறுப்பினராகவும் தேர்வு செய்யப்பட்டு, அதேபோல, விசாகப்பட்டின துறைமுக பொறுப்புக்குழு உறுப்பினராகவும் இருந்து செயலாற்றி, இன்றைக்கு 80ஆவது வார்டு கவுன்சிலராகவும், அம்பத்தூர் பகுதியின் ஏழாவது மண்டலக் குழுத் தலைவராகவும் அவர் சிறப்பாக இயக்கப் பணியை, இயக்கப்பணி மட்டுமல்லாமல், பொதுப் பணிகளை, மக்களுக்கு ஆற்றவேண்டிய பணிகளை மிகச் சிறப்பாக ஆற்றிக் கொண்டிருக்கிறார்.

எப்படி மூர்த்தி அவர்கள் தன்னுடைய கடமையை ஆற்றிக் கொண்டிருக்கிறாரோ, அதேபோல, அவருடைய அருமை மகன் அபிஷேக் மூர்த்தி அவர்கள், மக்களுக்காக நியாயம் கிடைக்க வேண்டும் என்பதற்காக, நீதி கிடைக்கவேண்டும் என்பதற்காக வழக்கறிஞராகத் தன்னுடைய கடமையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.

மணமகன் ஒரு வழக்கறிஞர், மணமகள் மனோதர்ஷினி ஒரு மருத்துவர். வழக்கறிஞருக்கு, மருத்துவருக்கு நான் அறிவுரைகளை, ஆலோசனைகளைச் சொல்லவேண்டிய அவசியமில்லை. யாருக்காவது உடல்நலம் பாதிக்கப்பட்டால், அந்த பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய மக்களுக்குத் தொண்டாற்றக்கூடிய பணி, மணமகளாக இருக்கக்கூடிய மனோதர்ஷினி அவர்களுக்கு. அதேபோல யாருக்காவது நியாயம் கிடைக்கவில்லை, நீதி கிடைக்கவில்லை என்று சொன்னால், அதற்காக வாதாடக்கூடிய, போராடக்கூடிய இடத்திலிருந்து அந்தப் பணியை ஆற்றக்கூடியவர் நம்முடைய மணமகன் அபிஷேக் மூர்த்தி அவர்கள். இருவரும் பொருத்தமாகத்தான் சேர்ந்திருக்கிறார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.12.2023) சென்னையில், அம்பத்தூர் மண்டலக் குழுத் தலைவர் மூர்த்தி அவர்களின் மகனும் அரசு வழக்கறிஞருமான அபிஷேக் மூர்த்தி – டாக்டர் எம்.மனோதர்ஷினி ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன் இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜோசப் சாமுவேல், தாயகம் கவி, இ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

**கோடிக்கணக்கான குடும்பங்களுக்கான கலங்கரை விளக்குதான் தி.மு.கழகம்!**

இன்றைக்கு பி.கே.மூர்த்தி அவர்கள் மட்டும் திராவிட இயக்கத்தில் இருக்கக்கூடியவர் அல்ல, மணமகளாக வீற்றிருக்கக்கூடிய மனோதர்ஷினி அவர்களுடைய தந்தை மணிமாறன், அவரும் திராவிட இயக்கத்தில் பற்றுள்ளவர். திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கக்கூடியவர். இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், மணிமாறன் அவர்களுடைய திருமணத்தை 1994ஆம் ஆண்டு மதுரையில் நான்தான் நடத்தி வைத்திருக்கிறேன். இப்போது மூர்த்தியின் மகனுக்கும், மணிமாறனின் மகளுக்கும் இந்தத் திருமணத்தை நடத்தி வைக்கிறேன். இந்த மணமக்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைகளுக்கும் நான்தான் திருமணம் நடத்தி வைப்பேன். அவர்களுக்குப் பிறக்கக்கூடிய கொள்ளுப் பேரன், பேத்திகளாக இருந்தாலும் அவர்களுக்கும் நான் நடத்தி வைக்கக்கூடிய வாய்ப்பு எனக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

எதற்காக இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், குடும்பம் குடும்பமாக இந்த இயக்கத்தில் இருக்கிறார்கள். குடும்பம், குடும்பம் என்று சொன்னால், அதை வைத்து ஒரு அரசியல் செய்வார்கள்.

## அனைத்துத் தரப்பு மக்களுக்கும் எப்போதும் பாகுபாடின்றி துணை நிற்கும் தி.மு.கழகம்!

குடும்பம் இருப்பவர்கள்தான் குடும்பத்தைப் பற்றி கவலைப்படுவார்கள். இது கழகக் குடும்பம். அதனால்தான் அண்ணா அவர்கள் கழகத்தில் இருக்கக்கூடிய தோழர்களைத் தம்பி என்று அழைத்தார். அதைத் தொடர்ந்து நம்முடைய கலைஞர் அவர்கள் நம்முடைய தோழர்களை பார்த்து உடன்பிறப்பு என்று அழைத்தார். அதாவது, தம்பி உண்டு, அண்ணன் உண்டு, தங்கை உண்டு, அக்கா உண்டு, மாமா உண்டு, மாமி உண்டு என்று உடன்பிறப்புகள் என்று அழைத்தார் கலைஞர் அவர்கள். கோடிக்கணக்கான குடும்பங்களுக்கு இருக்கக்கூடிய ஒரு கலங்கரை விளக்குதான் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை மறந்துவிடக் கூடாது.

அண்மையில் பெய்த மழை கிட்டதட்ட 47 வருடங்களாகப் பார்க்க முடியாத, வரலாறு காணாத அளவிற்கு பெய்திருக்கக்கூடிய மழை. அந்த மழை வருவதற்கு 4 நாட்களுக்கு முன்பே எச்சரிக்கை செய்தார்கள். ஆனால் எச்சரிக்கை செய்தது எல்லாம் மீறி இதுவரை 47 வருடங்களாகப் பார்க்காத மழையை நாம் பார்த்தோம். எப்போதும், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும் ஆட்சியில் இருந்தாலும் சரி, இல்லையென்றாலும் சரி மக்களுக்காகப் பாடுபடக்கூடிய கட்சி. நாம் பலமுறை ஆட்சியில் இருந்திருக்கிறோம். பலமுறை ஆட்சியில் இல்லாமல் இருந்திருக்கிறோம். ஆட்சியில் இருக்கும் போது இப்படிப்பட்ட பேரிடரைச் சந்தித்திருக்கிறோம். ஆட்சியில் இல்லாத நேரத்தில் சந்தித்திருக்கிறோம்.

**கொரோனா காலத்தில் கொடுமையான சூழ்நிலை!**

ஆட்சியில் இருக்கின்ற நேரத்திலாவது, அந்த அதிகாரம், அந்த வசதிகள், மீட்பு நேரத்தில் ஈடுபடக்கூடிய கருவிகள், அவை கள் எல்லாம் நமக்கு சுலபமாகக் கிடைத்துவிடும், அதைப் பயன்படுத்தி, அந்தப் பணிகளை எல்லாம் நிறைவேற்றிக் கொள்ள முடியும். ஆனால் ஆட்சியில் இல்லாத நேரத்தில், நாம் சந்தித்த பேரிடரில் எப்படியெல்லாம் அந்தக் களத்தில் இறங்கியிருந்தோம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். உதாரணமாக, கொரோனா என்ற கொடிய நோய் வந்தது. அந்தக் கொடிய நோய் வந்தபோது எவ்வளவு பேரை இழந்தோம். எப்படிப்பட்ட கொடுமைகளுக்கெல்லாம் ஆளாக்கப்பட்டோம். பொருளாதாரம் எந்தளவுக்குச் சீர்குலைந்து போனது. வெளியில் நடமாட முடியாத நிலை. வீட்டை விட்டு வெளியே வரமுடியாத நிலை. தொழிலுக்குப் போகமுடியவில்லை, வேலைக்குப் போகமுடியவில்லை, பள்ளிக்கூடத்திற்கு போகமுடியவில்லை. கடைக்குச் சென்று உணவு வாங்குவதற்கான அந்த வசதி கூட இல்லாத ஒரு கொடுமையான சூழ்நிலை. அந்த நேரத்தில், அரசாங்கம் என்ன செய்யவில்லை, என்ன செய்திருக்கவேண்டும், அதைப் பற்றியெல்லாம் பேச நான் விரும்பவில்லை. இப்போது அது தேவையில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு எதிர்க்கட்சியாக இருக்கும்போது, "ஒன்றிணைவோம் வா" என்ற தலைப்பில் ஒரு அறிவிப்பு வெளியிட்டு, அந்த ஒன்றிணைவோம் வா என்ற திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய மக்களுக்கு, வாழ்வாதாரத்தை இழந்து தவித்துக் கொண்டிருக்கக்கூடிய அந்த மக்களுக்கு உண்ண உணவு, இருப்பதற்கு இருப்பிடம், உடுக்க உடை, மருத்துவ வசதி, தேடித் தேடிச் சென்று அவர்களைத் தொடர்பு கொண்டு நாமாக முன்கூட்டியே தேடித் தேடிச் சென்று அவர்களுக்கு வேண்டிய வசதிகளை எல்லாம் செய்த கட்சிதான் இன்றைக்கு கம்பீரமாக சொல்லமுடியும் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் இயக்கம்.

**பெரும் வெள்ளத்திலிருந்து சென்னையை மீட்டுள்ளோம்!**

இங்கே குறிப்பிட்டுப் பேசினார்கள், ஏற்கனவே, 2015ஆம் ஆண்டு ஒரு வெள்ளம் வந்தது. அதனால் நான் அதிகம் பேச விரும்பவில்லை. அப்போது அம்மையார் ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். அப்போதும் எச்சரிக்கை விடப்படுகிறது. செம்பரம்பாக்கம் ஏரி நிரம்பியது. செம்பரம்பாக்கம் ஏரியை நிரம்பவிடக் கூடாது. அப்படி ஒரு

> **தமிழ்நாட்டு மக்களுக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இல்லாத நேரத்திலும் சரி, இப்போது ஆட்சியில் இருக்கின்ற நேரத்திலும் சரி எப்படி துணை நிற்கிறதோ, அது தொடர்ந்து நிற்கும். அதில் எந்தவித மாற்றமும் கிடையாது.**

சூழ்நிலை வருகின்றபோது கொஞ்சம் கொஞ்சமாக தண்ணீரைத் திறந்து அதை வெளியேற்றினால்தான் ஆபத்தைத் தடுக்கமுடியும், வெள்ளத்தைத் தடுக்கமுடியும். அதனைத் திறந்து விடுவதற்கு அரசிடம் அனுமதி வாங்க வேண்டும். அரசு நடத்தக்கூடியவர் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த அம்மையார் ஜெயலலிதா அவர்கள். அவரிடத்தில் அனுமதி கேட்கக்கூட அதிகாரிகள் பயந்தார்கள். அப்படி ஒரு கொடுமையான நிலை அன்றைக்கு இருந்தது. அதிகாரிகள் சென்று அனுமதி கேட்டுக் கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீரை திறந்துவிட்டிருந்தால் அந்த ஆபத்து நிச்சயமாக வந்திருக்காது. நூற்றுக்கணக்கானவர்களை அன்றைக்கு நாம் இழந்தோம். இன்னும் சிலவற்றிக்குக் கணக்கே இல்லை. அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டது. ஆனால் அதைவிட மோசமான நிலையில், வரலாற்றிலேயே காணமுடியாத இந்தச் சூழ்நிலையில் செம்பரம்பாக்கம் ஏரியை நிரம்பவிடாமல், கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீரைத் திறந்துவிட்டு, சென்னை சந்திக்க இருந்த ஒரு பெரும் வெள்ளத்திலிருந்து மீட்ட அரசுதான் நம்முடைய திராவிட மாடல் அரசு என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

இப்போது வந்த மழையில் அரசு வரிந்துகட்டிக் கொண்டு முனைப்போடு, பல நலத் திட்ட உதவிகளை, நிவாரணப் பணிகளில் எப்படியெல்லாம் ஈடுபட்டது என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். அதற்கு ஈடாக நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட கட்சி எது என்றால், அது நம்முடைய கட்சி. அனைத்து அமைச்சர்களும் வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்றார்கள். அனைத்து சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அத்தனை தோழர்கள் அத்தனை பேரும், மாவட்டச் செயலாளர்கள், ஒன்றியச் செயலாளர்கள், பகுதிச் செயலாளர்கள் அத்தனை பேரும் சென்றிருந்தார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்குத் துணை நின்றார்கள். கை கொடுத்தார்கள். அதனால்தான் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டது என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

ஆனால், அன்றைக்குப் பலர் உதவி செய்கிறோம் என்று சொல்லி, அந்த உதவிப் பொருட்களை எல்லாம் வேன், லாரி, பஸ்ஸின் மூலமாக அனுப்பி வைத்தார்கள். அதில் அனுப்பி வைக்கும்போது கூட அம்மையார் ஜெயலலிதா அவர்களின் ஸ்டிக்கரை அ.தி.மு.க. என்று ஒட்டி அனுப்பி வைத்தார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் கட்சிப் பாகுபாடில்லாமல், யாராக இருந்தாலும் அவர்களுக்குத் துணை நின்ற ஒரு கட்சியாக, துணை நின்ற ஒரு ஆட்சியாக இன்றைக்கு கழகம் விளங்கிக் கொண்டிருக்கிறது.

**தகுதியுள்ள அத்தனை பேருக்கும் ரூ.6000 வழங்கப்படும்!**

பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய மக்களுக்குக் குறிப்பாகச் சென்னையைப் பொறுத்தவரையில் முழுமையாகவும், சென்னையை ஒட்டியுள்ள, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் எங்கெங்கு பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய அந்தப் பகுதிகளுக்கு, யார் பாதிக்கப்பட்டிருந்தாலும் அத்தனை பேருக்கும் நிச்சயமாக, உறுதியாக 6000 ரூபாய் வழங்கப்படும். எப்படி மகளிர் உரிமைத் தொகையை தகுதியுள்ளவர்கள் அத்தனை பேருக்கும் 1000 ரூபாய் வழங்கப்படும் என்ற அறிவித்து, அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோமோ, அதேபோல இந்த 6000 ரூபாய் தகுதியுள்ள அத்தனை பேருக்கும் நிச்சயமாக, உறுதியாக வழங்கப்படும் என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, இப்போது கூட நான் சீக்கிரமாகச் செல்லவேண்டும். ஒன்றிய அரசிடமிருந்து ஒரு குழு வந்திருக்கிறது. மூன்று நாட்களாக வெள்ளம் பாதித்த பகுதிகளுக்குச் சென்று ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். மூன்று நாட்களாக ஆய்வு செய்து கொண்டிருக்கக்கூடிய அதிகாரிகள் கூட, நீங்கள் பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் பார்த்திருப்பீர்கள். இந்த வெள்ளச் சேதத்தை மிக சாமர்த்தியமாகத் தமிழ்நாடு அரசு கையாண்டிருக்கிறது. அரசியல் ரீதியாக ஒன்றிய அரசோடு எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கலாம். ஆனால் அதையெல்லாம் மறந்து ஒன்றிய அரசிடமிருந்து இங்கு வந்து ஆய்வு செய்திருக்கக்கூடிய அதிகாரிகள் அத்தனை பேரும் தமிழ்நாடு அரசை மனதாரப் பாராட்டியிருக்கும் செய்தியை நாம் பார்க்கிறோம். இன்றைக்கு இன்றுடன் முடித்து கிடையாக, காலை 11.15 மணிக்கு என்னைச் சந்திக்கக் கோட்டைக்கு வரவிருக்கிறார்கள். அவர்களுடன் நானும் கலந்து பேசவிருக்கிறேன். எப்படி தமிழ்நாட்டு மக்களுக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இல்லாத நேரத்திலும் சரி, இப்போது ஆட்சியில் இருக்கின்ற நேரத்திலும் சரி எப்படி துணைநிற்கிறதோ, அது தொடர்ந்து நிற்கும். அதில் எந்தவித மாற்றமும் கிடையாது என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, இன்றைக்கு மணக்கோலம் பூண்டிருக்கக்கூடிய மணமக்கள் வாழ்க்கையில் எல்லா நன்மைகளும் பெற்றுச் சிறப்போடு வாழவேண்டும்.

புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லியிருக்கும் "வீட்டிற்கு விளக்காக... நாட்டிற்குத் தொண்டர்களாய்" இருந்து வாழுங்கள்... வாழுங்கள். அதே நேரத்தில், ஒரு பணிவான வேண்டுகோள் அல்ல, ஒரு கண்டிப்பான வேண்டுகோள்.

மணமக்களான உங்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, உங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள், சூட்டுங்கள், என்று கேட்டு, வாழ்க மணமக்கள்... வாழ்க மணமக்கள்... விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# அன்று கண்டதும்; இன்று காண்பதும் அதே நிலா !

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

ஐந்நூறு கிளைகள். அந்தக் கிளைகளுக்கும் மத்திய கழகத்திற்கும் தொடர்பு அறுந்துதான் போயிருக்கிறது. ஒரு திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்றால் - அந்தத் திட்டம் தீட்டப்பட்ட பிறகு . . மத்தியக் கழகத்திலிருந்து மாவட்டக் கழகத்திற்குச் சென்று, மாவட்டக் கழகம், கிளைக் கழகங்களுக்கு அறிவித்து கிளைக்கழகம், அளிக்கப்பட்ட கட்டளையை நிறைவேற்ற வேண்டுமென்று ஏற்பாடு இருக்கிறது. ஆனால் முறைப்படி நடக்கவில்லை. தலைமைக் கழகம் ஒரு சங்கிலியின் பதக்கமாகவும் கிளைகள் முத்துக்களாகவும் கோக்கப்படவில்லை. இந்தக் குறையை விரைவில் களைய வேண்டும். இந்த இணைப்பு உறுதியாக இருந்தால்தான் கிளைக் கழகத்தின் சந்தேகங்கள் - சச்சரவுகள் - நடவடிக்கைகள் இவைகளை நல்ல முறையில் சீர்படுத்தி இயக்கத்தைச் செழிப்பாக்க முடியும். பிரச்சாரக் குழு மட்டும் வேலை செய்து பயன் இல்லவே இல்லை. சென்ற ஆண்டு போட்ட திட்டங்கள் அனைத்தும் செயல்முறைக்கு வந்தாக வேண்டும்.

நாம் வளர்ந்திருக்கிறோம். வளர்ந்து கொண்டே போகிறோம். அதற்கும் ஒரு கட்டுப்பாடு - ஒழுங்கு - நியதி வேண்டுமென்பதுதான் பிரச்சினை.

ஒருவனுக்கு லட்சம் லட்சமாய் பணம் வருகிறது. அவனும் கணக்கு வழக்கின்றி செலவு செய்கிறான். செலவுக்கு கட்டுப்பாடுமில்லை - கணக்குமில்லை. கடைசியாக ஒருநாள் அவன் சம்பாதித்தது எவ்வளவு என்று கணக்குப் போட்டு விஷயம் புரியாமல் கலங்கித் தவிக்கிறான். அந்தப் பணக்காரன் நிலைமை இயக்கத்திற்கு வரக் கூடாது, வர விடக் கூடாது.

கல்லடியும் சொல்லடியும் பட்ட காலத்திலே கரையாத இயக்கம் - பணக்காரர்களின் செல்வாக்கென்ற ஈட்டிகள் எறியப்பட்ட நேரத்திலே இறந்து போகாத இயக்கம் - மடாதிபதிகளின் எதிர்ப்பு, மகந்துகள் ஜீயர்களின் கொதிப்பு இவைகளால் மாண்டு போகாத இயக்கம் - பதவியும் பட்டமுமே தேவை என்பவர்களின் பாசக் கயிற்றிலிருந்து விடுபட்ட இயக்கம் - சொந்த வாழ்வும் சுயநலமுமே பெரிதென்போரின் பிடியிலிருந்து தப்பிய இயக்கம் - கொள்கைக்காக வாழ்ந்த நாகை மணியை, மாயவரம் நடராசனை, ஆரூர் இராமனை, அழகிரிசாமியை அணைத்திருந்த இயக்கம் - மொழிக்காக உயிர்விட்டதாளமுத்துநடராசன்களைக் கொண்டிருந்த இயக்கம் - கொள்கைக்காக மரத்திலே பிணமாக ஊஞ்சலாட்டப்பட்ட உடையார் பாளையம் வேலாயுதங்களை உள்ளடக்கிய இயக்கம் - மதுரை மாநாட்டுத் தீயைக் கண்டு மனங்கலங்காத இயக்கம்

-குடந்தைத் தெருவினிலே குருதி வெள்ளத்தைக் கண்டு குலை நடுங்காத இயக்கம் - இராமகாவியம் இழுக்குடையது என்பதை எடுத்துக்காட்டி பாரதியார்களை, சேதுப்பிள்ளைகளை சொற்போரிலே வெற்றி கண்ட இயக்கம் - 'ஆறிலும் சாவுதான் நூறிலும் சாவுதான், ஆனது ஆகட்டுமே' என்று பாடி வரும் ஆயிரமாயிரம் பட்டாளத் தம்பிகளைப் பெற்றுள்ள இயக்கம் - தம்பிகளின் நெஞ்சைத் தட்டிப் பார்த்து "உறுதியானதுதானா இது!" என்று உணர்ந்து அறப்போருக்கு உரிய காலம் பார்த்திருக்கும் உலக அறிஞர்களில் ஒருவராம் அண்ணாவைப் பெற்றிருக்கும் இயக்கம் - குள்ள நரிக் கூட்டத்தின் குடல் கிழிக்கும் கூற்றம் - குமுறும் எரிமலை புதுவைக் கவிஞர் பாரதிதாசனைப் பெற்றுள்ள இயக்கம் - ஆரியம் ஒரு மாயை, அது பல உருவில் நடமாடும் என்பது கண்டு இலக்கியத் துறையிலே - நாடகத் துறையிலே - கலைத் துறைகளிலே - ஆரியத்தின் கைவரிசையை எதிர்க்கப் பலப்பல அணுகுண்டுகளை நடமாட விட்டிருக்கும் இயக்கம் - இத்துணை மகத்தான இயக்கம் நிலவுபோல வளர்வதும், தேய்வதும் பின் வளர்வதுமாயுள்ளது. நிச்சயமாக நமக்குத் தெரியும் கழகத்திலே நான் மேலே குறிப்பிட்ட அமைப்புமுறைகள் சீர்திருத்தப்படா விட்டாலுங்கூட கழகம் அழிந்து விடாது என்று. ஆனாலும் சந்திரனைப் போல தேயும். பிறகு வளரும். ஆனால் சந்திரனைப் போல அழியாமலே இருக்கும். நம்முடைய ஆசையெல்லாம் இயக்கம், அழியாமலுமிருந்து அதோடு வளர்வதும் தேய்வதுமின்றி எப்போதும் வளர்வது என்பதாகவே இருக்க வேண்டும் என்பதுதான். அதற்காகத்தான் அழுத்தந்திருத்தமாகக் கூற வேண்டியிருக்கிறது, அமைப்புமுறைதேவையென்று. அந்தத் தேவையை மத்தியக் கழகத்திலி ருந்துதான் பூர்த்தி செய்ய வேண்டுமென்பதல்ல. மாவட்ட, கிளைக் கழகங்கள் தங்கள் சொந்த முயற்சியிலேயே அமைப்பு கண்டு மாவட்டத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டு மத்திய கழகத்தை தங்களோடு இணைத்து செயல் புரியச் செய்ய வேண்டும். விழுதுகள் இருந்தால் தான் ஆலமரத்திற்கு அழகு. இது கழகத் தொண்டர்கள் - செயலாளர்கள் அறியாததல்ல.

நாட்டு நிலைமை மிக மிக நெருக்கடியான கட்டத்தில் இருக்கிறது. இந்த நேரத்தில் நாடு நம்மை எதிர்பார்த்து நிற்கிறது. அவர்கள் எதிர்பார்ப்பது நம்மிடமிருந்துதான். நமது கொள்கை அவர்கட்கு தேளாயிருந்த காலம்போய் தேனாக மாறிவிட்டது இப்போது. இந்த நல்ல நேரத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பயன்படுத்துவது என்றால் போலிப் பிரச்சாரம் செய்து தேர்தலிலே நாற்காலி பிடிப்பது என்பதல்ல, பொருள். நம்மிடையே நல்லெண்ணம் அரும்பியிருக்கும் இவ்வேளையில் மக்களுக்குள்ள கஷ்டங்களை - நாட்டுக்குள் படையெடுக்கும் நானாவித ஆபத்துக்களை முறியடிப்பதற்கு நம்முடைய உயிரைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அர்ப்பணிக்க வேண்டும் என்ற அர்த்தத்தில்தான் கூறுகிறேன்.

இந்தித் திணிப்பு எதிர்ப்பிலே வெற்றி பெற்று விட்டோம். வாகை மாலை சூடி விழாக்களும் நடத்தி விட்டோம். எலும்புகளை முறித்துக் கொடுத்து - நரம்புகளை அறுத்துக் கொடுத்து - குருதியைக் கொட்டிக் கொடுத்து இத்தனைக்கும் அசையாத நிலை ஆளவந்தாருக்கு இருக்கிறது என்பது கண்டு, இறுதியாக கோவை முத்தமிழ் மாநாட்டிலே அபாய அறிவிப்பு சங்கம் முழங்கி, அதன் பிறகு ஆளவந்தவர் விழித்துப் பார்த்து, மொழிக்கு வந்த கொடுவாளைத் தடுத்து விட்டனர். இந்த வெற்றியைக் கொண்டாடும் நேரத்திலேயே நெஞ்சு கொதிக்கும் நெருப்புச் செய்தியொன்று நம்மை நெருங்கிற்று.

ஆம், அதுதான் அல்லாடியாரின் ஆனந்தத் தாண்டவம் - அக்கிரகாரத்தின் வெற்றி முரசம் - திராவிடத்தின் முன்னாள் பழம்பெருந்தலைவர்கள், உரிமைப் போர்த் தளபதிகள் தியாகராயர், டாக்டர் நாயர், பனகல் அரசர், டாக்டர் நடேசன், போன்ற பல தலைவர்கள் ஒன்று சேர்ந்து உண்டாக்கிய வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை (கம்யூனல் ஜி.ஓ.) யைக் குழியில் தள்ளிவிட்டு பார்ப்பனீயம் பாடுகின்ற பள்ளுப்பாட்டைத்தான், தோழர்களே! குறிப்பிடுகிறேன். முப்பது ஆண்டுகளாக அமுலிலிருந்து வரும் வகுப்புவாரி முறை அடியோடு சாய்கிறது. சட்டம் கம்யூனல் ஜி.ஓ.வுக்கு மாறானதாயிருக்கிறதாம். அதற்காக சமூக நீதியை சாய்த்து விட வேண்டுமாம். சட்டத்தை இயற்றுபவர்கள் மக்கள், மக்கள் வாழ வகுத்தது சட்டம். கம்யூனல் ஜி.ஓ.வுக்கு மாறுதலாக சட்டம் இருந்தால் சட்டத்தைச் சரிப்படுத்த வேண்டியது முறையா அல்லது ஒரு பெரிய சமுதாயத்தின் உரிமையை உடைத்து நொறுக்கி உள்ளம் எரியச் செய்வது முறையா என்றுதான் நாம் கேட்கிறோம்.

1920இல் எஸ்.எஸ்.எல்.சி. பரிட்சைக்கு சென்ற மாணவர்களின் தொகை இருபதாயிரம். இன்று 1950ல் அறுபத்தெட்டாயிரம். இப்படி வளர்ந்து வந்த திராவிடரின் கல்வி உயர்வைக் கருவறுக்க சட்டத்தை வாளாக்குகிறார்கள். சட்டம் செய்தவர்கள் ஐந்து பேர். அதில் மூன்று பேர் தென்னாட்டு நிலை தெரியாத வட நாட்டவர். இருவர் தென்னாட்டவர். அதில் ஒருவர் டி.டி. கிருஷ்ணமாச்சாரியார், மற்றவர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர். எங்கிருந்து நீதி கிடைக்கும் இந்த நிரபராதித் திராவிடருக்கு!. எங்கிருந்து உரிமை கிடைக்கும் உளுத்துப்போன சமுதாயத்துக்கு!..... சமூகநீதி தேவையென்றால் பரந்த நோக்கம் பேசுகிறார்கள். தகுதி, திறமையென்கிறார்கள். இந்தத் தகுதியும் திறமையும் சமுதாயப் பிரச்சினை வரும்போது காட்டப்படுகிறதா? கல்விச் சாலைக்குச் செல்ல தகுதி திறமை என்று கர்ஜிக்கிற கனவான்களைக் கேட்கிறேன் - காலையில் எழுந்து ஸ்னானம், நேமம், நிஷ்டை, விரதம், அளவில்லாத ஆண்டவன் பக்தி, பழுத்த ஆஸ்திகம் இத்தனை திருக்குணங்களும் அமைந்த திராவிடன் ஒருவன், ஆலயத்து சென்று ஆண்டவனைத் தொட்டு அர்ச்சிக்க அபிஷேகிக்க முடியாதே. அதே நேரத்தில் இரவெல்லாம் இன்பவல்லியோடு கூடிக் கிடந்து வெற்றிலை காய்ந்த வாயுடனே ஆண்டவனைத் தொட்டுக் குளிப்பாட்டி, உணவூட்ட ஒரு பெரு வியாதி பிடித்த பார்ப்பனருக்குக் கூட உரிமை இருக்கிறதே - இதில் எங்கே தகுதி, திறமை? யாரிடமிருக்கிறது தகுதி..... ஆனால் யார் நுழைய முடிகிறது கோயிலில். இவைகளை ஒழித்துக் கட்டி விட்டு, உயர்ந்தோர் எனப் பேசும் ஆணவத்தை அகற்றி விட்டு பிறகு கம்யூனல் ஜி.ஓ. தேவையற்றது என்றால்கூட அதில் அர்த்தமுண்டு. எப்படியோ அவர்கள் வெற்றி பெற்று விட்டார்கள்.

நாம் முன்பு கூறியபோது நையாண்டி பேசிய வர்கள் இன்று நம்மோடு சேர்ந்து 'அந்தோ! அநீதி!' என அலறுகிறார்கள். சென்னை அரசாங்கம் சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்று விட்டது நீதி கேட்க! அதுவும் நம் முயற்சியால்தான், கிளர்ச்சியால்தான் முடிந்தது என்பதை நினைத்துப் பெருமையடைகிறோம். உயர் நீதி மன்றத்துத் தீர்ப்பு கிடைத்ததும் அரசாங்கத்தின் அடுத்த திட்டம் என்ன என்பது அமுங்கித்தான் கிடந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சென்னையில் துவக்கிய கிளர்ச்சி, திராவிட முன்னேற்றக் கழக மாணவர்கள் காட்டிய உணர்ச்சி, மந்திரி மாதவமேனனை வாய் திறக்கச் செய்தது. அப்பீல் செய்து சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகிறோம் என்றார்கள். அதன் பிறகு நாம், பொறுத்திருந்து பார்ப்போம் - போகாவிட்டால் கிளர்ச்சி துவக்குவோம்.

அப்பீலுக்கு போயிருக்கிறவர்கள் அங்கும் தோல்வி கண்டால் - அதன் பிறகு அரசியல் சட்டம் திருத்தப்படாவிட்டால் அப்போது எரிமலையாகக் குமுறப்போகிறது நமது கிளர்ச்சி. மூன்று கடல்களும் பொங்கி ஆதிக்க இமயத்தை மூழ்கடிக்கும் கிளர்ச்சி. சாவா? வாழ்வா? என்று முடிவு கட்டுகிற கிளர்ச்சி.

ஆளவந்தார் சுப்ரீம் கோர்ட்டிலிருந்து திரும்புகிற வரையில் நமக்கு வேறு பல வேலைகள் உண்டு. சமூக நீதி பற்றிய விளக்கவுரைகளாற்றி மக்களை விழிக்கச் செய்ய வேண்டும். மக்கள் விழிப்படைவார்கள். ஆனால் செயலாற்ற உடலில் வலுவில்லை. காரணந்தான் தெரியுமே - கொடுமையான காரணம். பசி. . . . பசி . . . . பருத்திக் கொட்டையை சாப்பிடு என முன்ஷி சிபார்சு செய்யுமளவுக்கு வளர்ந்து விட்ட பசி - திருநெல்வேலியிலும் வேறிடங்களிலும் தான் பெற்ற செல்வத்தைத் தன் வயிற்றில் கிடந்த வைடூரியத்தை, தாயார் விலை கூறி விற்று வயிற்றைக் கழுவிக் கொள்ளும்படி செய்த கோரப் பசி - இந்தப் பசி நீக்க, பாராள வந்தவர் எடுத்துக் கொண்ட முயற்சி, எட்டு அவுன்ஸ் அரிசியை ஆறு அவுன்சாக்கியதுதான். இந்தப் பசி போக்கும் கைங்கர்யத்தை செவ்வனே செய்ய யாரும் முன்வரவில்லை. நாமோ நாட்டு மக்களில் ஒரு பகுதி. ஆனாலும் வாயில்லாப் பூச்சிகளல்ல! நமது வார்த்தைகள் முதலில் அலட்சியப் படுத்தப்பட்டாலும் பிறகு அதுதான் "வேதவாக்"காக மாறியிருக்கிறது பலருக்கு.

பசியால், மக்கள் மாளும் நேரத்தில் பாராமுகமாயிருக்கும் சர்க்காருக்கு - ஒருமுறை நினைவு படுத்தும் நிகழ்ச்சியை நாம் நடத்திக் காட்ட வேண்டும். சென்னையிலே பட்டினிப் பட்டாள ஊர்வலம் நடந்த பிறகு நல்லதொரு எதிரொலி ஏற்பட்டது. அதுபோல திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நாடெங்கும் ஒரு நாள் குறிக்கப்பட்டு பசியால் மாளும் மக்களின் பட்டியலை சர்க்காருக்குத் தர வேண்டும். அந்த நாள் சர்க்காரின் மந்தப் போக்கைக் குறைக்கு மென்ற நம்பிக்கையோடு, இதைச் செய்யலாமா செய்யக் கூடாதா என்ற முடிவை - செய்யலாம் என்றால் நாள் குறிப்பிடுங்கள் என்ற தாழ்மையான வேண்டுகோளை தலைமைக் கழகத்தின் முன் வைக்கிறேன். நம்முடைய கிளர்ச்சிகள் என்றும் தோற்றதில்லை அடக்குமுறைகளை வீசிய போதும் - சிறைச் சாலையிலே அடைத்தபோதும் - சிரச் சேதம் செய்வோம் என்று மிரட்டியபோதும் - நாம் பயந்து பின்னடைந்ததில்லை.

அந்த அஞ்சா நெஞ்சத்துடன் - அழகிரி சாமியை நினைத்துக் கொண்டு அண்ணாவின் படை வரிசையிலே சேர வேண்டுமென்றுதான் திராவிடப் பெருமக்களை அழைக்கிறேன். அப்படி அழைக்கும் போதுதான் அழைக்கப் பட்டவர்களை அமைப்பு முறையில் நடத்திச் செல்லக் கழகம் இன்னும் செப்பனிடப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

செயல்முறைத் திட்டங்களின் அமைப்பு முறைகளில் சிறிது அயர்ந்து விட்டது கழகம் என்னும்போது அந்தக் குற்றவாளிப் பட்டியலிலே நானும் அடங்கியிருக்கிறேன் என்பதை நினைவுபடுத்திக் கொண்டுதான் சொல்லுகிறேன். நம் குற்றம் கொள்கையை மீறியதல்ல, சிதறிக் கிடக்கும் சக்தியை ஒன்றுபடுத்தாததுதான் - சிந்திக் கிடக்கும் மலர்களை மாலையாக ஆக்காததுதான் அந்த அருமையான செயல் இந்த ஆண்டு தொடங்கிவிடும் என்று நம்புகிறேன். அதற்கான விடிவெள்ளி முளைத் திருக்கிறதாக உணருகிறேன்.

சென்னை தங்கசாலை வீதியிலே தலைமை நிலையம் பணி புரியத் தொடங்கி விட்டதையும் நீங்கள் அறிய வேண்டுமென்று கூறுகிறேன். இந்த ஆண்டிலே நாம் வளர்ந்து விட்டோம். வரும் ஆண்டிலே நம் கையில் வேலேந்திப் புறப்படப் போகிறோம், தோழர்களே! இந்த "வேலேந்தி" என்ற வார்த்தைகூட எதிரிகட்கும், சர்க்காருக்கும் பயங்கரமாகத் தோன்றும். பயப்படத் தேவை யில்லை. கொள்கையை வேலாக்கி அறப்போர் ஆரம்பமாகப் போகிறது என்பதை அறிவுறுத்து கிறேன், உங்கள் சார்பாக, அரசியலாருக்கு!

அகவிலை உயர்வை எதிர்த்து ஒரு போர்! அடக்குமுறையை எதிர்த்து ஒரு போர்! புத்தகங்களின் தடை உத்தரவை எதிர்த்து ஒரு போர்! நாடகத் தடைகளை மீறி ஒரு போர்! இப்படிப் போர்கள் நடக்கப் போவதில்லை. எல்லாவற்றையும் சேர்த்து ஒரே ஒரு போர்! அந்தப் போரிலே கலந்து வாகை மாலை சூட - வாரீர் தோழர்களே! பாண்டியன் பரம்பரையினரே! சேரன் சந்ததியினரே! சோழனின் சொந்தக்காரரே! வாரீர்! சிறுத்தையின் உறுமல் - சிங்கத்தின் சீற்றம் - கறுத்த கழுதையே அங்கேன் கனைக்கிறாய் என்று கேட்டிட வாரீர்! ஆண்ட இனத்தால் மீண்டும் முற்றுகை - மாண்டிடும் புழுவே மகுடம் கழற்று என்று மார் தட்டிட வாரீர்! புரட்சிப்பண் பாடிட வாரீர்!

வாரீர் வாரீர் . . . வாலிப வீரர்களே! வைர நெஞ்சுடைத் தோழியர்களே! வண்மை நிறை பெரியோர்களே! . . . என அழைக்கிறேன்."

இளைய உடன்பிறப்புகளே!

அன்று அரும்பு மீசை இளைஞனாக இருந்த என் குரல் இப்படிக் கோவில்பட்டியிலே ஒலித்தது. இன்றும் அந்த இளைமைத் துடிப்புடன் ஒலிக்கிறது; இந்தக் குரல் ஒலியிலே அணிவகுத்திடு! பணி தொடர்ந்திடு!

**அன்புள்ள,**

**மு.க.**

(முரசொலி 28.11.2007)

# புயல் நிவாரணம் : ஒன்றியக் குழுவினரிடம் முதல்வர் வலியுறுத்தல்!

**முதல் பக்கத் தொடர்ச்சி**

பாதிப்புகளை பெருநகர சென்னை மாநகராட்சி, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஆய்வு மேற்கொண்டது.

நேற்று (14.12.2023) தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை ஒன்றிய அரசின் பல்துறை ஆய்வுக் குழுவினர் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டனர். அவ்வமயம், மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட சேதங்களுக்கு நிதி ஒதுக்கீடு கோரும் கோரிக்கை மனுவினை (Memorandum) தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசின் ஆய்வுக் குழுவின் தலைவரிடம் வழங்கினார்.

**தற்காலிக நிவாரண நிதியாக ரூ.7,033 கோடி வழங்க கோரிக்கை!**

இக்கோரிக்கை மனுவில், புயல் மழையால் சாலைகள், பாலங்கள், பள்ளிக் கட்டடங்கள், அரசு மருத்துவமனைகள் போன்ற பொதுக் கட்டமைப்புகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சீர்செய்திடவும், மழை வெள்ளத்தால் சேதமடைந்துள்ள டிரான்ஸ்பார்மர்கள், மின் கம்பங்கள், பழுதடைந்த துணை மின் நிலையங்கள் உள்ளிட்ட மின்சார உட்கட்டமைப்புகளை சீர் செய்திடவும், பாதிக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் தொட்டிகள், தெரு விளக்குகள், கிராம சாலைகள் ஆகியவற்றை சீர் செய்திடவும் இழப்பீடுகள் கோரப்பட் டுள்ளது. மேலும், மிக்ஜாம் புயல் மழையால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் படகுகள், வலைகள் ஆகியவற்றிற்கு இழப்பீடுகள் வழங்கவும், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகளை ஈடுசெய்திடவும், சாலையோர வியாபாரிகள் மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்கிடவும், தற்காலிக நிவாரணத் தொகையாக 7033 கோடி ரூபாயும், நிரந்தர நிவாரணத் தொகையாக 12,659 கோடி ரூபாயும் கோரப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது :-

மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட வெள்ள சேதங்களைப் பார்வையிட்டு வந்துள்ள உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையில் கடந்த இரண்டு நாட்கள் நீங்கள் மேற்கொண்ட ஆய்வு பயனுள்ளதாக இருந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். இந்த வெள்ளச் சேதத்தை பொறுத்தவரை தமிழ்நாடு அரசு தேவையான எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்திருந்தது. அதேபோல் புயல், மழையின் தாக்கத்திற்கு பிறகு, மீட்பு நிவாரண நடவடிக்கைகளும் முழுவீச்சில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது.

**தமிழ்நாடு அரசைப் பாராட்டிய ஒன்றியக் குழுவுக்கு நன்றி!**

நேற்று நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் இதனை குறிப்பிட்டு நீங்கள் தமிழக அரசிற்கு பாராட்டுக்களை தெரிவித்திருந்தீர்கள், அதற்காக என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாறு காணாத இந்த பெருமழையின் காரணமாக ஏற்பட்ட மிகப் பெரிய சேதங்களை சரிசெய்து மீண்டும் உருவாக்கிடவும், வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு அதனை மீண்டும் உருவாக்கி வழங்கிடவும் தமிழ்நாடு அரசின் நிதி ஆதாரங்கள் மட்டும் போதுமானது அல்ல. ஒன்றிய அரசின் பங்களிப்பும் இதற்கு பெருமளவு தேவைப்படுகிறது. எனவே, மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள குடும்பங்களுக்கு வாழ்வாதா ரங்களை மீட்க தேவையான உதவிகளை வழங்கவும் பல்வேறு வகையான சமூக உட்கட்டமைப்புகளை மீட்டுருவாக்கம் செய்யவும் ஒன்றிய அரசிற்கு நீங்கள் உரிய பரிந்துரை செய்து, தமிழ்நாடு அரசு கோரியுள்ள நிவாரணத் தொகையை பெற்றுத்தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய குழுவினரை கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வரலாறு காணாத இந்த பெருமழையின் காரணமாக ஏற்பட்ட மிகப் பெரிய சேதங்களை சரிசெய்து மீண்டும் உருவாக்கிடவும், வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு அதனை மீண்டும் உருவாக்கி வழங்கிடவும் தமிழ்நாடு அரசின் நிதி ஆதாரங்கள் மட்டும் போது மானது அல்ல. ஒன்றிய அரசின் பங்களிப்பும் இதற்கு பெரு மளவு தேவைப் படுகிறது. எனவே, மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள குடும்பங்களுக்கு வாழ்வாதாரங்களை மீட்க தேவையான உதவிகளை வழங்கவும் பல்வேறு வகையான சமூக உட்கட்டமைப்புகளை மீட்டுருவாக்கம் செய்யவும் ஒன்றிய அரசிற்கு நீங்கள் உரிய பரிந்துரை செய்து, தமிழ்நாடு அரசு கோரியுள்ள நிவாரணத் தொகையை பெற்றுத்தர வேண்டும்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (14.12.2023) தலைமைச் செயலகத்தில், சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு. அப்பாவு சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தனது ஒரு மாத சம்பளத் தொகையான 1.05 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (14.12.2023) தலைமைச் செயலகத்தில், சிம்சன் குழுமத்தின் அமால்கமேஷன் (Amalgamation) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஏ. கிருஷ்ணமூர்த்தி சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1.25 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, அந்நிறுவனத்தின் பொது மேலாளர் ரவி சர்மா ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (14.12.2023) தலைமைச் செயலகத்தில், இந்திய மருத்துவ சங்கத்தின் (Indian Medical Association) தமிழ்நாடு மாநில கிளைத் தலைவர் டாக்டர் கே.எம். அபுல் அசன், செயலாளர் டாக்டர் எஸ். கார்த்திக் பிரபு, நிதி செயலாளர் டாக்டர் எஸ். கௌரி சங்கர், முன்னாள் தலைவர் டாக்டர் டி. செந்தமிழ் பாரி, முன்னாள் செயலாளர் என்.ஆர்.டி.ஆர். தியாகராஜன் மற்றும் டாக்டர் பி. செங்குட்டுவன் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கனிமொழி சோமு, சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (14.12.2023) தலைமைச் செயலகத்தில், ஜி.ஆர்.டி. ஜுவல்லர்ஸ் நிர்வாக இயக்குநர்கள் ஜி.ஆர். அனந்த பத்மநாபன், ஜி.ஆர். ராதாகிருஷ்ணன் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஆகியோர் உள்ளனர்.

### சபரிமலைக்குச் செல்லும் பக்தர்களின் வசதிக்காக - திண்டுக்கல் மண்டலத்தில்

# மதுரை கோட்ட அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் சிறப்புப் பேருந்துகள்!

மதுரை, டிச. 15-

சபரிமலை ஸ்ரீஐயப்பன் மண்டல பூஜை மற்றும் மகரவிளக்கு பூஜை திருவிழாக்கள் முறையே 27.12.2023 மற்றும் 15.01.2024 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது.

திண்டுக்கல், பழனி, திருச்சி, மதுரை ஆகிய இடங்களிலிருந்தும் அவற்றினைச் சார்ந்த பகுதிகளிலிருந்தும் சபரிமலைக்குச் செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை முன்னிட்டு 15.12.2023 முதல் 16.01.2024 வரை இப்போக்குவரத்துக் கழகத்தின் மூலம் மேற்கண்ட ஊர்களில் இருந்து குமுளிக்குத் தேவைக்கு ஏற்ப சிறப்புப் பேருந்துகள் இயக்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும் குமுளியிலிருந்து சபரிமலைக்குச் செல்ல இணைப்புப் பேருந்துகள் அதிக அளவில் கேரள மாநில போக்குவரத்துக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

மண்டல பூஜையின்போது 27.12.2023 சுமார் 100 பேருந்துகளும், மகரவிளக்கு பூஜை திருவிழா வின்போது 15.01.2024 தேவைக்கேற்ப மேலும் அதிக அளவு பேருந்துகளும் மேற்குறிப்பிட்ட இடங்களிலிருந்து இக்கழகத்தின் மூலம் இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சபரிமலை செல்லும் பக்தர்களின் பாதுகாப்பான பயணத்திற்காக குமுளி, திண்டுக்கல், பழனி, திருச்சி மற்றும் மதுரை ஆகிய பேருந்து நிலையங்களில் பக்தர்களுக்கு உதவவும், வழிகாட்டவும் அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

குமுளியில் மேற்குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்ல முன்பதிவு வசதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் இப்போக்குவரத்துக் கழகம் மூலம் கொடைக்கானல், கொல்லம், மூணாறு, திருப்பூர், கோவை, மேட்டுப்பாளையம், ஈரோடு, சேலம், நாகர்கோவில், திருச்செந்தூர், நெய்வேலி, திருவண்ணாமலை, விழுப்புரம், சென்னை, மன்னார்குடி, கடலூர் மற்றும் நாகூர் வழித்தடங்களில் பொதுமக்கள் மற்றும் பயணிகள் சிரமமின்றி பயணம் செய்ய ஏதுவாக அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் மூலம் (OTRS) *www.tnstc.in.website*, *Mobile App* மற்றும் இணைய சேவை மையம் வழியாக முன்பதிவு செய்து பயனடையுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.


தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை கட்டடம் (க & ப ) வட்டம் திருச்சி-1.
குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் : 21 க.பொ/க (க & ப) வட்டம். திருச்சி / 2023-2024 / நாள் : 12.12.2023
விலைவிகித முறை ஒப்பந்தவகை : ஒட்டுமொத்தம்

கலைஞர் 100 1924 - 2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர் பொதுப்பணித்துறை கட்டடம் (க & ப) வட்டம் திருச்சி-1 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்காணும் பணிகளுக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு தொகை | முன் வைப்புத் தொகை | ஒப்பந்தக் காலம் | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரர்கள் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | அரியலூர் மாவட்டம் மீன்சுருட்டியில் மிகவும் பிற்படுத்தப்பட்ட 50 பள்ளி மாணவர்களுக்கான விடுதிக் கட்டிடம் கட்டும் பணி | ரூ 180.60 இலட்சங்கள் | ரூ 1,00,300/- | 7 மாதங்கள் | வகுப்பு IV மற்றும் அதற்கு மேல் (திருத்திய வகுப்பின் படி) |
| 2 | அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தில் கிளை நூலகம் கட்டிடம் கட்டும் பணி | ரூ 80.02 இலட்சங்கள் | ரூ 50,100/- | 6 மாதங்கள் | வகுப்பு IV மற்றும் அதற்கு மேல் (திருத்திய வகுப்பின் படி) |

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அனுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் : **19.12.2023 முதல் 27.12.2023 மாலை 3.00 மணி வரை.**
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் : **27.12.2023 மாலை 3.00 மணி வரை.**
4. ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **28.12 .2023 மாலை 3.30 மணி முதல்.**

**செ.ம.தொ.இ / 6642 ஒப்பந்தப்புள்ளி /2023** **கண்காணிப்புப் பொறியாளர் பொபது., கட்டட (க & ப) வட்டம் திருச்சி-1.**


# கோவை காரமடையில் நலத்திட்ட உதவிகள்! ஆ.இராசா எம்.பி. வழங்கினார்!

மேட்டுப்பாளையம், டிச. 15 -

கோவை வடக்கு மாவட்டம் காரமடை ஒன்றியம் மேட்டுப்பாளையம் அருகில் உள்ள திம்மம்பாளையத்தில் தி.மு.க. சார்பில் மாற்றுத்திறனாளிகள் 61 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.ஆர். சண்முகசுந்தரம் ஏற்பாட்டில் நடைபெற்றது.

கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொ.அ.ரவி முன்னிலையில் நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா சிறப்பு விருந்தினராக பங்கேற்று மாற்றுத்திறனாளிகள் 35 பேருக்கு அரிசி, பருப்பு உள்ளிட்ட மளிகைப் பொருட்கள்,புத்தாடைகள் வழங்கினார்.


மூன்று மாற்றுத் திறனாளிகளுக்கு இருசக்கர வாகனமும்,பெரிய மத்தம்பாளையம் பகுதியைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி சிவராஜ்க்கு பெட்டிக்கடையும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் காரமடை ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.எம்.டி.கல்யாணசுந்தரம், பி.சுரேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் அஷ்ரப் அலி, கூடலூர் நகராட்சி தலைவர் அறிவரசு, அன்னூர் ஒன்றிய செயலாளர்கள் பழனிசாமி, தனபால்,பேரூராட்சி தலைவர் பரமேஸ்வரன்,நெசவாளர் அணி தலைவர் கணேசமூர்த்தி, சிறுமுகை உதயகுமார், விவசாய அணி தலைவர் வி.எம்.பத்ர சாமி,பொறியாளர்அணி பாலாஜி, இளைஞர் அணி ஹக்கீம், மீனவரணி அமைப்பாளர் ராம் குட்டி, இளைஞரணி துணை அமைப்பாளர்கள் விக்னேஷ்குமார்,சூரியன் தம்பி, வணிகர் அணி பத்மநாபன்,முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் மனோகரன் மற்றும் காரமடை, மேட்டுப்பாளையம், சிறுமுகை,அன்னூர்,பெரியநாயக்கன்பாளையம்,கூடலூர்,தொண்டாமுத்தூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு பகுதிகளைச் சேர்ந்த கழக நிர்வாகிகள்,பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கோவை வடக்கு மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகம் செய்து இருந்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவாரூர் கு. தென்னன்

**டிசம்பர் 15 (2011)**



தலைவர் கலைஞர் அவர்களின் இளமைக் காலந்தொட்டு உற்ற நண்பராகத் திகழ்ந்தவரும் – கழகம் தொடங்கிய காலம்முதல் உறுப்பினராக விளங்கியவரும் – திருவாரூர் நகர்மன்றத் தலைவர் – நகரக் கழகச் செயலாளர் – தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் – மாவட்டக் கழக அவைத் தலைவராகவும் பொறுப்புகளை வகித்தவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.குறிப்பாக, மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகச் சார்பில் 2000ஆம் ஆண்டு ‘பெரியார் விருதினை’ தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

“எனக்கு எத்தனையோ நண்பர்கள் உண்டென்ற போதிலும் ‘நண்பன்’ என்ற தகுதியிலே முதலிடத்தில் வைத்துக் கருதப்படும் திருவாரூர் தென்னனை இழந்துவிட்டேன்” என தலைவர் கலைஞர் அவர்கள், தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


பெருநகர சென்னை மாநகராட்சி
மின்துறை

கலைஞர் 100 1924 - 2023

த.தெ.நு.மை.ந.க.எண்.சி1/2761/2023

**குறுகிய மறு ஒப்பந்தப்புள்ளிகள்**

**கீழ்கண்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் மேற்பார்வை பொறியாளர், மின்துறை பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் கோரப்படுகிறது.**

**Rate Contract for supply of 50 No's of Desktop Computers, 50 No's Laser Printers, 50 No's of UPS and 10 No's Laptops with 5 Years onsite warranty / support for GCC users for a period of 6 months-க்கான ஒப்பம்.**

**பணியின் மதிப்புத் தொகை 56,20,906/-** | **ஒப்ப முன் வைப்புத் தொகை 56,209/-**

ஒப்ப படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். நிறைவு செய்யப்பட்ட ஒப்பபுள்ளிகள் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் **26.12.2023 அன்று பிற்பகல் 3.00 மணி** ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **27.12.2023 அன்று பிற்பகல் 3.15 மணி**

செ.ம.தொ.இ / 6660 / ஒப்பந்தப்புள்ளி / 2023 **கண்காணிப்பு பொறியாளர் / மின்சாரம்**



தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
(கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், மதுரை

கலைஞர் 100 1924 - 2023

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**ஒ.அ.எண். 40 / 2023–24 / தவஅ / நாள்: 07.12.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, **மதுரை** வட்டம் அவர்களால், **திட்டம் சாரா பணி 2023-24 தலைப்பின் கீழ் இராமநாதபுரம் (நெ) க(ம)ப** கோட்டம் சார்ந்த பணிக்கு **இணைய வழியில் மட்டுமே** சதவீத ஒப்பந்தப்புள்ளி **02.01.2024, 15.00** மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **15.12.2023** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப்பொறியாளர் (நெ),**
க(ம)ப வட்டம், மதுரை.

**செ.ம.தொ.இ./6631/ஒப்பந்தப்புள்ளி/2023**



தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கட்டட (க&ப) வட்டம், சேப்பாக்கம், சென்னை-5.

கலைஞர் 100 1924 - 2023

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்:38 கட்டட (க&ப) வட்டம் / 2023-2024 / நாள்.11.12.2023.**

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை: மொத்த வகை / இன விலை முறை**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டட (க (ம) ப) வட்டம், சென்னை-5 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்காணும் பணிக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது.

| வ. எண். | பணியின் பெயர் மற்றும் முன்வைப்புத் தொகை | பணியின் தோராய மதிப்பீட்டுத் தொகை | காலம் | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் தகுந்த வகுப்பு |
|---|---|---|---|---|
| 1. | சென்னை-40, அண்ணா நகர், தொழிலாளர் அலுவலர் குடியிருப்பு வளாகத்தில் உள்ள தொழிலாளர் ஆணையரகம் மற்றும் அதன் சார்நிலை அலுவலகங்களுக்கான புதிய அலுவலகக் கட்டடத்திற்கு இருக்கை வசதி (ம) Storage வசதி மற்றும் கூடுதல் வசதிகள் செய்யும் பணி. (மறு ஒப்பந்தப்புள்ளி) மு.வை.தொகை: ரூ.1,52,000/- | ரூ.283.76 இலட்சங்கள் | 3 மாதங்கள் | வகுப்பு III மற்றும் அதற்குமேல் |

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 28.12.2023 மாலை 03.00 மணி வரை.
3. ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 28.12.2023 மாலை 04.00 மணி.

**கண்காணிப்புப் பொறியாளர், பொபது.,**
**கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேப்பாக்கம், சென்னை-5.**

செ.ம.தொ.இ./6647/ஒப்பந்தப்புள்ளி/2023



தமிழ்நாடு அரசு / **பொதுப்பணித்துறை**
**கட்டடம் (க&ப) வட்ட அலுவலகம், சிவகங்கை**
**ஒப்பந்தப்புள்ளி படிவம் / மொத்த ஒப்பந்தம்**
**முன் தகுதி விண்ணப்பம் – இரு உறை முறை (வ.எண்.3 மட்டும்)**
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 12க.பொ/ கட்டடம் (க&ப) வட்டம்/சிவ / 2023–2024 / நாள்.12.12.2023**

கலைஞர் 100 1924 - 2023

தமிழக ஆளுநரின் சார்பாக கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து, கட்டட (க&ப) வட்டம், சிவகங்கை அவர்களால் **மூன்று பணிகளுக்கு** பொதுப்பணித்துறையில் பதிவு செய்துள்ள தகுதியுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து (மின்னணு முறையில் மட்டுமே) ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது.

1) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் **14.12.2023, மாலை 03.00 மணி முதல் 28.12.2023, மாலை 03.00 மணி வரை** இணையதளத்தில் கிடைக்கும், (மின்னணு முறை)
2) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி **28.12.2023, மாலை 03.00 மணி வரை** (மின்னணு முறை)
3) ஒப்பந்தப்புள்ளி **29.12.2023 மாலை 03.00 மணியளவில்** திறக்கப்படும் (மின்னணு முறை) (வ.எண்.3ற்கு முன் தகுதி ஒப்பந்தப்புள்ளி மட்டும்)

ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் வேலையின் தோராய மதிப்பு, முன் வைப்புத் தொகை விவரங்கள், பணிக்காலம் மற்றும் இதர விவரம் அரசு இணையதளமான **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் திருத்தங்கள் /மாறுதல்கள் எதேனும் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,**
**கட்டடம் (க&ப) வட்டம், சிவகங்கை**

செ.ம.தொ.இ/6646/ஒப்பந்தப்புள்ளி/2023

உரிய விசாரணை மேற்கொண்டு பொறுப்பானவர்களைக் கண்டறிந்து

# நாடாளுமன்றப் பாதுகாப்பை உறுதி செய்திட வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, டிச. 15 -

நாடாளுமன்ற மக்களவையில் பாதுகாப்பு மீறல் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில், இது தொடர்பாக உரிய விசாரணை மேற்கொண்டு, பொறுப்பானவர்களைக் கண்டறிந்து நாடாளுமன்றப் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**முன்னெப்போதும் இல்லாத வகையில் நாடாளுமன்ற மக்களவைக்குள்ளேயே அரங்கேறியுள்ள பாதுகாப்பு மீறல் நமது மக்களாட்சியின் உயரிய கோயிலான நாடாளுமன்றத்துக்கும் பெரும் அச்சுறுத்தலை உண்டாக்கியிருக்கிறது. இதில் தாமதமில்லாத உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். உரிய விசாரணை மேற்கொண்டு, இதற்குப் பொறுப்பானவர்களைக் கண்டறிந்து, இனி இப்படி நடக்காத அளவுக்குப் பாதுகாப்பு நடைமுறைகளைச் செயல்படுத்தி, மக்களாட்சியின் மிக முக்கியமான அமைப்பான நாடாளுமன்றத்தின் பாதுகாப்பை நம்மிடம் உள்ள அனைத்து வலிமையையும் கொண்டு உறுதிசெய்திட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

# வெள்ள நிவாரணம் ரூ.6 ஆயிரம்! அரசாணை வெளியீடு!

சென்னை, டிச. 15 -

மிக்ஜாம்புயல்காரணமாக சென்னைஉள்ளிட்டநான்கு மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.6 ஆயிரம் வழங்கப்படுவது குறித்து தமிழக அரசின் அரசாணை வெளியாகியிருக்கிறது.

தமிழகத்தில் டிசம்பர் 3, 4ஆம் தேதிகளில் வீசிய மிக்ஜாம்புயல்மற்றும்அதன்காரணமாக சென்னையில் அதிகனமழை பெய்தது. மேலும் செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களிலும் குறிப்பிட்ட சில வட்டங்களில்கனமழைபெய்தது. இதனால் மக்களுக்கு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டு வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது.

இந்த நிலையில், மிக்ஜாம் புயல்காரணமாகவாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவித் தொகையாக ரூ.6 ஆயிரம் ரொக்கமாக வழங்கப்படும் என்று தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார்.

நிவாரணஉதவித்தொகை வழங்குவது குறித்து தமிழக அரசுஇன்றுஅரசாணைபிறப்பித்துள்ளது.அந்தஅரசாணையில்,வீடுகளுக்குள்வெள்ளம் புகுந்து, துணிகள், பாத்திரங்கள், வீட்டு உபயோகப் பொருள்களை இழந்தவர்களுக்கு நிவாரணத்தொகை வழங்கப்படும் என்றும், வீடுகளுக்குள் இரண்டு நாள்கள் வெள்ளம் தேங்கி பாதிக்கப்பட்டவர்களுக்குரூ.6ஆயிரம் வழங்கப்படும்என்றும்விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

அந்தஅரசாணையின்படி, சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து வட்டங்களில் வசிப்பவர்களுக்கும் நிவாரணத்தொகைவழங்கப்படும் என்றும்,

காஞ்சிபுரம் மாவட்டத்தில் குன்றத்தூர் வட்டத்தில் வசிப்பவர்களுக்கும் முழுமையாகநிவாரணத்தொகைவழங்கப்படும்என்றும்,ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் மூன்று வருவாய் கிராமங்களுக்கும்,

செங்கல்பட்டுமாவட்டத்தில் தாம்பரம், பல்லாவரம், வண்டலூர் வட்டங்களுக்கு உள்பட்ட பகுதிகளில் வசிப்போருக்குநிவாரணதொகை வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், திருப்போரூர் வட்டத்தில் மூன்று வருவாய் கிராமங்களுக்கும்,

திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, ஆவடி, பூந்தமல்லி, ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் ஆகிய ஆறு வட்டங்களில் வசிப்போருக்கு நிவாரணத் தொகை கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில், இந்த புயல் மற்றும் அதிகனமழைகாரணமாகசில பகுதிகளில் ஏ.டி.எம் மையங்கள்இயங்காததாலும்,பயனாளர்களின் வங்கிக் கணக்கு எண்களை சேகரித்து நிவாரணம் வழங்க காலதாமதம் ஆகும் என்பதாலும் ரொக்கமாக வழங்கப்படுவதாகவும், மேலும்,பாதிக்கப்பட்டபலர் தங்களது ஏ.டி.எம் அட்டை, வங்கிக் கணக்கு விவரங்கள் ஆகியவற்றை இழந்திருக்கக் கூடும் என்பதாலும், அவர்களுக்குஉடனடியாகபயனளிக்கும் வகையில் நிவாரணத் தொகையினை ரொக்கமாக வழங்கலாம் என ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, வெள்ள நிவாரணத் தொகையைசம்பந்தப்பட்ட நியாயவிலைக்கடைகள்மூலமாக ரொக்கமாக வழங்கப்படலாம் என்றும், நெரிசலைக் குறைக்கும் வகையில் டோக்கன்களை முன்னதாகவே கூட்டுறவுத் துறை மூலம் வழங்கவும்பரிந்துரைத்துள்ளார்.

மேலும்,சர்க்கரைஅட்டை மற்றும் வரி செலுத்துவோர், அரசுப்பணியில்இருப்போர், தங்களின் பாதிப்பு விவரங்களையும்,வங்கிக்கணக்குஎண் ஆகியவற்றைதெரிவித்துநிவாரணத் தொகையினை பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல்லில் இருந்து ரூ. 2 கோடியே 2 லட்சத்தில் வெள்ள நிவாரணப் பொருட்கள்!

# திருவொற்றியூரில் 20 ஆயிரம் குடும்பத்தினருக்கு வினியோகம்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தகவல்!

நாமக்கல், டிச. 15 -

நாமக்கல்லில்இருந்து"மிக்ஜாம்" புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டரூ.2கோடியே 2லட்சம்மதிப்பிலானவெள்ள நிவாரணப் பொருட்கள் திருவொற்றியூர் பகுதியில் உள்ள 20ஆயிரம்குடும்பத்தினருக்கு வினியோகம் செய்யப்பட்டுள்ளதாக நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும்,மாநிலங்களவைஉறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தெரிவித்தார்.

இது குறித்து, நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் நாமக்கல் கிழக்கு மாவட்ட அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் பேசுகையில், தமிழ்நாட்டில் வடகிழக்குப்பருவமழைதொடங்கிய பின்னர், கடந்த வாரம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில், குறிப்பாக, சென்னை, காஞ்சிபுரம்,திருவள்ளூர்மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில்,வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள 'மிக்ஜாம்" புயல்காரணமாக,தொடர்ந்து பெய்துவந்த வரலாறு காணாத மழையால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையானமீட்புமற்றும்நிவாரண நடவடிக்கைகளைதமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது.சென்னை,திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டுஆகியமாவட்டங்களில் இந்தபுயல்மழையின்தாக்கம் மிக அதிகமாக ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி, பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மேற்பார்வையில் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு உடனடியான தேவையான நிவாரணம் வழங்கப்பட்டு வருவதுடன், சீரமைப்புப் பணிகளும்போர்க்காலஅடிப்படையில் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. சென்னை மாநகராட்சியில் உள்ள ஒவ்வொரு மண்டலத்திற்கும், ஒரு இந்திய ஆட்சிப் பணி அலுவலரும், தாம்பரம் மற்றும் ஆவடி மாநகராட்சிகளுக்கென தலா ஒரு இந்திய ஆட்சிப்பணிஅலுவலரும்நியமிக்கப்பட்டு,அவர்கள்அனைவரும் களத்தில் பணியாற்றி வருகின்றனர்.

சென்னைமாநகரில்உள்ள திருவொற்றியூர் பகுதியில், மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதியில் மீட்பு பணி மற்றும் நிவாரண பணி மேற்கொள்ள,திருவொற்றியூர்பகுதியில், வனத்துறைஅமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மாநிலங்களவைஉறுப்பினராகிய நான் மற்றும் சட்டப் பேரவைஉறுப்பினர்பெ.ராமலிங்கம், நாமக்கல் நகராட்சி துணைத் தலைவர் செ.பூபதி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி.விஸ்வநாத் மற்றும் போக்குவரத்துதுறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்தலைமையிலானகுழுவினரும்அங்குமீட்புப்பணிகளையும்,நிவாரணப்பணிகளையும் மேற்கொண்டனர்.இதற்காக பல்வேறு மாவட்டங்களில் இருந்துதீயணைப்புவீரர்கள், தூய்மை பணியாளர்கள் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "இயற்கையின் கோரத் தாண்டவத்தை மனிதத்தின் துணைகொண்டு வெல்வோம்! அரசோடு கரம் கோத்து சகமனிதரின் துயர் துடைத்திட தொண்டுள்ளம் படைத்த எல்லோரும் ஓரணியாய்திரளகரம்கூப்பிஅழைக்கிறேன்." என வேண்டுகோள் விடுத்துள்ளதை தொடர்ந்து நாமக்கல்மாவட்டநிர்வாகம் சார்பில் கடந்த 05.12.2023 அன்று முதல் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, 15க்குட்பட்ட புழுதிவாக்கம், திருவொற்றியூர், மணலி, வளசரவாக்கம், தண்டையார்பேட்டை, காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஆகிய பகுதிகளுக்கு 10.12.2023 அன்று வரை மொத்தம்31கனரகவாகனங்களில் பால் பவுடர், பிஸ்கட், ரொட்டி, அரிசி, சமையல் எண்ணெய்,ரவைஆகியசமையல் பொருட்கள் மற்றும் பிரட்,பாய்,போர்வை,கைலி, சோப்,துண்டு,தேங்காய்எண்ணெய், நாப்கின், நைட்டி, மெழுகு,தீப்பெட்டி,மெழுகு வர்த்திகள்,தண்ணீர்பாட்டில் உள்ளிட்டரூபாய்1கோடியே 88இலட்சத்து62ஆயிரத்து837 மதிப்பீட்டில் அதிகபட்சமான நிவாரண பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் சமூக பொறுப்பு நிதியாக மாவட்ட நிர்வாகம் சார்பிலும், கல்வி நிறுவனங்கள்,தொழில்நிறுவனங்கள், சமூக தொண்டு நிறுவனங்கள், பல்வேறு அரசுத் துறை, தனியார் நிறுவ னங்களின்மூலமாகரூ.14.50லட்சம் நிவாரண நிதி என மொத்தம் ரூ.2.02கோடிமதிப்பில்31கனரக வாகனங்களில் நிவாரண பொருட்கள் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அதற்கான பணியை நாமக்கல்மாவட்டஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா சிறப்பாக செய்து, சென்னைக்கு அனுப்பிவைத்தார். சென்னைக்கு நிவாரணப் பொருட்கள் முதன் முதலில் நாமக்கல் மாவட்டத்தில் இருந்துதான்வந்துசேர்ந்தது. இந்த பொருட்களை திருவெற்றியூர் பகுதியில் வசிக்க கூடிய 20 ஆயிரம் குடும்பத்தினருக்கு அரிசி, பருப்பு, எண்ணைய் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் அனைத்தும் பொதுமக்களுக்கு வினியோகம் செய்யப்பட்டது.நாமக்கல்மாவட்டத்தில் இருந்து வந்த நிவாரணப் பொருட்கள் பெருமளவுதிருவொற்றியூர் மற்றும் மணலி பகுதிக்கு வழங்கப்பட்டது.

குறுகிய நாட்களில் ரூ 2.02 கோடி மதிப்பிலான நிவாரணப்பொருட்களைவழங்கிய மாவட்டத்தை சேர்ந்த தொழில் நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள், சமூக அமைப்புகள், கல்வி நிறுவனங்களுக்கும், நிவாரண ப் பொருட்களை முறையாக அனுப்பி வைக்க முயற்சி எடுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா மற்றும் அனைத்து துறை சார்ந்த அலுவலர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன். தற்போது திருவெற்றியூர் பகுதியில் மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்பியுள்ளது.

கடந்த ஒரு வாரகாலமாக திருவொற்றியூரில்முகாமிட்டு மீட்பு பணியில் ஈடுபட்டோம். எங்களுடன் போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்களும் பணியாற்றினார். திருவெற்றியூரில் மீட்பு பணியில் எங்களுடன்நாமக்கல்கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த தி.மு.க. நகர,ஒன்றிய,பேரூர் செயலாளர்கள், இளைஞர் அணி நிர்வாகிகளும் பணியாற்றினார்கள்.

இவ்வாறு ராஜேஸ்குமார் எம்.பி. தெரிவித்தார். பேட்டியின் போது, நகர்மன்ற துணைத் தலைவர் பூபதி, நாமக்கல் ஒன்றியக் கழகச் செயலாளர் வி.கே.பழனிவேல், மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன், நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் விஸ்வநாத் ஆகியோர் உடனிருந்தனர்.



மிக்ஜாம் புயல் – கன மழையைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு எடுத்து வரும் நிவாரணப் பணிகளை மேலும் வலுப்படுத்துகிற வகையில் பல்வேறு தரப்பினரும் நிதியுதவி அளித்து வருகின்றனர். அந்த வகையில், அரசின் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக 'முதலமைச்சரின் பொது நிவாரண நிதி'–க்கு திரைப்பட நடிகர் விஷ்ணு விஷால், ரூ.10 லட்சத்துக்கான காசோலையை நேற்று முன்தினம் கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்.



இயற்கைப் பேரிடரால் மக்கள் சந்தித்த இன்னலை தீர்க்க, கழக அரசு எடுத்து வரும் முயற்சிகளுக்கு பலரும் நிதியளித்து துணை நின்றுவரும் நிலையில், சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதிக் கழக பொருளாளர் கமலக்கண்ணன், ரூ.2 லட்சத்திற்கான காசோலையை 'முதலமைச்சரின் பொது நிவாரண நிதி'க்கு கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு உள்ளார்.

கோவா விமான நிலையத்தில்

# தமிழ்ப் பெண்ணிடம் இந்தியில் பேசச் சொல்லி மிரட்டல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

சென்னை, டிச. 15–

கோவா விமான நிலையத்தில் இந்தியில் பேசச் சொல்லி தமிழ்ப் பெண் ஒருவருக்கு ஏற்பட்ட நிகழ்விற்கு கண்டனம் தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

கோவா விமான நிலையத்தில் தமிழ்ப் பெண் ஒருவரிடம் இந்தியில் பேசி, அவர் இந்தி தெரியாது என்று சொன்னதும் மத்திய தொழில் பாதுகாப்பு படை வீரர் ஒருவரால் மிரட்டப்பட்டுள்ளார். "தமிழ்நாடு இந்தியாவில்தானே இருக்கிறது" என்றும், "இந்தியாவில் உள்ள அனைவரும் இந்தியைக் கற்றாக வேண்டும்" என்றும் பாதுகாப்புப் படை வீரர் பாடம் எடுத்துள்ளார். இது கடும் கண்டனத்துக்குரியது.

இந்தி அலுவல் மொழியே தவிர தேசிய மொழி யல்ல என்று அவருக்கு யார் சொல்வது?

பல்வேறு மொழி பேசும் மக்களின் கூட்டாட்சி நாடு இந்தியா. கூட்டாட்சித் தன்மையை வலியுறுத்தும் வகையில்தான் மத்தியத் தொழில் பாதுகாப்புப் படை வீரர்கள் செயல்பட வேண்டும். விமான நிலையங்களில் அனைத்து மொழிகளுக்கும் உரிய மதிப்பும் மரியாதையும் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ்நாட்டுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் படிப்படியாக குறைப்பு:

## மக்களவையில் கனிமொழி கருணாநிதி கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் ஒப்புதல்!



புதுடெல்லி, டிச. 15 -

தமிழ்நாட்டுக்குவழங்கப்படவேண்டியமண்ணெண்ணெயின் அளவை ஒன்றிய அரசு கடந்த ஐந்து ஆண்டுகளாக குறைத்திருக்கிறதா? அப்படியென்றால் கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டுக்குவிநியோகிக்கப்பட்ட மண்ணெணெயின் அளவுபற்றியவிவரங்களைத் தாருங்கள்.

மண்ணெண்ணெய் விநியோக அளவை அதிகரிக்குமாறு தமிழ்நாடு வைத்து வரும் கோரிக்கையை ஒன்றியஅரசுஅறிந்திருக்கிறதா? தமிழ்நாட்டின் இந்த கோரிக்கை தொடர்பாக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் என்னென்ன?" என்ற கேள்விகளை தி.மு.க. துணைப்பொதுச்செயலாளரும், மக்களவை தி.மு.க. துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எழுத்துபூர்வமாக எழுப்பியிருந்தார்.

இந்தக் கேள்விகளுக்கு ஒன்றிய பெட்ரோலியம், இயற்கை எரிவாயுத் துறை இணை அமைச்சர் ராமேஷ்வர் டேலி அளித்த பதிலில் கூறியிருப்பதாவது:-

"இந்திய அரசு பொது விநியோகத் திட்டத்தின் மூலம் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு காலாண்டுக்கு ஒருமுறை என்ற அடிப்படையில் மண்ணெண்ணெய் விநியோகம் செய்து வருகிறது. சமையல் தற்கும், விளக்குஎரிப்பதற்கு மான தேவைக்காக இந்த விநியோகம் செய்யப்படுகிறது.

இந்த நிலையில் 2010-11 ஆண்டுகளில் இருந்தே பொது விநியோகத்திட்டத்தின் கீழான மண்ணெண்ணெய் விநியோகம் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. மண்ணெண்ணெய் எரிப்பதால்ஏற்படும்மாசுபடுதலை கணக்கில்கொண்டும், சமையல் கேஸ் பயன்பாடு அதிகரித்ததாலும், மின்சாரபயன்பாடு அதிகரித்ததாலும், மாநிலங்கள் பல பொது விநியோகத்தில் மண்ணெண்ணெய் விநியோகத்தை ஊக்குவிக்காததாலும் மண்ணெண்ணெ விநியோகம் படிப்படியாக குறைக்கப்பட்டு வருகிறது. தற்போதைய நிலையில் நாட்டில்12மாநிலங்கள்மற்றும் யூனியன் பிரதேசங்கள் தாங்கள்மண்ணெண்ணெய் பயன்படுத்தாதபகுதிகளாக பிரகடனம் செய்துள்ளன.

அதேநேரம்ஒன்றியஅரசு மாநில அரசுகளுக்கும், யூனியன்பிரதேச அரசுகளுக்கும் இயற்கை சீற்ற காலங்கள், மத நிகழ்ச்சிகள், மீனவர்களுக்கான பயன்பாடு உள்ளிட்ட காரணங்களுக்காக தேவைக்கேற்பமாதாமாதம் மானியமற்ற விலையிலும் கூடுதல் மண்ணெண்ணெயை வழங்கி வருகிறது.

இருப்பினும் தமிழ்நாடு போன்ற சில மாநிலங்களில் இருந்துமண்ணெண்ணெய் விநியோகத்தை அதிகரிக்க வேண்டும்என்றுகோரிக்கைகள் வந்துள்ளன. இந்த கோரிக்கைகள் மேற்குறிப்பிட்டகாரணங்களின்அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டுவழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டுக்கு கடந்த 2018-19 ஆம் ஆண்டில் பொதுவிநியோகமுறையில் 1 லட்சத்து 93 ஆயிரத்து 776 கிலோ லிட்டரும், மானியமற்றவிலையில்17ஆயிரத்து 040 லிட்டரும் ஒதுக்கீடு செய்யப்பட்டன. 2019-20 நிதியாண்டில் பொது விநியோகத் திட்டத்தில் 1 லட்சத்து45ஆயிரத்து320கிலோ லிட்டரும், மானியமற்ற விலையில் 16 ஆயிரத்து 140 கிலோ லிட்டரும் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

2020-21ஆம்நிதியாண்டில் பொது விநியோகத் திட்டத்தில் 1 லட்சத்து 29 ஆயிரத்து 168கிலோலிட்டரும், மானியமற்ற விலையில் 12 ஆயிரத்து 108 கிலோ லிட்டரும் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

2021-22ஆம்நிதியாண்டில் பொது விநியோகத் திட்டத்தில் 90 ஆயிரத்து 432 கிலோ லிட்டரும், மானியமற்றவிலையில்10ஆயிரத்து 764 கிலோ லிட்டரும் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

2022-23 நிதியாண்டில் பொது விநியோகத் திட்டத்தில் 54 ஆயிரத்து 240 கிலோலிட்டர்மண்ணெண்ணெயும், மானியமற்ற விலையில்7,536கிலோலிட்டரும்ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது"

இவ்வாறுஇணைஅமைச்சர் பதிலளித்துள்ளார்.

தலைமைக் கழகப் பாடகர்

# நாகூர் ஈ எம்.ஜெக்கரியாவின் தாயார் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

நாகை, டிச. 15 -

நாகை மாவட்டம் நாகூரைச் சேர்ந்த தி.மு.க. தலைமைக் கழக பாடகர் நாகூர் ஈ எம்..ஜெக்கரியாவின் தாயார் சேத்த உம்மனை வயது (வயது 75) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

நாகூர் சிவன் சன்னதியில் வைக்கப்பட்ட அம்மையாரின் உடலுக்கு கழகத்தினர் ஏராளமானவர்கள் அஞ்சலி செலுத்தினார்கள்.



நாமக்கல்லில் இருந்து "மிக்ஜாம்" புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட ரூ. 2 கோடியே 2 லட்சம் மதிப்பிலான வெள்ள நிவாரணப் பொருட்கள் திருவொற்றியூர் பகுதியில் உள்ள 20 ஆயிரம் குடும்பத்தினருக்கு வினியோகம் செய்யப்பட்டுள்ளதாக நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இந்நிகழ்வில் நகர்மன்ற துணைத் தலைவர் பூபதி, நாமக்கல் ஒன்றியக் கழகச் செயலாளர் வி.கே.பழனிவேல், மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன், நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் விஸ்வநாத் ஆகியோர் உடனிருந்தனர்.

### சென்னையில் ஆளுநர் மாளிகைக்கு வெளியே ஒருவர் பெட்ரோல் குண்டு வீசியபோது - சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்று கூச்சலிட்டவர்கள்

# நாடாளுமன்றத்துக்குள்ளேயே புகைக்குண்டு வீசப்பட்டுள்ளபோது எங்கே போனார்கள்?

## ‘சன் செய்திகள்’ தொலைக்காட்சியின் ‘கேள்விக்களம்’ விவாத நிகழ்ச்சியில் - ஆளூர் ஷாநவாஸ் எம்.எல்.ஏ. கேள்வி!



மு. குணசேகரன்
நெறியாளர்



ஆளூர் ஷாநவாஸ் எம்.எல்.ஏ.
விடுதலைச் சிறுத்தைகள் கட்சி

சென்னை, டிச.15-

**“சென்னையில் ஆளுநர் மாளிகைக்கு வெளியே ஒருவர் பெட்ரோல் குண்டு வீசிய போது-சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்று கூச்சலிட்டவர்கள் நாடாளுமன்றத்துக் குள்ளேயே புகைக்குண்டு வீசப்பட்டுள்ள போது எங்கே போனார்கள்?” என்று ‘சன்’ செய்திகள் தொலைக்காட்சியின் ‘கேள்விக் களம்’ விவாத நிகழ்ச்சியில் பங்கேற்ற ஆளூர் ஷாநவாஸ் எம்.எல்.ஏ. கேள்வி எழுப்பினார்.**

இந்தியாவினுடைய மிகப் பாதுகாப் பான கட்டடம் என்று கருதக்கூடிய நாடாளு மன்றத்தின் மக்களவைக்குள் நான்கு பேர் சென்று, அதில் இரண்டு பேர் பார்வையா ளர் மாடத்திலிருந்து தாவிச் சென்று முழக் கங்களை எழுப்பி, வண்ணப் புகைக் குண் டுகளைப் பயன்படுத்தி தாக்குதலை நடத்தி இருக்கிறார்கள்.

இதுகுறித்து நேற்று முன்தினம் (13.12.2023) ‘சன்’ செய்திகள் ‘கேள்விக் களம்’ விவாத நிகழ்ச்சியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற உறுப்பி னர் ஆளூர் ஷாநவாஸ் கூறியதாவது:-

**நீங்கள்தான் சொன்னீர்கள், காந்தியடிகள் படுகொலை பற்றியும், இந்திரா காந்தி படுகொலை பற்றியும், ராஜீவ் காந்தி படுகொலைபற்றியும் அதனுடைய தொடர்ச்சியாக ராகுல் காந்திக்கு அச்சுறுத்தல் இருக்கிறதா, இல்லையா? இன்றைக்கு ராகுல்காந்தி தான் கவனிக்கப்படுகின்ற தலைவர். இன்றைய பி.ஜே.பி. ஆட்சியை அகற்றுவதற்கு இந்தியா முழுவதும் நடைப்பயணம் சென்ற தலைவர். இன்றைக்கு அவர்தான் கவனிக்கப்படக் கூடிய தலைவர்.**

**ஆர்.எஸ்.எஸ்.சுக்கு நேர் எதிர் சித்தாந்தத்தை முன்வைத்து இன்றைக்குக் களத்திற்குப் போகக்கூடிய தலைவர்.காங்கிரஸ் இவ்வளவு நாளும் பேசாத கருத்துகளைப் பேசி, காங்கிரசுக்கு உள்ளேயும் ஒரு மறுசீரமைப்பை கட்டமைத்தி ருக்கின்ற தலைவர்.அப்படிப்பட்டவர் இன்றைக்கு நாட்டிற்குத் தேவையானவராக இருக்கிறார். அவருடைய உயிருக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் இருக்கிறது. அப்படிப்பட்டவர் அவைக்குள் இருக்கும்பொழுது, இப்படிப்பட்ட சம்பவம் நடக்கிறது என்றால், அதுவும் புதிய நாடாளுமன்றத்திற்குள் நடக்கிறது என்றால், அதைப் பற்றி கேள்வி கேட்கக்கூடாதா?**

காந்தியடிகள் திட்டமிட்ட சதியின் காரண மாகக் கொல்லப்பட்டார். இந்திரா காந்தி திட் டமிட்ட சதியின் காரணமாகக் கொல்லப்பட் டார். ராஜீவ் காந்தியும் திட்டமிட்ட சதியின் காரணமாகக் கொல்லப்பட்டார்.

### இந்நிகழ்விற்கும் சதி உண்டா?

முன்பு, நாடாளுமன்றத் தாக்குதலும் பி.ஜே.பி.யின் ஆட்சியின்போது சதியின் காரணமாக நடந்தது.

இப்பொழுது மீண்டும் நாடாளுமன்றத் தின்மீது தாக்குதல் நடத்தப்பட்டு இருக்கிறது பா.ஜ.க. ஆட்சியில். இந்நிகழ்விற்கும் சதி உண்டா? இல்லையா? என்பதுதான் இப் பொழுது ஆய்வுக்கு உரியது.

நான் ஒரு சட்டமன்ற உறுப்பினர். மூன்று மாதங்களுக்கு முன்பு நாடாளு மன்றத்தைப் பார்ப்பதற்காகச் சென்றேன். புதிய நாடாளுமன்றம் அப்பொழுது பூட்டப் பட்டு இருந்தது, அனுமதிக்கப்படவில்லை. பழைய நாடாளு மன்றக் கட்டடத்தைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப் பட்டோம். அதற் கும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரிந் துரைக் கடிதம் பெற்று, சட்டமன்ற உறுப் பினரின் அடையாள அட்டைகளையும் பெற்று, எல்லா தகவல்களையும் பெற்று, முறையான பரிசோதனை நடத்தப்பட்டு, அதற்குப் பிறகு, கூடவே ஒருவர் வந்து, நாடாளுமன்ற மாடத்தில் இருந்து, நாடா ளுமன்ற அவை நடவடிக்கைகளைப் பற்றி விவரித்தார். அப்பொழுது நாடாளுமன்றம் நடைபெறவில்லை.

### சட்டமன்ற உறுப்பினருக்கே இவ்வளவு கெடுபிடி!

நாடாளுமன்றம் நடைபெறாத நிலை யில், பழைய நாடாளுமன்றத்தைப் பார்ப் பதற்கே ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு இவ்வளவு கெடுபிடி இருந்தது. அவ்வளவு சோதனைகளுக்குப் பிறகு, என்னுடைய ஆவணங்களையெல்லாம் சரிபார்த்த பிற குதான், என்னை அனுமதித்தார்கள். என் னுடன் ஒருவரையும் அனுப்பி வைத்தனர்.

புதிய நாடாளுமன்றத்தைப் பார்ப்பதற்கு அனுமதி இல்லை அப்பொழுது.

அப்படியென்றால், இந்த அளவிற்குப் பாதுகாப்பு அங்கே இருக்கிறது என்பதை இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பு நானே பார்த்தேன்.

தமிழ்நாடு சட்டமன்றத்திற்குள் பார்வை யாளர்களை அனுமதிக்கப்படுகிறார்கள். நாங்கள் ஒரு கடிதம் கொடுப்போம். பரிந் துரை செய்யப்பட்ட ஆட்களை உள்ளே அனுமதிக்கிறார்கள். தனியே ஒரு மாடம் இருக்கிறது, அதில் முன்னுரிமையின் அடிப் படையில் பொது ஆட்களை அனுமதிக்கி றார்கள். அந்தப் பொதுவான மாடத்தில், பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

ஆனால், அங்கே இருந்து யாரும் எதை யும் தூக்கி அவைக்குள் எறிய முடியாது.

காரணம், இடைப்பட்ட பகுதி யில் ஒரு வலை அமைக்கப் பட்டு இருக்கிறது.

நான் பிரிட்டிஷ் நாடாளுமன் றத்தின் நடவடிக்கையை நேரில் பார்த்திருக்கிறேன். இங்கே சட்ட மன்றத்தையும், நாடாளுமன் றத்தையும் கட்டியவர்கள்தான் அவர்கள். அங்கே உள்ள பிரிட் டிஷ் நாடாளுமன்றம் எப்படி கட்டப்பட்டு இருக்கிறதோ, அதே போலதான், இங்கேயும் கட்டி இருக்கிறார்கள்.

மாடத்தில் ஒரு கண்ணாடி வைத்திருக்கிறார்கள்; அங்கே இருந்து அவை நடவடிக்கையைப் பார்க்க லாமே தவிர, அவையில் பேசுவது எதுவும் கேட்காது. எதையும் தூக்கி அவையின் உள்ளே போட முடியாது. அந்த அளவிற் குப் பாதுகாப்போடு அந்த நாடாளுமன்றம் வடிவமைக்கப் பட்டு இருக்கிறது.

ஏற்கெனவே நம்முடைய நாட்டில் உள்ள நாடாளுமன்றக் கட்டடத்தில் பார்வையாளர் மாடம் என்பது அவ்வளவு உயரமாக இருக்கிறது.

### எப்படி போனார்கள் என்பது பெரிய கேள்வி!

புதிதாக இவர்கள் வடிவமைத்து கட் டியுள்ள நாடாளுமன்றத்தில், நாடாளு மன்றம் நடைபெற்றுக் கொண்டிருக் கும்பொழுதே, எப்படி ஆவணங்கள் இல்லாமல், கைகளில் ஒரு பொருளையும் தூக்கிக் கொண்டு உள்ளே போனார்கள்? யார் என்று முகம் தெரியாதவர்கள் எப்படி போனார்கள் என்பது மிகப்பெரிய கேள்வி.

ஆகவே, இதற்குப் பின்னால் ஒரு சதி இருக்கிறது என்ற சந்தேகம் நமக்கு வருகிறது.

பூட்டப்பட்ட நாடாளுமன்றத்திற்குள்ளே கூட ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருக் கின்ற நான் செல்லமுடியவில்லை, அனு மதி இல்லை என்று சொல்லிவிட்டார்கள். பழைய நாடாளுமன்றக் கட்டடத்தைப் பார்ப்பதற்குக்கூட ஆவணங்களை சரி பார்த்து, பூட்டப்பட்டிருக்கின்ற நாடாளுமன் றம், இனி செயல்பாட்டில் இல்லாத நாடா ளுமன்றம், வெறும் கட்டடம் அந்தக் கட் டடத்தைப் பார்ப்பதற்குக்கூட அவ்வளவு செக்யூரிட்டி, ஆவணங்களை வாங்கிப் பார்த்துத்தான் உள்ளே அனுமதித்தார்கள்.

### வரவழைக்கப்பட்டார்களா என்பதுதான் கேள்வி!

அவை நடவடிக்கைகள் இல்லாத நாள் களிலேயே அப்படி என்றால், அவை நட வடிக்கை நடைபெறுகின்ற நாளில், அதுவும் நாடாளுமன்றத் தாக்குதல் நாளில், ஆவ ணங்கள் சரிபார்க்கப்படாமல், கையில் பொருளோடு, ஒரு அச்சுறுத்தலை ஏற்ப டுத்தக்கூடிய பொருளோடு எப்படி உள்ளே வந்தார்கள். உள்ளே வந்தார்களா? வரவ ழைக்கப் பட்டார்களா? என்பதுதான் இப் பொழுதைய கேள்வி.

அவையில் பிரதமர் இல்லை, உள் துறை அமைச்சர் இல்லை. ராகுல் காந்தி இருக்கிறார். அப்படியென்றால், ராகுல் காந் திக்கு வைக்கப்பட்ட குறியா? என்கிற சந்தே கமும் வருகிறது அல்லவா!

இந்தக் கேள்வியை முன்வைக்க வேண்டியது எங்கள் கடமை!

எப்படி அவர்கள் உள்ளே வந்தார்கள் என்று பதில் சொல்லுங்கள்!

யாராலும் எளிதில் நாடாளுமன்றக் கட்டடத்திற்குள் போக முடியாது என்கிற பொழுது, இளைஞர்கள் எப்படி உள்ளே வந்தார்கள்? அதுவும் நாடாளுமன்றம் நடக்கும்பொழுதே நாடாளுமன்றம் தாக் கப்பட்ட நாளில்?

### அமிலக் குண்டாக இருந்தால் என்னவாகியிருக்கும்?

வண்ணப் புகைக் குண்டு மட்டும் வெடிக்கப்படாமல், அமிலக் குண்டாகவோ அல்லது வேறு ஏதாவது பொருளாக இருந் திருந்தால், என்னவாகியிருக்கும்?

அப்படியென்றால் நாங்கள் முன்வைக் கின்ற கேள்விக்குப் பொருள் வந்துவிடும் அல்லவா!

ராகுல் காந்தி அவையில் இருக்கிறார். கைகளில் உயிருக்கு அச்சுறுத்தக் கூடிய பொருளோடு சிலர் வந்திருந்தால் என்ன வாகியிருக்கும். அதற்கு என்ன சொல்வீர் கள்? அதுபோன்று நடக்கவில்லை என்ப தால், இல்லை என்றாகிவிடுமா?

உள்ளே வருவதற்கு அவர்களுக்கு எப் படி அனுமதி கிடைத்தது? பரிந்துரை கடிதம் கொடுத்திருப்பது பி.ஜே.பி. எம்.பி.

தமிழ்நாட்டில், ஆளுநர் மாளிகைக்கு வெளியே, சாலையில் பெட்ரோல் குண்டு வீசியவரை ஜாமீனில் எடுத்தது பி.ஜே.பி. வழக்குரைஞர்.

எப்படி இவையெல்லாம் ஒவ்வொன்றாக சேருகிறது. எப்படி இவையெல்லாம் ஒரே மய்யப்புள்ளியில் சந்திக்கின்றது.

தமிழ்நாட்டில் ஆளுநர் மாளிகைக்கு முன்னால், ரோட்டில், ஒருவன் பெட்ரோல் வெடிகுண்டு வீசியதை ஆளுநர் மாளிகை மீது தாக்குதல் என்று சொன்னீர்கள்.

# “ராகுல் காந்திக்கு வைக்கப்பட்ட குறியா?” என்கிற சந்தேகமும் எழுகிறது!

ஆளுநர் அவர்கள் மிகப்பெரிய அறிக் கையை விட்டார். கடைசியில் என்னா யிற்று? அந்த இடத்திலேயே குண்டு எறிந் தவனை கையும், களவுமாக மடக்கிப் பிடித்தது தமிழ்நாடு காவல்துறை. சட்டம் - ஒழுங்கு அந்த இடத்திலேயே நிலைநாட் டப்பட்டது.

### சட்டம் - ஒழுங்கை நிலை நாட்டினீர்களா?

இன்றைக்கு டில்லியில் சட்டம் - ஒழுங்கை நிலை நாட்டினீர்களா?

யார் அவர்களை மடக்கிப் பிடித்தது?

டில்லி காவல்துறை பிடித்ததா?

நாடாளுமன்றக் காவலர்கள் பிடித் தார்களா?

இல்லை!

நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் பிடித்தனர். காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் பிடித்தார்கள்.

தமிழ்நாட்டில், ஆளுநர் மாளிகையில் உள்ளவர்கள் பிடித்தார்களா? தமிழ்நாடு காவல்துறை பிடித்ததா?

**எனவே, இது முழுக்க முழுக்க ஒன்றிய அரசின் தோல்வி முழுக்க முழுக்க பாதுகாப்பு குறைபாடு.**

**முழுக்க முழுக்க இதை விசாரிக்க வேண்டும். இதற்குப் பொறுப்பேற்று பிரதமர் பதவி விலகவேண்டும் உள்துறை அமைச்சர் பதவி விலக வேண்டும்!**

தமிழ்நாட்டில் நடைபெற்றது ரோட்டிற்கு வெளியேதான்.

ஆனால், டில்லியில் நடைபெற்றது நாடா ளுமன்றத்திற்குள்ளே நடைபெற்றுள்ளது.

சம்பந்தப்பட்ட நபர்கள், இன்றைக்கு முஸ்லிம்களாக இருந்திருந்தால், இதனு டைய எதிர்வினை என்னவாக இருக்கும்?

பரிந்துரை கடிதம் கொடுத்தவர் காங்கி ரஸ் கட்சி எம்.பி.,யாகவோ, தி.மு.க. எம். பி.,யாகவோ அல்லது எங்கள் கட்சி எம். பி.,யாகவோ, எங்கள் தலைவரோ கொடுத் திருந்தால், இன்றைக்கு என்னவாகி இருக் கும்?

அதேபோல், இன்றைக்கு இந்தப் பிரச் சினையில் பிரதமர் அவையில் இருந்து, உள்துறை அமைச்சரும் உள்ளே இருந்து இந்தச் சம்பவம் நடந்திருந்தால், அதனு டைய விளைவு எப்படி இருந்திருக்கும்?

### ஆளைப் பொறுத்துதான் நடவடிக்கையா?

அப்படியென்றால், நீங்கள், ஆளைப் பொறுத்து, சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களின் பெயர்களைப் பொறுத்து, யாருடைய ஆட்சி என்பதைப் பொறுத்து தானா?

காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் இப்படி நடந்திருந்தால், எதிர்க்கட்சித் தலைவராக மோடியோ, அமித்ஷாவோ இருந்திருந் தால் என்னவாகி இருக்கும்?

மோடிக்கு பஞ்சாபில் நடந்த நிகழ்வை எப்படி கட்டமைத்தார்கள்?

மோடியின் உயிருக்கே அச்சுறுத்தல் என்று சொன்னார்கள்.

ராகுல் காந்தியின் உயிருக்கு அச்சுறுத் தல் என்றால், அப்படி சொல்லக்கூடாது என்று சொல்கிறார்கள்.

ஏன் ராகுல் காந்தியின் உயிருக்கு அச்சுறுத்தல் இல்லையா?

### ராகுல் காந்திக்கு அச்சுறுத்தல் இருக்கிறதா, இல்லையா?

நீங்கள்தான் சொன்னீர்கள், காந்தியடி கள் படுகொலை பற்றியும், இந்திரா காந்தி படுகொலை பற்றியும், ராஜீவ் காந்தி படு கொலைபற்றியும் அதனுடைய தொடர்ச்சி யாக ராகுல் காந்திக்கு அச்சுறுத்தல் இருக்கி றதா, இல்லையா?

இன்றைக்கு ராகுல்காந்தி தான் கவனிக் கப்படுகின்ற தலைவர். இன்றைய பி.ஜே. பி. ஆட்சியை அகற்றுவதற்கு இந்தியா முழுவதும் நடைப்பயணம் சென்ற தலை வர். இன்றைக்கு அவர்தான் கவனிக்கப்ப டக் கூடிய தலைவர்.

ஆர்.எஸ்.எஸ்.சுக்கு நேர் எதிர் சித்தாந் தத்தை முன்வைத்து இன்றைக்குக் களத் திற்குப் போகக்கூடிய தலைவர்.

காங்கிரஸ் இவ்வளவு நாளும் பேசாத கருத்துகளைப் பேசி, காங்கிரசுக்கு உள் ளேயும் ஒரு மறுசீரமைப்பை கட்டமைத் திருக்கின்ற தலைவர்.

அப்படிப்பட்டவர் இன்றைக்கு நாட்டிற் குத் தேவையானவராக இருக்கிறார். அவ ருடைய உயிருக்கு மிகப்பெரிய அச்சுறுத் தல் இருக்கிறது.

அப்படிப்பட்டவர் அவைக்குள் இருக்கும் பொழுது, இப்படிப்பட்ட சம்பவம் நடக்கிறது என்றால், அதுவும் புதிய நாடாளுமன்றத் திற்குள் நடக்கிறது என்றால், அதைப்பற்றி கேள்வி கேட்கக்கூடாதா?

எங்கேயோ, ரோட்டில் நடந்ததுபற்றி தமிழ்நாடு அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று சொன்னீர்களே, முதலமைச்சர் பதவி விலகவேண்டும் என்று சொன்னீர் களே, இன்றைக்கு யார் ராஜினாமா செய் யப் போகிறீர்கள்?

### பிரதமர் மோடி கண்டித்தாரா?

நாடாளுமன்ற நிகழ்வுப்பற்றி இதுவரை ஒரு கண்டனம்கூட வரவில்லையே! நாடா ளுமன்றத்திற்குள் இப்படி ஒரு அவலம் நடைபெற்று இருக்கிறது. ஆழமான தாக் குதல் நடந்திருக்கிறது, நாடாளுமன்றம் தாக்கப்பட்ட நாளில் நடந்திருக்கிறது, இது வரையில் பிரதமர் வாய் திறந்து கண்டித்தி ருக்கிறாரா? உள்துறை அமைச்சர் கண்டித் திருக்கிறாரா?

நாட்டில் உள்ள எல்லா கட்சியும் கண்டித் திருக்கிறது. எல்லா தலைவர்களும் கண் டித்திருக்கிறார்கள்.

ஆனால், இப்படி ஒரு தாக்குதல் நடந்தி ருக்கிறதே, அதைக் கண்டிக்கிறோம் என்று சொன்னார்களா? அவர்கள் பதற வில் லையே ஏன்? பதறாததினுடைய பின்னணி என்ன? என்று நாங்கள் கேட்கிறோம்.

இதற்குப் பதில் வேண்டும் நமக்கு!

வேறு ஆட்சியில் இப்படி நடந்திருந்தால், இப்படி இருந்திருப்பீர்களா?

வேறு மாநில சட்டமன்றத்தில் இப்படி நடந்திருந்தால், உதாரணத்திற்கு, தமிழ் நாடு சட்டமன்றத்தில் இதுபோன்ற காட்சி நடந்திருந்தால், அண்ணாமலை சும்மா விட்டிருப்பாரா? எவ்வளவு பெரிய கருத்துக ளைப் பரப்பி இருப்பார்கள்?

### எதிர்ப்பிரச்சாரம் செய்யும் பா.ஜ.க.!

இப்பொழுதே அவர்களுடைய கருத்தை எப்படி பரப்புகிறார்கள் என்றால், அந்தப் பரிந்துரைக் கடிதத்தை தி.மு.க. எம்.பி., கொடுத்திருக்கிறார் என்று பரப்புகிறார்கள்.

ஆக, அவர்கள் திட்டமிட்டு, இதுபோன்ற சம்பவங்களைக் கட்டமைப்பதும், அப்ப டிப்பட்ட சம்பவங்கள் நடந்த பிறகு அதை தூக்கி எதிர்க்கட்சிகளின்மீது பழியைப் போட்டு, எதிர்ப்பிரச்சாரம் செய்வதும் வழக் கமாகி விட்டது.

இளைஞர்கள் இப்படிப்பட்ட எதிர்மறை யான சிந்தனைகளுக்கு ஆட்படக்கூடாது. இந்த நாடு ஜனநாயக நாடு, எவ்வளவு பெரிய சர்வாதிகாரத்தையும் அறவழியில் நின்று போராடி வீழ்த்திய வரலாறு நமக்கு உண்டு. இந்த நாட்டு விடுதலைப் போராட் டம் அதற்கு சாட்சியாக இருக்கிறது. இந்த நாட்டில் நடந்த சமூகநீதிப் போராட்டம் அதற்கு சாட்சியாக இருக்கிறது.

இந்த நாட்டில் நடைபெற்றுக் கொண்டி ருக்கின்ற மொழி உரிமைப் போராட்டங் கள் அதற்குச் சாட்சியாக இருக்கிறது. இப் பொழுதும் மாநில உரிமைப் போராட்டம் அதற்குச் சாட்சியமாக இருக்கிறது.

ஆளுநரை இன்றைக்குச் சட்டப்படிதான் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம். கூண் டில் நிறுத்தி கேள்வி கேட்டு, இன்றைக்கு ஒவ்வொரு உரிமையையும் நாம் மீட்டுக் கொண்டு வருகிறோம்.

இன்றைக்கு உச்சநீதிமன்றம் ஆளு நரை நோக்கி வைத்திருக்கின்ற கேள்வி உள்பட. ஆகவே, எதிர்மறையான எண் ணங்களுக்குப்போகவேண்டிய அந்தநிலை வரக்கூடாது. ஆனால், மோடி அரசு செய் கின்ற Polarisation (ஒருங்கிணைத்தல்) இளைஞர்களை இப்படித் தள்ளுகிறது.

### ஜோ பைடன் உள்ளிட்டோர் கருத்து தெரிவித்திருப்பர்!

இதுவே முஸ்லிம் இளைஞர்களாக இருந்திருந்தால் என்ற கேள்வி இருக்கிறது. இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்?

மிகப்பெரிய அளவிற்கு இந்த நாடு இன் றைக்குக் கொந்தளித்திருக்கும்.

உலகமே இன்றைக்கு இந்தியாவை உற்றுநோக்கக் கூடிய அளவிற்கு, ஜோபைடன் வரையில் கருத்துத் தெரிவித் திருப்பார்கள்.

ஆனால், இங்கு மோடியே கருத்துச் சொல்லவில்லை.

இதுவே, நான்கு இளைஞர்கள் முஸ்லிம்களாக இருந்திருந்தால், இன் றைக்கு அமெரிக்கா கருத்துச் சொல்லி யிருக்கும்; இஸ்ரேல் பிரதமர் அறிக்கை வெளியிட்டு இருப்பார். பிரிட்டன் கருத்துச் சொல்லியிருக்கும்.

உலகத்தினுடைய எல்லா நாட்டினு டைய தலைவர்களும் இன்றைக்கு இதைப்பற்றி பேசியிருப்பார்கள்.

இந்திய நாடாளுமன்றத்தின்மீது பயங்க ரவாதிகள் தாக்குதல் என்று.

ஆனால், சம்பந்தப்பட்ட இந்திய நாட்டின் பிரதமரே இந்த நிமிடம்வரை இதைக் கண் டிக்கவில்லை என்கிற பொழுது செயல் இங்கே முக்கியமல்ல, செய்கின்ற நபர் யார் என்கிற அளவிற்கு ஒரு கருத்துருவாக்கம் வலிமை பெற்று நிற்கிறது.

இவற்றை வீழ்த்தவேண்டிய இடத்தில் நாம் இருக்கிறோம்.

### வரவைத்தவர்கள் யார்?

வந்தவர்கள் யார்? அவர்களுடைய பின்னணி என்ன? இவையெல்லாம் விசா ரணை அமைப்பின் கைகளில் போயிருக் கிறது.

அதனால், வந்தவர்களைப்பற்றி நாம் பேசுவதைவிட, வர வைத்தவர்கள் அல்லது வர அனுமதித்தவர்கள் என்ற கோணத்தில் பார்ப்போம்.

உள்ளே விட்டவர்கள் குறித்துப் பேசுவ துதான் மிக முக்கியமானதாகும்.

எல்லோரும் நாடாளுமன்றத்திற்குள் போக முடியுமா?

உண்மையில் ஒரு அச்சுறுத்தலை ஏற்ப டுத்தக்கூடிய அளவிற்கு யாராவது உள்ளே வந்திருக்க முடியுமா?

அப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால், ராகுல் காந்தி போன்ற தலைவர் உள்ளே இருக்கும்போது, அப்படி ஒரு சம்பவம் வந்திருந்தால், என்றுதானே நாம் பார்க்க வேண்டி இருக்கிறது.

எனவே, இது முழுக்க முழுக்க ஒன்றிய அரசின் தோல்வி முழுக்க முழுக்க பாதுகாப்பு குறைபாடு.

முழுக்க முழுக்க இதை விசாரிக்க வேண்டும். இதற்குப் பொறுப்பேற்று பிரதமர் பதவி விலகவேண்டும் உள்துறை அமைச்சர் பதவி விலகவேண்டும்!

இவ்வாறு ஆளூர் ஷாநவாஸ் எம்.எல்.ஏ. பேட்டியளித்தார்.

## உற்றுழி உதவி

# உறுபொருள் கொடுத்த உடன்பிறப்புகள்!

அடர்ந்த மேகங்கள் சூழ்ந்து, பெருமழை பெய்த மிக்ஜாம் ஞாயிறு போல சென்னையின் இந்த ஞாயிறு இல்லை. உதயசூரியன் ஒளியிலான புதிய விடியல் சென்னைவாசிகளுக்கு நம்பிக்கையை அளித்திருக்கிறது. எந்த சூழலிலும் மக்கள் நலனைக் காப்பதில் உறுதியும் பொறுப்புணர்வும் கொண்ட திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் இருக்கும்வரை நாம் பாதுகாப்பாக இருப்போம் என்று சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட மக்கள் நிம்மதியடைந்திருக்கிறார்கள்.

அப்படியென்ன செய்துவிட்டது தி.மு.க. அரசு? மழை நீர் தேங்கவேயில்லையா? மக்களுக்கு எல்லா உதவிகளும் உடனடியாக கிடைத்து விட்டதா? மின்சாரம் விரைந்து வந்துவிட்டதா? என்று எதிர்க்கட்சிகள் விதண்டாவாதம் பேசினாலும் மிக்ஜாம் புயலின் தாக்கத்தையும் அதனால் கொட்டிய கடுமையான கன மழையையும் எதிர்கொண்ட மக்கள், இந்தப் பேரிடரிலிருந்து தங்களை மீட்க அரசு எடுத்த உறுதியான முயற்சிகளை அறிவார்கள். அதுமட்டுமல்ல, இதே சென்னையில் 2015ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் உருவாக்கப்பட்ட செயற்கை வெள்ளத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளின் வேதனையை இன்னும் மறக்காத மக்கள், இந்த 2023ல் திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் உத்தரவுக்கிணங்க அமைச்சர்களும் அதிகாரிகளும் மக்கள் பிரதிநிதிகளும் எந்தளவுக்கு உழைத்தார்கள் என்பதை நன்றாக அறிவார்கள்.





மிக்ஜாம் புயல் சென்னையை நெருங்கி வருகிறது என்கிற முன்னெச்சரிக்கை மூன்று நாட்களுக்கு முன்பே விடுக்கப்பட்டது. மக்கள் பாதுகாப்பாக இருப்பதற்கான அறிவிப்பும் வெளியிடப்பட்டது. தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் அங்கிருந்து வெளியேறி நிவாரண முகாம்களில் தங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. பேரிடர் மேலாண்மை, மாநகராட்சி நிர்வாகம், காவல்துறை, மருத்துவத் துறை உள்ளிட்டவை முழு ஆயத்தத்துடன் இருந்தன. உணவு, குடிநீர், மருந்துகள் ஆகியவை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

டிசம்பர் 4ஆம் நாள் வரலாறு காணாத அளவிலான மழையை சென்னை எதிர்கொண்டது. ஒரு நாள் முழுவதும் ஓயாத மழை. எல்லாச் சாலைகளிலும் வெள்ளப் பெருக்கு. எவரும் எதிர்பாராத முடக்கம். அந்த நேரத்திலும் களத்தில் நின்றார் முதலமைச்சர். தண்ணீர் சூழ்ந்த பகுதிகளுக்கு சென்று மக்களை சந்தித்தனர் இளைஞர் நலன்விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினும் மற்ற அமைச்சர்களும். மாநகராட்சி பணியாளர்கள் முழு வீச்சில் பணியாற்றி, மழையில் விழுந்த மரங்களை அகற்றிக் கொண்டிருந்தனர்.

மழை நீர் வடிகால்களுக்காக 4000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தீர்களே, அந்தப் பணம் என்னவாயிற்று? மழை நீர் சாலையில் ஓடுகிறதே? என்று கதறியவர்கள் வேறு யாருமல்ல, இயற்கை சீற்றம் பற்றிய புரிதலற்ற, வெற்று அரசியல் கூச்சல்காரர்கள்தான். மழை தொடர்ந்து பெய்யும்போது அமைந்தகரையில் மட்டுமல்ல; அமெரிக்காவாக இருந்தாலும் சாலைகளில் தண்ணீர் நிறைந்தோடத்தான் செய்யும். மழை ஓய்ந்தபிறகுதான் நிலைமை மெல்ல மெல்ல சீராகும். அதுபோலத்தான், சென்னையின் நிலையும்!

ஆறுகள், கால்வாய்கள் நிறைந்திருந்ததாலும், கடலில் அலைகள் பெரிதாகி, உள்வாங்க வேண்டிய நீரை ஏற்காததாலும் மழை பெய்த போது மாநகர சாலைகளெங்கும் தண்ணீர். டிசம்பர் 5 நள்ளிரவுக்குப்பிறகு கனமழையின் வேகம் தணிந்தபின், பொழுது விடிவதற்குள் சென்னையின் முதன்மையான பகுதிகள் பலவற்றிலும் மழை நீர் வடிந்திருந்தது.

தாம்பரத்திலிருந்து பாரிமுனை வரையிலான 25 கி.மீ. சாலையில் போக்குவரத்து இயல்பு நிலைக்குத் திரும்பியது. தாம்பரத்தைத் தாண்டி ஊரப்பாக்கம், வண்டலூர், கூடுவாஞ்சேரி என ஜி.எஸ்.டி. நெடுஞ்சாலை நெடுகிலும் வாகனங்கள் பயணித்தன. சென்னைக்குள் ஏறத்தாழ 70 விழுக்காடு பகுதிகளில் மழைவெள்ளம் வடிந்திருந்தது. அதற்கு காரணம், கழக அரசு கவனத்துடன் கட்டமைத்திருந்த மழை நீர் வடிகால்கள்தான்.

ஏரிகள் மற்றும் சதுப்புநிலங்கள் சூழ்ந்த சென்னை புறநகர் பகுதிகள், செங்கல்பட்டு மாவட்டத்தின் கிழக்கு தாம்பரம் பகுதி, வட சென்னையின் தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கியிருந்தது. அவற்றிலிருந்து மக்களை மீட்கவும், அவர்களுக்கான அத்தியாவசியத் தேவைகளை வழங்கவும் முதலமைச்சர் உத்தரவிட்டிருந்ததால் அமைச்சர்கள், அதிகாரிகளுடன் கழக நிர்வாகிகளும் உடன்பிறப்புகளும் களமிறங்கிப் பணியாற்றினர்.

கழகத்தகவல் தொழில்நுட்ப அணி செயலாளரும் தொழில்துறை அமைச்சருமான முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் 'வார் ரூம்' அமைக்கப்பட்டு தகவல் தொழில்நுட்ப அணியினர் 24X7 பணியாற்றினர். பல்வேறு சமூக வலைத்தளங்களில் வந்த கோரிக்கைகளின் அடிப்படையில் எந்தெந்த பகுதிகளில் என்னென்ன உதவிகள் தேவைப்படுகின்றன என்பதை அறிந்து அவற்றை அரசு நிர்வாகத்திடமும் கழக நிர்வாகிகளிடமும் தெரிவித்து விரைந்து உதவி கிடைக்கச் செய்தனர்.

டிசம்பர் 5ந் தேதி காலையில் தொடங்கி 8ந் தேதி வரை இரவுபகல் பாராமல் தண்ணீர் தேங்கிய பகுதிகளில் இருந்த மக்களுக்கு உணவு, குடிநீர், பால் ஆகியவை வழங்கப்பட்டன. பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல விரும்பியவர்களை படகுகள் மூலம் மீட்கும் பணி நடந்தது. மருத்துவ உதவி தேவைப்பட்டவர்கள் மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கர்ப்பிணி பெண் ஒருவர் பத்திரமாக மீட்கப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, நல்ல முறையில் பிரசவமாகி தாயும் சேயும் நலம் என்ற செய்தி ஆனந்தக் கண்ணீருடன் வெளிப்பட்டது. இன்னும் சில கர்ப்பிணிகள் மீட்கப்பட்டனர்.

பம்மல் பகுதியில் ஏறத்தாழ 50 குடும்பங்கள் வசிக்கும் பகுதிக்கு 5ந் தேதியன்று இடுப்பளவு தண்ணீரில் சென்று உணவு வழங்கினர் உடன்பிறப்புகள். அடுத்தநாள் முழங்கால் அளவு தண்ணீர். மூன்றாவது நாள் கணுக்கால் அளவு நீர். ஒவ்வொரு நாளும் அந்த மக்களுக்கு மூன்று வேளைக்கான உணவு, குடிநீர், பால் வழங்கப்பட்டதை அந்தப் பகுதி மக்கள் நன்றியுடன் எடுத்துரைத்தனர்.

ஒரு சில பகுதிகளில் எந்த உதவியும் எட்டவில்லை என அக்கறையுடன் சிலரும், கோபத்துடன் சிலரும் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டிருந்த நிலையில், எல்லாருக்குமான அரசு இது என்பதால் அவர்களின் கோபத்தைப் பொருட்படுத்தாமல் அக்கறையுடன் கவனித்தது தகவல் தொழில்நுட்பஅணியின் வார் ரூம். அந்த இடங்களுக்கு நேரில் சென்று உதவினர் அரசு நிர்வாகத்தினரும் கழக அமைப்பினரும்.

முந்தைய ஆட்சிக்காலங்களில் அதிகாரத்தில் இருந்தவர்கள் போல மக்கள் கேட்ட கேள்விகளுக்கு பயந்து ஓடி ஒளியாமல், மக்களிடம் கள நிலைமையை எடுத்துரைத்து, எல்லாருக்குமான உதவிகளை உறுதி செய்தனர் சென்னை மாநகர மேயரும் கவுன்சிலர்களும். தி.மு.க ஆட்சியில்தான் ஜனநாயக உரிமையுடன் மக்களால் கேள்வி கேட்க முடியும். அதற்கு மக்கள் பிரதிநிதிகளான கழகத்தினரிடமிருந்து ஆக்கப்பூர்வமான செயல்கள் வாயிலாக பதில் கிடைக்கும். கடந்த 2015ஆம் ஆண்டில், அடைத்த கதவு எப்போது திறக்கும் என்று அமைச்சர்களே அறியாமல் வாசலில் காத்திருந்தது போன்ற கொடுமை இப்போது இல்லை. என்ன செய்வதென்று தெரியாமல் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் முடங்கி கிடந்த அன்றைய நிர்வாகம் போல இன்று இல்லை.



**கோவி.லெனின்**
ஆலோசகர்,
தி.மு.க. தகவல்
தொழில்நுட்ப அணி

முன்னெச்சரிக்கை எதுவுமின்றி செம்பரம்பாக்கம் ஏரியை திறந்துவிட்டு 500க்கும் மேற்பட்ட மக்களும், எண்ணற்ற உயிரினங்க ளும் பலி கொடுக்கப்பட்ட 2015 செயற்கை வெள்ளம் போல இப்போது இல்லை. புயல் வரும். கடும் மழை பொழியும். பாதுகாப்பு முக்கியம் என அறிவிக்கப்பட்டதுடன், மழைவெள்ளம் வடிவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, தண்ணீர் வடிந்தபிறகே மின்சாரம் வழங்குவது என முடிவெடுக்கப்பட்டதால் சென்னை மற்றும் சுற்றுப்பகுதி மக்களின் உயிரைக் காத்தது முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு. இன்னும் கவனிக்க வேண்டிய இடங்களையும் ஆய்வு செய்து, ஆவன செய்து வருகிறது அரசு.

பிணம் விழாதா, அதை வைத்து அரசியல் நடத்த முடியாதா என எதிர்பார்த்திருந்த அரசியல் கட்சிகள் ஏமாந்து போயின. அவற்றின் ஊதுகுழலாக செயல்பட்ட ஒரு சில ஊடகத்தினர், சமூக வலைத்தள சுயமோகிகள் உள்ளிட்டோர் நேர்மையோ அறமோ சிறிதுமின்றி, சென்னையின் முழு நிலவரத்தைக் காட்டாமல், மொத்த சென்னையும் தண்ணீரில் மிதப்பது போல சித்தரிக்க முயன்றாலும், மழை வெள்ளத்தை எதிர்கொண்ட சென்னை மக்களுக்கு, தங்களின் பாதுகாப்பை உறுதி செய்தது திராவிட மாடல் அரசுதான் என்ற உண்மை தெரியும்.

ஒரு ஞாயிறு கடந்து அடுத்த ஞாயிறன்று ஒளி வீசிய சென்னையில் மழை நீர் தேக்கமில்லை. உணவு, குடிநீர், மின்சாரம், போக்குவரத்து எல்லாமும் இயல்பாக இருந்தது. குப்பைகளை அகற்றி, நோய்த்தொற்று ஏற்படாமல் இருப்பதற்கான சூழலை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்கள் மேற்கொண்டிருக்கின்றனர். மக்கள் நலன் காக்கும் பணியில் தன்னை அர்ப்பணித்துள்ள முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 6000 ரூபாய் நிவாரணத் தொகை அறிவித்திருக்கிறார். மழையால் இறந்தவர்களுக்கான நிவாரண நிதி தொடங்கி மீனவர்களுக்கான நிவாரணத் தொகை வரை அனைத்தும் உயர்த்தப்பட்டுள்ளன.

வாய் நீளம் காட்டி, வதந்திகளைப் பரப்ப நினைத்த எதிர்க்கட்சிகள் மக்களின் துயரம் பற்றி கொஞ்சமும் அக்கறை செலுத்தவில்லை. 2015 செயற்கை வெள்ளத்தின்போது எதிர்க்கட்சியாக இருந்த தி.மு.க.தான் களமிறங்கி மக்களுக்கு உதவியது. அ.தி.மு.க.வோ ஸ்டிக்கர் ஒட்டி அசிங்கப்பட்டது. இப்போது மிக்ஜாம் புயல் மழையிலும் அ.தி.மு.கபா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகளின் சாயம் வெளுத்திருக்கிறது.

உற்றுழி உதவி உறுபொருள் கொடுத்து மக்கள் பக்கம் என்றென்றும் நிற்பவர்கள் நாங்கள்தான் என்பதை மீண்டும் மெய்ப்பித்திருக்கிறார்கள் கழக உடன்பிறப்புகள்.

---

தனியார் பள்ளிகளில் தலித்துகள் –

# ஆதிவாசிகளுக்கு எதிரான பாகுபாடுகளைத் தீர்த்திட நடவடிக்கை என்ன?

## மக்களவையில் ஆ.இராசா கேள்வி!

*புதுடெல்லி, டிச. 15-*

*தனியார் பள்ளிகளில் தலித்துக்கள்மற்றும்ஆதிவாசிகளுக்கு எதிரான பாகுபாடுகளை தீர்த்திட எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? என்று மக்களவையில் ஆ.இராசா எம்.பி. கேள்வி எழுப்பினர்.*

*இது குறித்து மக்களவையில் ஆ.இராசா எழுப்பிய கேள்வியும்கல்வி அமைச்சர் துணை அமைச்சர் அளித்த பதிலும் வருமாறு: -*

*தனியார் பள்ளிகளில் தலித்து கள் மற்றும் ஆதிவாசிகளுக்குஎதிரானபாகுபாடு கல்வியமைச்சர்தயவுசெய்து கீழ்க்காணும் விடை யளிப்பாரா?*

*(அ) கடந்த மூன்றாண்டுகளில் தனியார் பள்ளிகளில் தலித்துகள் மற்றும் ஆதிவாசிகளுக்கு எதிரான பாகுபாடுகுறித்துபுகார்செய்யப்பட்ட நிகழ்வுகளின் எண்ணிக்கை;*

*(ஆ) கடந்த மூன்றாண்டுகளில் தனியார் பள்ளிகளில் தலித்துகள்மற்றும்ஆதிவாசிகளுக்கு எதிரான பாகுபாடுகளைத்தீர்த்திட,களைந்திட அரசால் அல்லது சி.பி.எஸ்.ஈ.யி னால் வழங்கப்பட்ட குறிப்பாகஒழுங்குமுறைப்படுத்தும் நடவடிக்கைகள்*

*(இ) ஒதுக்கப்பட்ட ஓரங்கட்டப்பட்ட சமுதாயங்களிலிருந்து வரும் மாணவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க,தனியார்பள்ளிகளில் அவர்களுக்கு பாதுகாப்பு, சமத்துவம், அரவணைப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்திட மாநிலங்களுக்குஅனுப்பப்பட்ட அரசின் சுற்றறிக்கைகள்,வழிகாட்டுநெறிமுறைகள்/ஆணைகள் பற்றிய விவரங்கள் என்ன ஆ.இராசா எம்.பி. கேள்வி எழுப்பினார்.*

*இதற்கு கல்வி அமைச்சக துணை அமைச்சர் (திருமதி, அன்னபூர்ணதேவி) அளித்த பதில் வருமாறு:-*



*(அ)அரசமைப்புச்சட்டத்தில் கல்வியானது ஒத்திசைவுப்பட்டியயில்இடம்பெற்றுள்ளது,ஒன்றியஅரசினால் அளிக்கப்பட்டு, ஒன்றிய அரசுக்குச் சொந்தமாக இருக்கிறபள்ளிகள்தவிரமற்றபள்ளிகள் மாநில அரசுகளின் அதிகார எல்லைக்குட்பட்டவையாகும்.*

*இவ்வாறு, தாழ்த்தப்பட்ட,பழங்குடியினத்தைச் சேர்ந்து மாண வர்களுக்கு எதிரான பாகுபாடுகள் தனியார்பள்ளிகளில்நடப்பதையும், அவை தொடர்பான மற்ற விவகாரங்களையும் அந்துந்த மாநில அரசுகளின் விதிமுறைகள்,அறிவுரைகள் வாயிலாக ஒழுங்கு முறைப்படுத்தப்படுகின்றன*

*(ஆ),(இ)தகவலறியும்சட்டம் பிரிவு 12(1) (c) யின்படி அரசு உதவிபெறாத தனியார் பள்ளிகள் 25% இடங்களை பொருளாதாரத்தில் நலிந்த பிரிவிலிருந்தும், சலுகைகள் பெறாத வசதியற்ற பிரிவிலிருந்தும் வருகின்ற மாணவர்களுக்கு ஒதுக்கித் தந்திட வேண்டும். தகவலறியும் சுட்டம் 2009, பிரிவு 8(c) மற்றும் பிரிவு 9(c)யின்படி, பலவீனமான பிரிவைச் சேர்ந்த, சலுகைபெறாத வசதியற்ற பிரிவைச் சேர்ந்த குழந்தைகளுக்கு எதிராக பாகுபாடு காட்டப்படக்கூடாதென்றும் எந்தக்காரணங்களாலும் அவர்கள் ஆரம்பக்கல்வியை நிறைவு செய்யவும், மேற்படிப்பைத் தொடரவும் தடுக்கப்படக்கூடாது என்பதற்கு உரிய நடவடிக்கைகள்உறுதிசெய்வது பள்ளிகளுக்குக்கட்டாயமாக்கப்பட்டுள்ளது.*

*பட்டியலின மற்றும் பட்டியலினப்பழங்குடியினரின் கல்வி வளர்ச்சியில் ஏற்றத் தாழ்வுகளைக்குறைப்பதற்கு சிறப்புக்கவனம் செலுத்தப்படுமென தேசியகல்விக் கொள்கை (NEP) 2020 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*ஆசிரியர்களாலும், பயிற்சிபெற்றசமூகப்பணியாளர்களாலும், ஆலோசகர்களாலும், கொண்டுவரப்பட்டு, அனைத்தையும் உள்ளடக்கிய பள்ளிக் கல்வித்திட்டம் ஒன்றை, அவற்றுக்கு ஒத்த மாற்றங்களுடன் கொண்டு வந்து, மாணவர்களுக்கு உணர்வூட்டுக்கு இந்தப் புதியகல்விப்பண்பாட்டை, தலை தேசிய புதிய கல்விக் கொள்கை 2020, கட்டாயப் படுத்துகிறது.*

*புதிய கல்வித்திட்டமானது அனைவருக்கும் மரியாதை, பிறர் துன்பம் அறிதல், சகிப்புத்தன்மை, மனிதஉரிமைகள், பாலின சமத்துவம், வன்முறையின்மை, உலகளாவிய குடியுரிமை, உள்ளடக்குதல், சமத்துவம் ஆகிய மனித மதிப்புறுநெறிகளை மீது செய்திகளை உள்ளடக்கியிருக்கும்.*

*மேலும், பல்வேறுசமயங்கள், பண்பாடுகள், மொழிகள், பாலின அடையாளங்கள், ஆகியவற்றைப்பற்றி இன்னும் அதின விவரமான அறிவை ஊட்டிடவும், பல்வகைமைக்கு மதிப்பை உயர்த்திடவும் அத்திட்டம் வகைசெய்யும். பள்ளிப்பாடத்திட்டத்தில் உள்ள எந்த வித ஒருபக்கச்சார்புகளோ, மாறாத ஒரே மாதிரி கருத்துகளோ அகற்றப்பட்டு, அனைத்து சமுதாயங்களையும் தொடர்புபடுத்தக்கூடிய பொருத்தமான செய்திகள் அதிகமாக சேர்க்கப்படும்.*

*இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.*



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் சென்னை நந்தனம், ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை வளாகக் கூட்டரங்கில் அனைத்து துணைப் பதிவுத்துறை தலைவர்கள் மற்றும் மாவட்ட பதிவாளர்கள் (நிர்வாகம் மற்றும் தணிக்கை) ஆகியோரின் நவம்பர் 2023 மாத பணி சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசுச் செயலாளர் திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி, பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காட்டூர் கோபால்
### டிசம்பர் 15 (1978)



**தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைப் பொதுச்செயலாளர், கழக சட்டமன்ற மேலவை உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை ஏற்றுப் பணியாற்றியவர்.**

**தொழிலாளர்களின் நலன் காக்கும் பொருட்டு 'உழைப்பாளி' என்ற இதழைத் துவக்கி, அதன் ஆசிரியராகவும் பெரும் பணி ஆற்றினார்.**

**"இயக்கத்தோடு இணைந்து வளர்ந்த பகுத்தறிவுச் சிங்கம்! ஆயிரம் கொடுமைகள் இழைக்கப்பட்ட போதும் ஆடாது அசையாது இலட்சியம் காத்திட்ட பெருமகன்! நெருக்கடி காலத்தில் மிசாக் கைதியாக இருந்தபோது அவருக்கு கிடைத்த பரிசு நெஞ்சு வலி. அதுவே அவரை நம்மிடமிருந்து பறித்துக் கொண்டுவிட்டது. தொழிலாளர்களுக்காக வாதாடுகிற திறனும் – போராடுகிற துணிவும் நிறைந்த எனதருமை உடன்பிறப்பு" என தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### தமிழ்நாடு முதலமைச்சரின் வலியுறுத்தலையடுத்து

# தமிழ்நாட்டு ஐயப்ப பக்தர்களுக்கு வசதி - பாதுகாப்பு!

## கேரள அரசு உறுதி!

**திருவனந்தபுரம், டிச. 15 -**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் கோரிக்கையை ஏற்று கேரளாவில் தமிழ்நாட்டு ஐயப்ப பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளும், பாதுகாப்பும் செய்து கொடுக்கப்படும் என கேரள தலைமைச் செயலாளர் உறுதி அளித்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாட்டிலிருந்து கேரள ஐயப்பன் கோவிலுக்குச் சென்றுள்ள பக்தர்கள் அடிப்படை வசதிகளும் பாதுகாப்பும் இன்றி மிகவும் சிரமப்படுவதாக தகவல்கள் கிடைத்துள்ளது.

அதனையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளரை கேரள மாநில தலைமைச் செயலாளர் அவர்களுடன் தொடர்புகொண்டு தமிழ்நாட்டிலிருந்து வரும் ஐயப்ப பக்தர்களுக்கு போதிய அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்புக்கான அனைத்து உதவிகளையும் ஏற்பாடு செய்து உதவிட கேட்டுக் கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

அதன்படி, தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கேரள மாநில தலைமைச் செயலாளர் வி.வேணு, அவர்களிடம் தொலைபேசி மூலம் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு தலைமைச் செயலாளர் மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, கேரள மாநில தலைமைச் செயலாளர் அவர்கள் தமிழ்நாட்டு ஐயப்ப பக்தர்களுக்கு கேரளாவில் தக்க அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கவும், பாதுகாப்பினை உறுதி செய்யவும் கேரள மாநில அரசு சார்பில் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும் என உறுதி அளித்துள்ளார்.



சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி, எம்.ஏ சாகிப் தெரு & நாவலர் நெடுஞ்செழியன் நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 40 குடும்பங்களுக்கு மூலக்கொத்தளத்தில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பில் புதிய வீடுகளை வழங்குவதற்கான வீடு ஒதுக்கீட்டு ஆணைகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் அமைச்சர் தா.மோ.அன்பரசன், நே.சிற்றரசு, மதன்மோகன் உள்ளிட்டோர் உள்ளனர்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.12.2023), தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் சென்னை லீலா பேலஸில் 2023 டிசம்பர் 15 முதல் 21ம் தேதி வரை நடைபெறவுள்ள சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் சாம்பியன்ஷிப் 2023 போட்டியினை நடத்துவதற்கு தமிழ்நாடு அரசு வழங்கும் ரூபாய் 1.77 கோடிக்கான காசோலையை போட்டி நடத்தும் ஒருங்கிணைப்பாளர்களிடம் வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனுள்ளனர்.



சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதிக்கு உட்பட்ட சி.ஐ.டி காலனி பொதுமக்கள், அந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.28.75 லட்சம் மதிப்பில், புதிய நியாய விலைக்கடையை சி.ஐ.டி காலனி 6ஆவது குறுக்குத் தெருவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், மேயர் பிரியாராஜன் மற்றும் நே.சிற்றரசு, ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், மதன்மோகன், ஆர்.என்.துரை, கமலா செழியன், க.வே.மோகன், லைனர் பிரபு உள்ளிட்டோர் உள்ளனர்.




ஜனவரி 19 முதல் 24, 2024 வரை தமிழ்நாட்டில் நடைபெறவுள்ள கேலோ இந்தியா யூத் கேம்ஸ் 2023க்கான முக்கியமான ஆயத்தக் கூட்டத்திற்கு நேற்று முன்தினம் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமை தாங்கினார். இந்தியா முழுவதிலுமிருந்து 6000க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்களுடன் இந்த பல்விளையாட்டு களியாட்டத்தை குறைபாடற்ற முறையில் செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கான அடிப்படைத் திட்டங்களை அதிகாரிகளுடன் அவர் விவாதித்தார்.



கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி, திருவல்லிக்கேணி பகுதி, 120ஆவது வட்டம், முத்தையா தெருவில் வசித்து வருகின்ற பொதுமக்கள் 1200 பேருக்கு அரிசி, மளிகைப் பொருட்கள், போர்வை உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கினார். இதில் தயாநிதி மாறன் எம்.பி., நே.சிற்றரசு, ஏ.ஆர்.பி.காமராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### முதுகுளத்தூரில் 1500 பயனாளிகளுக்கு

# ரூ.5.27 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் வழங்கினார்!

இராமநாதபுரம், டிச. 15-

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் முதுகுளத்தூரில் 1.500 பயனாளிகளுக்கு ரூ.5.27 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பிற்படுத்தப்பட்ட நலத்துறை அமைச்சர் ஆர் எஸ்.ராஜ.கண்ணப்பன் வழங்கினார்.

சென்னை உள்ளிட்ட நான்கு மாவட்டத்தில் பெய்து 47 சென்டிமீட்டர் கனமழை காரணமாக பாதிப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் சிறப்பாக செயல்பட்டு சீரமைப்பு மற்றும் நிவாரண பணிகளை மேற்கொண்டார் மத்திய குழு பாராட்டு தெரிவிக்கும் வகையில் முதல்வர் செயல்பட்டதாக என புகழாரம் சூட்டினார்.

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இலவச பட்டா மற்றும் தாலிக்கு தங்கம் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் விஷ்ணு சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் கதர் கிராம வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் கலந்து கொண்டு 1.285 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாவும், 224 பயனாளிகளுக்கு தாலிக்கு தங்கம் என சுமார் ஐந்து கோடியே 27 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து அவர் பேசும் பொழுது சென்னை உள்ளிட்ட நான்கு மாவட்டத்தில் பெய்து 47 சென்டிமீட்டர் கனமழை காரணமாக பாதிப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் சிறப்பாக செயல்பட்டு சீரமைப்பு மற்றும் நிவாரண பணிகளை மேற்கொண்டார் இதற்கு ஒன்றிய அரசால் அனுப்பப்பட்ட மத்திய குழு பாராட்டு தெரிவிக்கும் வகையில் முதல்வர் செயல்பட்டார் என புகழாரம் சூட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் கோவிந்தராஜுலு, பரமக்குடி சார் ஆட்சியர் அப்தாப் ரசூல், முதுகுளத்தூர் வட்டாட்சியர் சடையாண்டி, முதுகுளத்தூர் பேரூராட்சி தலைவர் ஷாஜகான், மற்றும் ஒன்றிய செயலாளர்கள் பூபதி மணி ஆப்பனூர் ஆறுமுகவேல் கோவிந்தராஜ் சண்முகம் சாயல்குடி ஜெயபால் கடலாடி ராஜசேகர் உள்ளிட்டோர் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் பயனாளிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



மிக்ஜாம் புயலினால் கடுமையாக பாதிக்கப்பட்ட சென்னை சைதாப்பேட்டை தொகுதி, அடையாற்றங்கரையோரம் வசிக்கும் சைதை கிழக்கு பகுதியைச் சார்ந்த 8,000 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரும் சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் 13.12.2023 வழங்கினார். உடன் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், மண்டல குழு தலைவர் இரா.துரைராஜ், மாமன்ற உறுப்பினர் தா.மோகன்குமார் உள்ளிட்ட தி.மு.கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!

நாமக்கல், டிச. 5-

நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-



நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் நாளை (16.12.2023 - சனிக்கிழமை) மாலை 5.00 மணிக்கு நாமக்கல் மோகனூர் சாலை, முல்லை நகரில் உள்ள நாமக்கல் கிழக்கு மாவட்ட அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் இனமானப் பேராசிரியர் அரங்கத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன் தலைமையில், வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ. இராமலிங்கம், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்டக் கழக துணை செயலாளருமான கே.பொன்னுசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர், உள்ளாட்சி பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள், அனைத்து சார்பு அணியின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:** சேலம் மாவட்டத்தில் வருகின்ற 24.12.2023 அன்று நடைபெறுகின்ற தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாடுகுறித்து. கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# புரட்டிப்போட்ட புயல் மழையும்... போர்க்காலக் களப் பணியும்...



புரட்டிப் போட்ட மிக்ஜாம் புயல் மழையிலும், பல இழப்புகளைச் சேதங்களைச் சந்தித்தும் மக்களைக் கரை சேர்க்க போர்க்காலக் களப்பணி ஆற்றி வருகிறது நமது தளபதி அரசு.

தமிழ்நாட்டின் நைட்டிங்கேலாக இரவு பகலாக பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து, அவர்களின் வாழ்வாதாரக் குறைகளைக் கேட்டு மீட்புப் பணியில் மீட்போனாக தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. ஆட்சி அமைந்ததும், சென்னையில் பருவ மழை பாதிப்புகளுக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கான பரிந்துரைகள் வழங்கிட ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி திருப்புகழ் தலைமையில் 12 பேர் கொண்ட ஒரு குழு 2021-இல் அமைக்கப்பட்டது. அக்குழு ஆண்டுதோறும் வெள்ளப் பாதிப்புகளை ஏற்படுத்தும் பகுதிகளை ஆய்வு செய்து, இடைக்கால அறிக்கையாக 10.5.2022-இல் அரசுக்குக் கொடுத்தது.

அதன்படி (1) அடையாறு - கூவம் வடிநிலம்; (2) ஆரணி ஆறு-கொசஸ்தலை ஆறு வடிநிலம் ; (3) கோவளம் வடிநிலம் என மூன்று பாகங்களாகப் பிரித்துச் சென்னைப் பெருநகரை இக்குழு மழை நீர் வடிகால் பணிகளை ஆய்வு செய்திருந்தது. இவற்றில் ஏற்படும் வெள்ளத்தின் அளவு, மழை நீர் வடிகால்களின் கொள்திறன் ஆகியவை விரிவாக ஆய்வு செய்ய வேண்டும் என்றும்,ஏரிகளின் உபரி நீர் வடிந்து செல்லத் தேவையான புதிய கால்வாய்கள் அமைக்க வேண்டும் என்றும், தேவையான நிலங்களைக் கையகப்படுத்த வேண்டும் என்றும்; திட்டங்களை செயல்படுத்த சாத்தியக்கூறுகளின் உருவாக்கப்பட வேண்டும் என்றும் இருந்தது. அத்துடன் கோவளம் வடி நிலத்தில் அமைந்துள்ள ஆலந்தூர், அடையாறு, பெருங்குடி, சோழிங்கநல்லூர் மண்டலங்களில் மழை நீர் வடிகால் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்றும்

பள்ளிக்கரணை சதுப்பு நிலம், பக்கிங்காம் கால்வாய் ஒக்கியம் மடுவைச் சுற்றியுள்ள பல்வேறு பகுதிகள் இணைக்கப்பட்டு தனியாக விடபட்டதை இணைக்கப்பட வேண்டும். பள்ளிக்கரணை சதுப்புநிலம் நீர்மட்டம் உயராமல் பாதுகாக்கப்பட நடவடிக்கை; சாலைகளில் நீர் மட்டம் பெருகி வெளியேற்றும் நிலை, தானியங்கும் முறையில் செயல்படுவதைப் பாதுகாத்தல்; ஏரிகளில் நீர் உரிய முறையில் வெளியேறப் புதிய கால்வாய்கள் ஏற்படுத்தல்; மடிப்பாக்கம், பல்லாவரம், துரைப்பாக்கம், மேடவாக்கம், சோளிங்க நல்லூர், ஒக்கம்பாளையம் சாலை மழை நீர் நேரடியாகப் பக்கிங் காம்கால்வாய்வைக்குச் செல்வதற்கு புதிய கால்வாய்கள் ஏற்படுத்தல் பல்லாவரம் ரேடியல் சாலை கால்வாயை இணைத்தல்; மாம்பலம் கால்வாய் நந்தனம் கால்வாய் இணைப்பு வசதி உறுதி செய்தல் என்பன போன்ற மேலாண்மை பணிகளை முறையாகச் செயல்படுத்துவதை மாநகராட்சித் துறை, நீர்வழித்துறைக்கும் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதனை கையில் எடுத்து தான் முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசு நடவடிக்கைகளை தொடர்ந்து செயல்படுத்தி வந்தது.

47 ஆண்டு கால வரலாற்றில் இல்லாத அளவு இயற்கை இடர்ப்பாடு ஏற்பட காரணமாயிற்று. சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் என 4 மாவட்டங்களில் மொத்தம் 109.41 சென்டிமீட்டர் மழை பெய்து பெரும் சேதம் ஏற்படுத்தியுள்ளது. 36 மணி நேரத்தில் குறிப்பாக செங்கல்பட்டு, திருவள்ளூர் பூவிருந்தவல்லி 32 சென்டிமீட்டர். சென்னை மீனம்பாக்கம் 43 சென்டிமீட்டர். பெருங்குடி – 44 சென்டிமீட்டர் அதிகபட்சமாக 53 சென்டிமீட்டர் என மழை பொழிவைப் பதிவு செய்து இருக்கிறது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் சீரமைப்புப் பணி வெகுவாக போர்க்கால அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்பி வருகிறது .மீட்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுச் களப்பணியாளர்கள் மூலம் போர்க்கால நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதில் ஏறத்தாழ ஒரு கோடி மக்கள் பாதிக்கப்பட்டனர். இந்தப் பேரிடரால். மழை நீர் வடிகால் பணிகள் துரிதமாக முன்கூட்டியே முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசு திட்டமிட்டுச் செயலாற்றியதால் தான் பேரழிவு தவிர்க்கப்பட்டது. இது முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை யாராலும் மறந்து விட முடியாது; மறுக்கவும் முடியாது.

ஜெயலலிதா ஆட்சியில் நடந்தவை பொறுப்பேற்றிருந்தது. அ.தி.மு.க. ஆட்சி 2015- ஆம் ஆண்டில் 19 நாட்கள் மழை பெய்தது. மழைநீர் பெருகிச் செம்பரம்பாக்கம் ஏரி உடையும் நிலை ஏற்படப்போகுது. முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு பலமுறை பொதுப்பணித்துறை அதிகாரிகள் கோப்புகள் அனுப்பியும் திறந்திட அனுமதிகிடைக்கவில்லை ..அதனால். நள்ளிரவில் அதிகாரிகளே செம்பரம்பாக்கம் ஏரியைத் திறந்து விட்டனர். இரவோடு இரவாக 500 -க்கும் மேற்பட்ட பிணங்கள் சென்னையில் மிதந்தன. 310 பேர் இறந்ததாகவும் கூறப்பட்டது ஆனால். சில தனியார் அமைப்புகள் ஆயிரமல்ல 700 பேர் மடிந்து போயினர் என்று கூறியதை மறந்து விட முடியாது. இப்பொழுதோ 17 -பேர் மட்டுமே உயிர் இழப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். தற்போது மிக் ஜாம் புயலால் இறந்தவர் எண்ணிக்கையோ 17 பேர். இதற்குக் காரணம் கழக அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தான் என்பது தெளிவாகும். ஆனால் தற்போது ஒரே நாளில் மழை பெய்தும் உள்ளது. 100 கிலோ மீட்டர் தொலைவில் புயல் கடலில் நிலை கொண்டு இருந்ததால் அதிகமான மழைப்பொழிவைக் கொடுத்து விட்டது.

2015 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் சாலை போக்குவரத்து பல நாட்கள் தடைப்பட்டு இருந்தது. ஒரு வாரம் கழித்து தான் 15 சதவீதம் சாலைப்போக்குவரத்து சீரடைந்தது. ஆனால். முதல்வர் அவர்கள் எடுத்த முன்னேற்பாடு முயற்சியால் தற்போது ஏற்பட்ட மிக் ஜாம் புயலுக்குப் பிறகு நிறுத்தப்பட்டிருந்த விமானங்கள் 95 விழுக்காடும். இரயில்கள் முழுவதும் ஓடத் தொடங்கின. பேருந்துகள் அனைத்தும் ஒரே நாளிலே சாலைப் போக்குவரத்து 74% சீரடைந்து ஓடத் தொடங்கின. சாலை, இருப்புப் பாதை, விண்வெளி ஆகிய போக்குவரத்துகள் இயல்பான சூழ்நிலைக்குக் கொண்டு வரப்பட்டுச் செயல்படத் தொடங்கின.

2015 ஜெயலலிதா ஆட்சியில் மின்தடை ஏற்படுத்தப்பட்டு மீண்டும் இயல்பான சூழ்நிலை கொண்டு வர 18 நாள்கள் ஆகின ஆனால் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் புயலால் மழை நீர் சூழப்பட்டிருந்த பகுதிகளில் தடை செய்யப்பட்டிருந்த மின் விநியோகத்தடையை நீக்கி, மீண்டும் மின்சாரம் 83% பகுதிகளுக்கு ஒரே நாளில் வழங்கப்பட்டது.

புயல் மழை வெள்ளத்தால் மின்சாரம் வழங்கப்பட்டால் உயிர் சேதங்கள் ஏற்படும் என்கிற காரணத்தினால் மின்சார இணைப்புகள் மிகவும் பாதுகாப்பாக கண்காணிக்கப்பட்டு தடை செய்யப்பட்ட மின்சாரம். டிசம்பர் 5 ஆம் தேதி முதலே பல்வேறு பகுதிகளுக்கு மின்சார இணைப்புகள் வழங்கப்பட்டன. போக்குவரத்தால் தாமதமான ஆவின் பால் விநியோகம் தொடங்கியது. ஏற்கெனவே 9 மாவட்டங்களில் தங்க வைக்கப்பட்டிருந்த 61 ஆயிரம் பேருக்குப் புயலுக்கு அடுத்த நாள் மட்டும் 11 லட்சம் உணவு பொட்டலங்கள் அரசு சார்பில் வழங்கப்பட்டன. சென்னை நகர் ஒரே நாளில் இயல்பு நிலைக்கு திரும்பியது. கழக ஆட்சிக்கு எதிராக அரசியல் செய்யும் அ.தி.மு.க, பா.ஜ.க போன்ற கட்சிகள் வேண்டும் என்றே பொய்க் குற்றச்சாட்டுகள் கூறி வருகின்றன.

தளபதியார் தலைமையிலான தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்றதும், 3,480 கிலோ மீட்டர் மழை நீர் வழிகால்கள் செயல்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டதுடன், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 1,500 கிலோ மீட்டர் திட்டப் பணிகளில் 1,390 கிலோ மீட்டர் பணிகள் முடிக்கப்பட்டுத் தற்போது செயல்படுகிறது. மீதமுள்ள மழை நீர் வடிகால்களில் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. 16- கால்வாய்கள் சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருவதில் உள்ள மண்டி கிடக்கும் ஆகாயத்தாமரை, வண்டல்கள் அகற்றும் பணி 1,945 மீட்டர் நீளத்திற்குச் செய்து முடிக்கப்பட்டுள்ளதுடன்,. 10,385 மீட்டர் நீளத்திற்குக் கழிவுகளை அகற்றும் பணியும் முடிவடைந்துள்ளன. இப்படியான போர்க்கால அடிப்படை வசதிகள் செய்து வரும் தளபதி ஆட்சியின் காரணமாகத்தான், கடந்த புயல் மழையில் ஒரே நாளில் 80 சதவீத மக்கள் இயல்பு நிலைக்கு உடனே திரும்பினர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

ரூபாய் 4000 கோடி ஒதுக்கீடு என்ன ஆயிற்று என்று சங்கி மங்கிகளுடன் சேர்ந்து எடப்பாடிகளும் கூட்டாளிகளும் கூக்குரல் இடுகின்றன.

வல்லுநர்கள் வழங்கிய அறிக்கைப்படி, 2022-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சென்னை பெருநகர மாநகராட்சியில் 4,070 கோடி ரூபாய் மதிப்பில், 1,033 கிலோமீட்டர் நீளத்திற்குப் புதிதாக மழை நீர் வடிகால் பல பகுதிகளில் அமைக்கும் பணிகள் நிறைவடைந்தன. எனினும், இன்னும் அது முழுமை பெறவில்லை. இடை இடையேமழை காரணத்தினால் ஆங்காங்கே சில இடங்களில் மழைநீர் தேங்கிநிற்பதால் நிறுத்தப்பட்டிருக்கிறது.

மக்களுடைய அனைத்து கேள்விகளுக்கும் பொறுப்பான முறையில் பதில் அளித்திருக்கிறார்கள்...

4000 கோடி எங்கே என்பதற்கான பதிலும் இதிலே இருக்கிறது...

தி.மு.க. ஆட்சிக்கு வந்தப்பின் அறிவித்த மழைநீர் வடிகால் திட்டத்தின் Progress report

1) Phase 1 கொசஸ்தலை பேசின் மொத்தம் நீளம்:769 KM பணிகள் முடிந்தது : 523 KM Progress:68% பட்ஜெட் :3220 கோடி செலவிட்டது: 1903 கோடி

2) Phase 2 கோவளம் பேசின் மொத்தம் நீளம் : 360 KM பணிகள் முடிந்தது : 128 KM Progress : 35% பட்ஜெட்: 1714 கோடி செலவிட்டது: 200 கோடி

3) Phase 3 SMDF மொத்த நீளம்: 60 KM பணிகள் முடிந்தது: 49 KM Progress: 81% பட்ஜெட் :232 கோடி செலவிட்டது: 187 கோடி அதாவது மொத்தம் பட்ஜெட் 5166 கோடி

இதுவரை நடந்து முடிந்த பணிகளுக்கு செலவிட்டது 2310 கோடி பணிகள் மீதி எஞ்சிய பணிகள் முடிவடையவில்லை..

எங்கு பணிகள் முடிந்ததோ அங்கே நீர் வேகமாக வடிந்தது. எங்கே பணிகள் முழுமையாக முடியவில்லையோ அங்கே தண்ணீர் தேங்கி இருக்கிறது. இது வரை இந்த திட்டத்திற்கு செலவு செய்யப்பட்ட தொகை 2310 கோடி மட்டுமே... பணிகள் இன்னும் முழுமை பெறவில்லை.. இந்த பணிகள் மொத்தமாக முடிக்க மொத்தம் 2 ஆண்டுகள் தேவைபடும்... 2022 முதல் 2024 வரை இதில் இந்த 4000 கோடி எனும் பொய் எங்கிருந்து வந்தது? திட்டமிட்டு அரசுக்கு எதிராக பரப்பப்படும் பொய்யாகும்.

தளபதி தலைமையிலான கழக அரசை எதிர்த்து, மோடியின் சிறந்த அடிமைகளில் ஒருவரான எடப்பாடி அரசியல் ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்கிறார். “தியாகராயர் நகரைச் சிங்கப்பூர் மாதிரி மாற்றி இருக்கிறோம். ரூபாய் 1,000,கோடி செலவழித்து சென்னையில் அடையாறு, கூவம் ஆறு போன்ற பல்வேறு இடங்களில் மழை நீர் வடிகால் அமைத்துத் தண்ணீர் தேங்காமல் கட்டமைத்திருக்கிறோம். 954- கி.மீ தூரம் மழை நீர் வடிகால் அமைத்து வீதிகளில் எங்கும் நீர் தேங்காமல், வழிந்து ஓடுகிற சூழ்நிலையை ஏற்படுத்தித் தந்திருக்கிறோம் “ -.இப்படிப் பேசியவர் வேறு யார்? சாட்சாத் நமது முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி தான். சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் 2021 - மார்ச்சு மாதம் இப்படிப் பேசி உண்மையான விளக்கத்தைத் தந்தார். ஆனால், அந்த ஆண்டு நவம்பரில் பெய்த மழையில் தலைநகரமான சென்னை நகரமே மூழ்கி போனது என்பது எல்லாருக்கும் தெரியும்.

இந்தியாவில் 7516 கடலோரப் பகுதியில் சுமார் 5700 கிலோ மீட்டர் புயல் சுனாமி பேரழிவு திட்டத்தால் பாதிப்பு ஏற்படுகிறது. தேசிய சூறாவளி இடர் தணிப்பு நோக்கத்தின் அடிப்படை நோக்கமே, புயல் மற்றும் சுனாமி போன்ற இயற்கைச் சீற்றத்தைத் தணித்துப் பொதுமக்களின் உயிருக்கும், உடமைக்கு முரிய தகுந்த பாதுகாப்பு வழங்கிட வேண்டும். பல்நோக்கு சூறாவளி மையத்தைத் தமிழ்நாட்டில் கடலோரப் பகுதியில் அமைக்கப்பட வேண்டும். ஆனால், கடற்கரையோர சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதற்காக ஒன்றிய அரசு ஆந்திரா, ஒடிசா, மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில் 567 பல்நோக்கு மையங்களை அமைத்துள்ளது. தமிழ்நாட்டில் ஒரு மையம் கூட அமைக்கப்படவில்லை.

இத்திட்டத்தின் இரண்டாம் கட்டமாகக் கூட குஜராத்தில் 112. கேரளாவில் 27. கர்நாடகாவில் 11. மராட்டியத்தில் 13. மேற்கு வங்கத்தில் 150. கோவா 40 என உருவாக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இருந்தாலும், அடிக்கடி புயல் தாக்கப்படும் மாநிலமான தமிழ்நாட்டில். பாதிக்கப்படும் பல்நோக்குச் சூறாவளி மையத்துக்கு அமைக்க இதுவரை மைய அரசு முன்வரவில்லை என்பதைக் கூட கழக நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் கிரிராஜன் பேசி உள்ளதும் கவனிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

மிக் ஜாம் புயல் பாதிப்புப் பகுதிகளைப் பார்வையிட்டுப் போர்க்கால அடிப்படையில் உள்ளாட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளன. 20 பேர் கொண்ட மற்றும் தலைமைச் செயலர் தலைமையில் 50க்கு மேற்பட்ட ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். அதிகாரிகள் கொண்ட குழு முதல்வர் தளபதியால் அறிவிக்கப்பட்டது. குழுவில் துரைமுருகன். ஐ.பெரியசாமி. உதயநிதி ஸ்டாலின் கே.என்.நேரு. பொன்முடி. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம். தா.மோ.அன்பரசன். கே.கே.எஸ்.எஸ்.ஆர். இ.ரகுபதி. பெரிய கருப்பன். தங்கம் தென்னரசு. சக்கரபாணி சேகர்பாபு. மா.சுப்பிரமணியன். அன்பில் மகேஷ் பொய்யாமொழி. மூர்த்தி. டி.ஆர்.பி.இராஜா. மஸ்தான். கீதா ஜீவன். கணேசன். கண்ணப்பன் உள்ளிட்ட பல அமைச்சர்கள் உள்ளிட்டோர் இருந்து பணியாற்றி வருகின்றனர்.

அவர்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள். டி.ஆர். பாலு. தயாநிதி மாறன். கனிமொழி. ஜெகத்ரட்சகன். தமிழச்சி தங்கபாண்டியன் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற, உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள் தன்னார்வலர் அமைப்புகள். தி.மு. கழக பல்வேறு கட்சித் தோழர்கள் எனக் களம் இறங்கினர். சென்னை. காஞ்சிபுரம். திருவள்ளூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் கடுமையான பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளில் அமைச்சர்கள் விரைந்து செயல்பட்டனர்.

முதல்வர் தளபதி அவர்கள் சென்னைக் கோட்டையில் உயர் அதிகாரிகள் கூட்டம் போட்டு அன்றாடம் நிவாரண பணிகள் முடுக்கி விட்டுக்கொண்டிருந்ததுடன். பல்வேறு இடங்களில் தாமே நேரடியாக சென்று மக்களைச் சந்தித்து. மீட்பு நிவாரணப் பணிகளை மேற்கொண்டார். முதல்வர் தளபதி சென்னை அனகாபுத்தூர் பகுதியில், அமைச்சர் தா.மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி ஆகியோருடன் மற்றும் பல்வேறு பகுதிகளில் சென்று பார்வையிட்டு நிவாரண பொருட்களை வழங்கி தொடங்கிவைத்தார். அதைப்போல அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சேப்பாக்கம்- திருவல்லிக்கேணி, மயிலாப்பூர் மற்றும் பல்வேறு பகுதிகளுக்கு சென்று மக்களின் குறைகளைக் கேட்டு நிவாரணப் பணிகளை மேற்கொண்டார். அறிந்தார்.

காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் கடுமையாக பாதிக்கப்பட்ட தாம்பரம், முடிச்சூர், அனகாபுத்தூர், குன்றத்தூர், வேளச்சேரி, வழியாக்கம், பரணிபுத்தூர், ஐயப்பன் தாங்கல், பாதிக்கப்பட்ட பகுதிகளை துரை முருகன், ஐ.பெரியசாமி, தா.மோ.அன்பரசன், சக்கரபாணி ஆகியோர் சென்று தொடர்ந்து பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் வீடுகளில் தண்ணீர் புகுந்தது மட்டுமல்லாமல், 15 அடி உயரம் நீர் நிரம்பி காணப்பட்டது. அவற்றை அகற்றும் பணியில் பிற மாவட்டங்களில் இருந்து பணியாளர்கள் வரவழைத்து ஷிப்ட் அடிப்படையில் 25 ஆயிரம் பேரையும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுவோர் 73 ஆயிரம் பேர் மூலம் மீட்பு வேலை செய்யப்பட்டது. காவல்துறை, நெடுஞ்சாலைத்துறை, என்று அரசு பணியாளர் வருவாய்த்துறை என்று அரசு பணியாளர் மூலம் ஏறத்தாழ 75 ஆயிரம் பேரை மீட்டனர். முகாம், வீடுகளில் இருப்பவர்களுக்கு 37 லட்சம் உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

மாவட்டச் சேதங்களைப் பார்வையிட வந்த ஒன்றியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் இராஜ்நாத் சிங் கோட்டையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து பாதிப்புவிவரம் கேட்டறிந்தார். மாநில பேரிடர் நிவாரண நிதியாக ரூ.5,060 கோடி ஒதுக்கக் கூறி முதல்வர் அவரிடத்தில் கோரிக்கை வைத்திருந்தார். பிரதமர் மோடியிடம் டி.ஆர். பாலு எம்.பி. மூலம் கடிதம் நேரில் வழங்கிட வைத்தார். ஆனால் ஒன்றிய அரசு வெறும் ரூ.450 கோடியை ஒதுக்கி உத்தரவிட்டிருக்கிறது. ஏற்கெனவே, ரூ 6,230 கோடி போன்ற பல்வேறு நிவாரண நிதியைத் தராத மோடி அரசு, குஜராத், உத்தரப்பிரதேசம் மாநிலங்களுக்கு அள்ளித் தந்து உதவுகிற ஒன்றிய அரசு, தமிழ்நாட்டிற்கு மறுத்து வருகிறது.

இந்நிலையில், தமிழ்நாடு அரசு சார்பில் முதலமைச்சர் தளபதி அவர்கள் புயல், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6000 வெள்ள நிவாரணம் குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கிடவும், பலியானவர்கள் குடும்பத்திற்கு ரூ.5 இலட்சம் நிதியும், கால்நடைகள், சேதம் அடைந்த பயிர்கள் படகுகள், வீடுகளுக்கு இழப்பீடு ரூ.8,000-மும் வழங்கிட உத்தரவிட்டிருக்கிறார்.

இந்நிலையில், தேசிய பேரிடர் ஆணைய ஆலோசகர் குணால் சத்யார்த்தி. தலைமையில் வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்ய வருகை தந்திருக்கிறது. நேற்று சென்னையில் பாதிப்புப் பகுதிகளை நேரில் சுற்றிப் பார்த்த குணால் சத்யார்த்தி மத்திய அரசுக் குழு, “தமிழ்நாடு அரசின் செயற்பாட்டினால் சென்னையில் பெரும் பாதிப்பு தவிர்க்கப்பட்டிருக்கிறது” என்று தளபதியார் தலைமையிலான தி.மு.க. அரசுக்குப் பாராட்டு தெரிவித்து இருக்கிறது.

அரசியல் கட்சித் தலைவர்கள் புழுதி வாரித் தூற்றும் எதிரிகளாக மாறி, விமர்சனம் வைத்தவர்களுக்குப் பதில் தந்துள்ள முதல்வர் அவர்கள், “நான் அரசியல் பேச விரும்பவில்லை; மக்களைப் பாதுகாப்பது ஒன்றே எனக்கு முக்கியம்” என்று கூறியுள்ளார். என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற அடிப்படையில், ஊண் உறக்கம் இன்றி, பசி, ஓய்வின்றி பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்காக மு.க.ஸ்டாலின் அவர்கள் செயற்பட்டு வருகிறார்.



கவிஞர் தமிழ்தாசன்
தி.மு.க.
தீர்மானக் குழுத் தலைவர்

---

## நசுக்கப்படும் நாடாளுமன்ற ஜனநாயகம்!

# பெரியாரின் கருத்துகளின் மீது பா.ஜ.க.வினர் ஆத்திரம்!

### தீக்கதிர் நாளேடு தலையங்கம்!

சென்னை, டிச. 15-

நாடாளுமன்றத்தில் மாநில உரிமைகள் தொடர்பாக தந்தை பெரியாரின் கருத்துக்களை மேற்கோள் காட்டிய போது பா.ஜ.க. வினர் ஆத்திரமடைந்தனர் என ‘தீக்கதிர்’ நாளேடுநசுக்கப்படும்நாடாளுமன்றஜனநாயகம்என்றதலைப்பில் 13.12.2023-ல்தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு: -

நாடாளுமன்றத்தில் அம்பானி- அதானி குறித்து கேள்வி எழுப்பிய காரணத்திற்காக திரிணாமுல்காங்கிரஸ்உறுப்பினர் மஹுவா மொய்த்ரா எம்.பி., பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். நாடாளுமன்ற நெறிமுறைக் குழு விசாரணையின் போதுதம்மீதானகுற்றச்சாட்டுகளை அவர் மறுத்தபோதும், அந்தக்குழுவில் இடம் பெற்றுள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பதவி நீக்கத்தை எதிர்த்த நிலையிலும் மக்களவையில் கொண்டுவரப்பட்டதீர்மானத்தின் அடிப்படை யில் அவரது பதவி பறிக்கப்பட்டுள்ளது.




இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் அவர் வழக்கு தொடுத்துள்ளார். காங்கிரஸ் தலைவரான ராகுல்காந்தியின் எம்.பி., பதவி நீதிமன்ற தீர்ப்பைக் காரணம் காட்டி பறிக்கப்பட்டது. பின்னர் உச்சநீதிமன்றத்தின் தலையீடு காரணமாக அவர் நாடாளுமன்றத்திற்கு மீண்டும் வர முடிந்தது.

நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மீது நம்பிக் கையில்லாத ஆர்எஸ்எஸ் அமைப்பின் அரசியல் முகமான பாஜக, நாடாளுமன்ற ஜனநாய கத்தை கொஞ்சம் கொஞ்சமாக அழித்து வருகிறது. இதே நாடாளுமன்றத்தில் பாஜக உறுப்பினரான ரமேஷ் பிதூரி சக நாடாளுமன்றஉறுப்பினரானடேனிஷ் அலியை மதரீதியாக இழிவுபடுத்தும் வகையில் அருவருக்கத்தக்க வார்த்தைகளை பயன்படுத்தினார்.

ரமேஷ் பிதூரியை அவையிலிருந்து இடை நீக்கம் செய்யக்கூட தயாராகஇல்லை. அவர்மன்னிப்புக் கேட்க மறுத்தபோதும், அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பின்னர் அவர் வருத்தம் தெரிவித்துவிட்டதாகக் கூறி பிரச்சனையை முடித்துவிட்டனர்.

நாடாளுமன்றமாநிலங்களவையில்ஜம்மு-காஷ்மீர்தொகுதிகள் மறு வரையறை தொடர்பான மசோதா மீது பேசிய தி.மு.க. உறுப்பினர் எம்.எம். அப்துல்லா,ஜம்மு-காஷ்மீர்மாநில சிறப்பு அந்தஸ்து ரத்து என்பது கூட்டாட்சி மீதான தாக்குதல் என்று குறிப்பிட்டிருக்கிறார். அத்துடன் மாநில உரிமைகள் தொடர்பாக தந்தை பெரியாரின் கருத்துக்களை மேற்கோள் காட்டியபோது பாஜகவினர் ஆத்திரமடைந்துள்ளனர்.

பெரியாரின் கருத்துக்களை மட்டுமல்ல, பெரியார் என்ற பெயரும் அவைக்குறிப்பிலிருந்துநீக்கப்படுவதாகமாநிலங்களவைத் தலைவர் ஜகதீப் தன்கர் அறிவித்துள்ளார். ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கான சிறப்பு அந்தஸ்துரத்துசெய்யப்பட்டது குறித்து உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துவிட்டதால் அதுகுறித்து பேசவே கூடாது என ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா மிரட்டியுள்ளார். ஆனால் நீதிமன்றத் தீர்ப்பை நாடாளுமன்றம் நினைத்தால் மாற்றி அமைக்க முடியும். தங்களுக்கு ஏற்பில்லாத நீதிமன்றத் தீர்ப்புகளை பலமுறை ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி புறக்கணித்திருக்கிறது.நாடாளுமன்றஜனநாயகத்தையும், பாஜக ஆட்சி அழித்து வருகிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

---

## சோதனைக் குழாய் மருத்துவ முறைகளில்

# விலையேற்றத்தைத் தடுக்க, ஒன்றிய அரசின் முன்முயற்சிகள் என்னென்ன?

### மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எம். பி. கேள்வி!

புதுடெல்லி, டிச. 15 -

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம்நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் 08.12.2023 அன்று மக்களவையில், சோதனைக்குழாய்மருத்துவ முறைகளில், தொழில் நுட்பத்தை பயன்படுத்துவதன்மூலம், விலையேற்றத்தை தடுத்து, பொதுமக்களுக்குபயனளிக்கும் வகையில் ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் என்னென்ன? என்றும், அதன்விவரங்களை உறுப்பினர்களிடம் பகிர்ந்து கொள்ள இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் சுகாதாரத்துறைஇணையமைச்சர் டாக்டர் பாரதி பிரவீன் பவாரிடம் கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அதற்கு இணைய மைச்சர் பாரதி பிரவீன் அளித்த பதில் பின்வருமாறு:

தேசியசுகாதாரத்திட்டம், ஆயுஷ்மான் பாரத் சுகாதார மையங்கள் இவற்றின்மூலம், இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகம், இந்தியாவிலேயே தயாரிக்கப்படும் மருத்துவ தொழில் நுட்ப முறைகளில் ஆராய்ச்சியைமேற்கொண்டு வருகிறது என்றும், மருத்துவ உபகரணங்கள் நோய் கண்டறிதல் முறைகள், இவற்றில் தொழில் வட்டத்தின் உதவியால், விலைகுறைப்பைஉறுதி செய்தல், அனைவருக்கும் மருத்துவ வசதி கிடைக்கச் செய்தல் என்று பல்வேறு முயற்சிகளை எடுத்து மருத்துவர்களுக்கும், மருத்துவமனைகளுக்கும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகம் சேவை செய்து வருகிறது.



இந்திய தொழில்நுட்பகழகங்களும், மருத்துவநிறுவனங்களும் இணைந்து அதிகதிறன் வாய்ந்த பொலிவுறு மையங்களைஉருவாக்கியுள்ளனஎன்றும், அதன் மூலம் ஆராய்ச்சிகளை முன்னெடுத்து பொது மக்களுக்குகுறைந்த செலவில் மருத்து உபகரணங்களும், நோய் கண்டறியும் முறைகளும் கிடைக்க வாய்ப்புகள், ஏற்படுத்தபட்டு வருகிறது. இவ்வாறு ஒன்றிய இணைய மைச்சர், டாக்டர் பாரதி பிரவீன் பவார் பதிலளித்தார்.

---

## 2015 வெள்ளத்தை விட - இப்போது

# மீட்பு பணிகள் சூப்பர்! ஒன்றிய குழுவினர் சான்றிதழ்!

### ‘தினகரன்’ தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, டிச. 15-

மழை வெள்ளப் பாதிப்புகளில் இருந்து மக்கள் விரைவில் மீண்டு வர தமிழ்நாடு அரசு எடுத்த மீட்பு பணிகள் சூப்பர் என ஒன்றிய குழுவினர் பாராட்டு சான்றிதழ் கொடுத்துள்ளனர் என ‘தினகரன்’ நாளேடு 13.12.2023 அன்று தலையங்கத்தில்குறிப்பிட்டுள்ளது.

அது வருமாறு:

மிக்ஜாம்புயலால்பாதிக்கப்பட்ட சென்னை உள்ளிட்ட 4 மாவட்டங்களில் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட பணிகள் பாராட்டுக்குரியவை. மழை, வெள்ளபாதிப்புகளில்இருந்து மக்கள் விரைவில் மீண்டு வர தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கைஎடுத்துஇருக்கிறது.அதுவும் 2015 வெள்ளத்தை விட இப்போது மீட்பு பணிகள் சூப்பர் என்று ஒன்றிய குழுவினர் பாராட்டு சான்றிதழ் கொடுத்து இருக்கிறார்கள்.இதுதான்தமிழ்நாடு அரசு பேரிடர் நேரத்தில் மேற்கொண்ட பணிக்கு கிடைத்தநற்சான்றிதழ். இதுநிச்சயம் பெருமைமிகு தருணம்.

அதிமுக, பா.ஜ உள்ளிட்ட தமிழ்நாட்டு எதிர்க்கட்சிகள் இந்த பேரிடர் நேரத்தில் தமிழ்நாடு அரசோடு ஒத்துழைத்து மக்கள் பணியாற்றி இருக்க வேண்டும். களத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர்கள், தமிழ்நாடு அரசு அதிகாரிகள் தொடர்ந்து வெள்ளம்வடியும்வரை, மக்கள்பாதுகாப்பை உறுதி செய்யும் வரை, அவர்களதுவாழ்வாதாரம்மீண்டும்இயல்புநிலைக்குதிரும்பும் வரை மக்கள் பணியாற்றிக் கொண்டு இருந்தார்கள், மீட்பு பணியை மேற்கொண்டு வந்தார்கள், நிவாரண உதவிகளை வாரி வழங்கினார்கள். அதுவும் பெரு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு எரிச்சலடைந்த மக்களைக்கூடஉரியநிதானத்துடன் கையாண்டு அவர்களுக்கான நலத்திட்டங்களையும் வழங்கினார்கள் என்றால் மிகையல்ல. அதனால் தான் மிக்ஜாம் புயல் மற்றும் பெரு மழைக்கு பிறகு சென்னை அதிவேகமாக மீண்டெழுந்து இருக்கிறது. இயல்பு நிலைக்கு இவ்வளவு விரைவில் திரும்பியிருக்கிறது. இதை யாராவது மறுக்க முடியுமா?

அதே வேகத்தில் வெள்ளத்தால்பாதிக்கப்பட்டஅத்தனை குடும்பங்களுக்கும் தலா 6 ஆயிரம் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார் முதல்வர் மு.க. ஸ்டாலின்.இத்தனைசிறப்பாக தமிழ்நாடு அரசு மிக்ஜாம் புயல் தீவிரத்தை கையாண்டது போல் அதிமுக, பா.ஜ கையாண்ட பேரிடர்கள் என்ன?.

தி.மு.க. அரசைப்பார்த்து அவர்கள் எழுப்பும் அதே கேள்விகள் அவர்களை நோக்கியும் எழுப்பப்படும்அல்லவா?.2015 பெருவெள்ளத்தின்போதுஅன்றைய முதல்வர் ஜெயலலிதா தலைமையிலானஅதிமுகஅரசு செய்தது என்ன?. அதனால் ஏற்பட்ட பாதிப்புகள், வடுக்கள் அவ்வளவுஎளிதில்மறையுமா?. அதைவிட முக்கியமாக இன்றைய எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடிபழனிசாமிமிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்குமேற்கொண்டநிவாரண பணிகள் என்னென்ன?. கொரோனாகாலத்தில்ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் தான் என்ன?

திமுக அரசின் பணிகளால் சென்னை இயல்பு நிலைக்கு வெகுவிரைவில் திரும்பியது கண்டு, வெள்ளத்தில் அரசியல் செய்யமுடியாதது எதிர்க்கட்சிகளுக்கு வருத்தம். அதனால் தான் புயல் நிவாரணமாக 10 ஆயிரம் கொடுக்க வேண்டும், 12ஆயிரம்கொடுக்கவேண்டும் என்று பேசுகிறார்கள். 201415 முதல்202122வரையில்ஒன்றிய அரசின் நேரடி வரி பகிர்வாக தமிழ்நாடு கொடுத்திருப்பது 5.16 லட்சம் கோடி.

இதே காலகட்டத்தில் வரி பகிர்வாக ஒன்றிய அரசிடம் தமிழ்நாடு பெற்றிருப்பது 2.08 லட்சம் கோடிதான். அப்படி இருக்கும் போது தமிழ்நாடு அரசுகேட்டுள்ளமிக்ஜாம்புயல் நிவாரண நிதியாக 5 ஆயிரம் கோடியை ஒதுக்குவதில் ஒன்றிய அரசுக்கு என்ன தயக்கம்?

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கு.சீ.வெங்கடாசலம்

### டிசம்பர் 15 (2009)



தம் இளம் வயதிலேயே கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

சேலம் ஒன்றியக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.

1971 முதல் 1976 வரை சேலம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும், சேலம் சொர்ணபுரி கூட்டுறவு வீடு கட்டும் சங்கத் தலைவராகவும் பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

1975ஆம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில் தொண்டர் படைத் தலைவராகப் பணியாற்றியவர்.

விவசாயப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.12.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றத்தின் புதிய உறுப்பினரான சட்டமன்ற உறுப்பினர் கே. பொன்னுசாமி மற்றும் புதிய அலுவல் சாரா உறுப்பினர்கள் வெ.மாறன், கி.ரத்தினசாமி, திருமதி.க.புஷ்பராணி, ஆ.பொன்னுசாமி, இரா.சரவணன், ச.சாத்துக்குட்டி, திருமதி. சு.மல்லிகா, மூ.இராமசாமி, திருமதி வீரலட்சுமி, ராஜசேகரன் செல்வம், மு.குணசேகரன், திருமதி.வ.தெய்வம், அ.பாலாஜி, கா.ராஜவேல், மருத்துவர் ஆ.புஷ்பலீலா ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க. லட்சுமி பிரியா, பழங்குடியினர் நல இயக்குநர் எஸ்.அண்ணாதுரை ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.12.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நரிக்குறவர் நலவாரியத்தின் புதிய அலுவல் சாரா உறுப்பினர்கள் ரா.வீரப்பன், திருமதி ஆர்.ரோஜா, சி.ரவிச்சந்திரன், நா. மணிமாறன், ஆ.பாபு, எஸ்.குமார், ச.அஞ்சாஸ்பரன், சிவக்குமார், சந்திரன், எஸ்.பாண்டியன் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, பழங்குடியினர் நல இயக்குநர் எஸ்.அண்ணாதுரை ஆகியோர் உள்ளனர்.

### பால் உற்பத்தியாளர் நலன் காத்திட

# ஆவின் பால் கொள்முதல் விலை - லிட்டருக்கு ரூ.3 உயர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, டிச.15-**

**தமிழ்நாட்டில் பால் உற்பத்தியாளர்களின் நலன் காத்திட ஆவின் பால் கொள்முதல் விலையினை லிட்டர் ஒன்றுக்கு 3 ரூபாய் உயர்த்தி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.**

ஆவின் நிறுவனம் 3.87 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் மூலம் இந்த நிதியாண்டில் நாளொன்றுக்கு சராசரியாக 32.98 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து, சுமார் 30 இலட்சம் லிட்டர் பாலை நாள்தோறும் நுகர்வோருக்கு தமிழ்நாடு முழுவதும் விற்பனை செய்து வருகிறது. பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்குத் தேவையான கலப்புத் தீவனத்தையும், கால்நடை மருத்துவ வசதிகளையும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் வாயிலாக ஆவின் நிறுவனம் வழங்கி வருகிறது.

கடந்த ஆண்டு 05.11.2022 முதல் பால் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டு, பசும்பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.35/ஆகவும், எருமைப்பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.44/ ஆகவும் நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

பால் கூட்டுறவு அமைப்புகளின் முக்கிய நோக்கமே, பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான கொள்முதல் விலையையும், நுகர்வோர்களுக்கு தரமான பாலை நியாயமான விலையில் விற்பனை செய்வதுமேயாகும். இந்தச் சூழ்நிலையில், இடுபொருட்களின் விலை உயர்வு, உற்பத்திச் செலவினம் ஆகியவை அதிகரித்துள்ளதால், பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்கிட பால் உற்பத்தியாளர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

இந்தக் கோரிக்கை அரசால் கனிவுடன் பரிசீலிக்கப்பட்டு, இடுபொருட்களின் விலை உயர்வை ஈடுசெய்திடவும், பால் உற்பத்தியை உயர்த்தி, கூட்டுறவு நிறுவனமான ஆவினுக்கு வழங்கிட வழி வகுத்திடவும், ஒரு லிட்டருக்கு மூன்று ரூபாய் ஊக்கத்தொகையாக ஆவின் நிறுவனத்தால் 18.12.2023 முதல் வழங்கிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதனால் பசும்பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.35லிருந்து ரூ.38 ஆகவும், எருமைப்பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.44லிருந்து ரூ.47 ஆகவும் உயரும். இதன்மூலம் சுமார் நான்கு இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயனடைவார்கள்.

பால் உற்பத்தியாளர்களின் நலனையும், நுகர்வோர் நலனையும் பாதுகாத்திடத் தேவையான அனைத்து உதவிகளையும் ஆவின் நிறுவனத்திற்கு தமிழ்நாடு அரசு தொடர்ந்து வழங்கும்.

பால் உற்பத்தியாளர்கள் தொடர்ந்து அதிக அளவில் பால் உற்பத்தி செய்து, கூட்டுறவு நிறுவனமான ஆவினுக்கு பால் வழங்கி, பொருளாதார மேம்பாடு அடைவதுடன் கிராமப் பொருளாதாரம் உயர்ந்திட ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமென்று ஆவின் நிறுவனம் அன்புடன் கேட்டுக் கொள்கிறது.

### மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்

# அறங்காவலர் நியமனம் சரியே!

## உயர்நீதிமன்றம் உத்தரவு!

*சென்னை, டிச. 15-*

*மதுரை, மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் அறங்காவலர் நியமனம் சரியே என்று சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது.*

*மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் அறங்காவலர் நியமனத்தில் எந்தவித விதிமீறலும் இல்லை என்று சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை தெரிவித்துள்ளது. மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் அறங்காவலர் குழு நியமனத்தை ரத்து செய்யக் கோரிய மனுவை நேற்று முன்தினம் (13.12.2023) தள்ளுபடி செய்த சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, அறங்காவலர் குழுவில் 3 பெண்களை இடம்பெறச் செய்தது நீதிமன்றத்துக்கு மிகவும் திருப்தி அளிக்கிறது எனவும் நீதிபதிகள் பாராட்டு தெரிவித்தனர்.*



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (14.12.2023) தமது முகாம் அலுவலகத்தில் பணியாற்றும் எஸ். தனபால் – ஆர். சந்தனபிரியா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன் திருமதி. சாந்தா ஸ்டாலின் அவர்களும் – மணமக்களின் குடும்பத்தினரும் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.12.2023) சென்னையில் நடைபெற்ற தொழிலதிபர் என்.ஜெயமுருகன் அவர்களின் மகள் என்.ஜெ.அனிதா – எம்.ராஜேந்திரா (எ) குரு ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.





# திராவிட சினிமா


36

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில், திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

படங்கள் உதவி : ஞானம்





## ‘நல்லவன் வாழ்வான்’ – சட்டத்தின் வழி நீதி!

மிகுந்த கவனத்துடனே, ‘புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர் நடிக்கும்’ (நானறிந்த வரையில் முதல்முறையாக டைட்டில் கார்டில்), எனக் காணப்பட்டது அண்ணாவின் **‘நல்லவன் வாழ்வான்’** திரைப்படத்தில்தான் எனக் குறிப்பிடுகிறேன்.


கதைக்களமும் திரைக்கதையும் வழக்கமான அண்ணாவின் திரைப்படங்களின் பாணியிலானது மட்டுமில்லை. கூடுதலாக, படத்தின் தொடக்கக் காட்சிகளில் வரும் மக்கள் மன்றங்களின் தேர்தல்கள் பற்றிய வசனங்களும் தகவல்களும் நூறு சதம் அண்ணாவினுடையதுதான். இதில் கவனத்துக்குரிய செய்தி, பேரறிஞர் அண்ணா, பாண்டுரங்கன் என்பவரது மூலக்கதைக்குத் திரைக்கதை வசனம் எழுதியிருக்கிறார் என்பது.

1961–ஆம் ஆண்டு வெளியான ‘நல்லவன் வாழ்வான்’, 1962–ஆம் ஆண்டின் பொதுத்தேர்தலுக்கு முன்னர் வெளியான திரைப்படம். 1962–ஆம் ஆண்டு தேர்தல் களத்தை, கவனத்தில் கொண்டே இந்தத் திரைப்படத்தைத் திட்டமிட்டு எழுதியிருக்கிறார் அண்ணா என்பதில் ஐயமில்லை. வெகுகாலம் நேரடியாகப் படங்களில் செயல்படாத அண்ணா, 1961–இல் வெளியான இந்தப் படத்திலும், 1962–ஆம் ஆண்டில் வெளியான ‘எதையும் தாங்கும் இதயம்’ எனும் எஸ்.எஸ்.ராஜேந்திரன் நடித்த படத்திலும் என இரண்டு படங்களில் பணியாற்றியுள்ளார். அடுத்த வாரம் அந்தத் திரைப்படத்தைக் காணலாம்.

### தேர்தல் அரசியலும் சாமான்யர்களும்...

செய்யாத குற்றத்துக்கு, கொலைக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட நாயகன், தூக்குக் கயிற்றின் விளிம்பிலிருந்து தப்புவதுதான் இந்தப் படத்தின் கதைக்களம். ஆனால், திரைப்படத்தின் ஆரம்பக் காட்சிகளில் நேரடியாக அன்றைய, 1962–ஆம் ஆண்டின் தேர்தல் அரசியல் நடவடிக்கைகள் பேசப்படுகின்றன.

கடந்த ஐம்பது ஆண்டுக் கால திராவிட அரசியல்தான், தேர்தல் அரசியலின் புனிதத்தைச் சீரழித்துவிட்டது என அங்கலாய்க்கும் காமாலைக் கண்ணர்கள் ஐயோ பாவம். அவர்கள் அசல் வரலாற்றை அறியாதவர்கள் அல்ல, அதனை ஒளித்துக் கொள்ள நினைப்பவர்கள். கூடுதலாக, அவர்கள் திராவிட இயக்கத்தவர்கள், குறிப்பாக சாமன்யர்களான திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எதிர்கொண்ட சவால்களையும்,



அவர்களுக்கு எதிராகத் திரண்ட உயர்ஜாதி மற்றும் பண முதலைகளையும் எதிர்கொண்ட விதத்தையும் அறியாதது போல நடிப்பவர்கள்.

தேர்தல் களத்தில் எளிய மனிதர்களின் பிரதிநிதி, நாயகன் முத்துவும், ஊரின் பெரும் தனவந்தர் நல்லசிவமும் போட்டியிடுகின்றனர். நல்லசிவம், ஏழை மாரியம்மன் கோயில் (அண்ணாவின் விருப்பத்துக்குரிய அம்மன் பெயர். அம்மன் ஏழையா அல்லது அவளை வழிபடுபவர்கள் ஏழையா என்பதே உள்ளீடான பகடி) தர்மகர்த்தாவும் கூட. ஆளும்கட்சியின் அரசுப் பிரதிநிதியாக ஊர்ப்பணத்தை மட்டுமல்ல, கோயில் சொத்தையும் களவாடும் பேர்வழி. இன்று தமிழ்நாடு அரசின் இந்து அறநிலையத்துறை மீதான கட்டுப்பாட்டை நீக்கிவிடப் போராடுபவர்களின் மூதாதையர், நல்லசிவம் கதாபாத்திரம்.

தேர்தலில் வெற்றி பெற அம்மனுக்கு நூறு தேங்காய் ‘லஞ்சம்’ கொடுக்கும் நபர். நல்லசிவத்தின் தேர்தல் பிரச்சாரத்தின் முறை, ஊரில் பெரிய பண்ணையாரைப் பார்த்து, ‘ஜனங்கள எனக்கே ஓட்டுப் போட சொல்லுங்க’ என்பது. மாறாக, தி.மு.க.வினர், பம்பரமாகச் சுற்றி ஓட்டுக் கேட்பதாகப் பேசப்படுகிறது. வேகமாக சுற்றும் பம்பரம் கடைசியில் ஓய்ந்து தலை சாய்ந்துவிடுமென ஆறுதல் ஆருடம் சொல்கிறார் ‘எடுபிடி / கை பானம்’ ஐயர்.

### சத்தியமும் ஓட்டுக்குப் பணமும்

பெரும்பாலும் தி.மு.க திரைப்படங்களில் தவிர்க்கப்பட்டு, ‘பூசாரி’ என்ற அடையாளத்துடன் வரும் பார்ப்பனர் இந்தத் திரைப்படத்தில் நேரடியான அவதாரத்திலேயே வருகிறார். அவருக்கான அண்ணாவின் வசனங்கள் ஒரு தனியான ஆய்வுப் பொருள். அவை தன்னியல்பாக வந்து விழுபவையாக மட்டுமில்லை, அவற்றிற்கு வரலாற்றுப் புலம், செய்திகள் ஆகியவை உள்ளீடாகப் பொதிந்திருக்கும். அதிலும் எம்.ஆர்.ராதா போன்ற மாபெரும் நடிக ஆளுமையின் இணைவில் அது புதிய உச்சங்களைத் தொடும்.

நல்லசிவம், ‘பிச்சைக்காரப் பயல்களுக்குத் திமிர பாத்தியா?’ என்றால், ‘எல்லோருக்கும் ஓட்டுன்னுட்டாலோண்ணா’ என்பார் ஐயர். அனைவருக்கும் வாக்குரிமை எனும் கோட்பாடே, அண்ணாவை, பெரியாரின் தேர்தல் நிராகரிப்புப் பாதையிலிருந்து விலகும் துணிவையும் நம்பிக்கையையும் கொடுத்தது என்பதுதானே நமது வரலாறு. அதை எப்படி ஒற்றை வார்த்தையில் பொதிந்து விடுகிறார் அண்ணா. எனவேதான் தி.மு.க இளைஞன் முத்து அவர்களை, ‘அனுமதி அளிக்கும் எஜமானர்கள்’, **‘தேர்தல் வெற்றி மக்களுக்குச் சேவை செய்ய ஒரு வாய்ப்பு’** என்பான்.

முத்து, ‘ஏழைங்க கட்டளையை ஏற்றுத் தேர்தலில் நிற்கிறேன்’ என்றால், நல்லசிவம், ‘தங்கமான பையன எலக்சன்ல இழுத்து விட்டுட்டாங்க’ என்பார். நல்லசிவம் தேர்தலில் தோற்றதும், ‘கட்டுக் கட்டா பணம் கொடுத்தேனே வாங்கிக்கிட்டு ஏமாத்திட்டாங்க’ எனப் புலம்புவார். அது அண்ணாவின் மக்கள் மீதான அசையாத நம்பிக்கையின் அடையாளம். அது நிறைவேற 1967– ஆம் ஆண்டு தேர்தல் வரை காத்திருக்க வேண்டியிருந்தது. ஆனால், நிஜத்தில் பஸ் முதலாளி நடேச முதலியார், சாமி படத்தின் மீது சத்தியம் வாங்கிக் கொண்டு கொடுத்த ஐந்து ரூபாய், நமது பேரறிஞர் அண்ணாவை 1962–ஆம் ஆண்டின் காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதியில் தோல்வியுறச் செய்து அதிர்ச்சி அளித்தது.

### சட்டமும் நீதியும்

‘ஆரிய மாயை’ தொடங்கி, சுயமரியாதைத் திருமணச் சட்டம் அரசமைப்புச் சட்ட அங்கீகாரம் பெற்றது வரையான அண்ணாவின் அக்கறைகளில் முக்கியமான கவனம் பெறும் பகுதி, சட்டத்தின்படியான நீதி என்பதுதான். பார்ப்பனருடனான, பார்ப்பனரல்லாத இந்துப் பெண்ணின் திருமணம், மனுச்சட்டத்தின் அடிப்படையில் மறுக்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்புதான், சுயமரியாதைத் திருமணம் தனித்த வகைமையாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென்ற அண்ணாவின் சட்டப் போராட்டத்துக்கு விதையாக அமைந்தது.

அண்ணாவின் திரைப்படங்களிலும் சட்ட விதிகள் குறித்த விமர்சனங்கள், தீர்ப்புகளின் மூடநம்பிக்கைவாதம் போன்றவையே இடம்பெறும். குறிப்பாக, அண்ணாவின் கொள்கை, ‘சட்டம் என்பது இருட்டறை அதில் ஒரு வழக்கறிஞரின் வாதம் கைவிளக்கு போன்றது. அது எளியவர்களுக்குக் கிடைப்பது அரிது’ என்பதே. இங்கேயும் நல்லசிவம் செய்த கொலை முத்து மீது விழுகிறது. பணமுதலையின் பிடியிலிருந்து இரண்டு பெண்களை மீட்டதற்குப் பலனாகத் தூக்குக் கயிறு.

அந்தப் பொய்க் குற்றச்சாட்டினை முறியடிக்க, சிறையிலிருந்து தப்பி, அடிகளார் வேடமிட்டு, நல்லசிவத்தின் பிடியிலிருக்கும் ஒரே சாட்சியான பாட்டியை மீட்க முயல்கிறான் முத்து. இந்த முயற்சி தோல்வியுற்றாலும், இன்னொரு சட்டரீதியான ஜோடிப்புக் காட்சி மூலம் நல்லசிவத்தைத் தன் வாயாலேயே தன் குற்றத்தை ஒப்புக் கொள்ள வைக்கிறான். நல்லசிவத்தின் வாக்குமூலம் ‘மறைந்திருக்கும் மேஜிஸ்ட்ரேட்டால்’ பதிவு செய்யப்பட்டு ஆவணமாகிறது. இந்தச் சட்டப்பூர்வமான ஆவணமாக்கல் பகுதிதான் அண்ணாவின் முனைப்பு. விடுதலை முறையான ஆவணத்தின் அடிப்படையில்.

ப.நீலகண்டன் இயக்கத்தில், டி.ஆர்.பாப்பா இசையில் பாடல்களில் உதயசூரியன் உதித்தபடி இருக்கிறது. நம்பியார், ராஜசுலோசனா, ஈ.வி.சரோஜா ஆகியோரும் நடித்திருந்தனர்.

...படம் விரியும்

## ‘எச்சரிக்கை: அது தேர்தல் பணியாகவும் இருக்கலாம்’

நாடாளுமன்றத்தின் பாதுகாப்புக் குளறுபடிகள் ஒன்றிய பா.ஜ.க. அரசின் மோசமான நிர்வாகத்துக்கு மற்றுமொரு உதாரணமாகியுள்ளது. இது தொடர்பாக சமூக வலைத்தளங்களில் பலரும் பதிவிட்டு வரும் நிலையில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் வன்னியரசு எழுதியுள்ள பதிவு கவனிக்க வைக்கிறது. எச்சரிக்கை என்கிற ஹேஸ்டேக்குடன்,

2019 -ஆம் ஆண்டு தேர்தல் வருவதற்கு முன்பு 2018 -ஆம் ஆண்டு சனவரி தொடக்கத்தின் போதே பிரதமர் மோடியை கொலை செய்ய ‘அர்பன் நக்ஸல்கள்’ முயற்சித்தார்கள் எனப் பலர் கைது செய்யப்பட்டனர். வழக்கறிஞர் ரோனா வில்சன் அவர்களுடைய கம்ப்யூட்டரில் கொலை முயற்சிக்கான கடிதம் வந்ததாகச் சொல்லி,ரோனா வில்சன் ஊபா சட்டத்தில் கைது செய்யப்பட்டார். அவரைத் தொடர்ந்து பீமாகோரேகான் வழக்கு எனச் சொல்லப்படுகிற வகையில், இதுவரை 16 சமூகச் செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டனர். (அருட்தந்தை ஸ்டேன் சாமி இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார்) இதுவரை குற்றப்பத்திரிகை கூடத் தாக்கல் செய்ய முடியவில்லை.

2019-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பா.ஜ.க. தலைவர்கள், “மோடியைக் கொலை செய்ய முயற்சிக்கிறது; இந்தியாவுக்கே இது ஆபத்து” எனப் பரப்புரை செய்து வெற்றி பெற்றது. இச்சூழலில் 2024–ஆம் ஆண்டு தேர்தல் நடைபெறவுள்ள சூழலில், நாடாளு மன்றத்துக்குள் பா.ஜ.கவின் அனுமதிச் சீட்டோடு புகைக்குண்டுகள் வீசியதாக இரு பெண்கள் பிடிபட்டுள்ளனர். தேர்தலுக்கான வேலையை பா.ஜ.க. ஆரம்பித்து விட்டது என்றே தோன்றுகிறது.

இந்தியாவின் பாதுகாப்பு, நாடாளு மன்றத்தின் பாதுகாப்பு குறித்தெல்லாம் பா.ஜ.க.வுக்கு அக்கறை கிடையாது. முழுக்க முழுக்க 2024 -ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தல்தான் இலக்கு”எனப் பதிவிட்டுள்ளார்.

## :ப்ளாஷ்பேக்



### பேராசிரியர் தந்த பட்டம்!



மாறன்

மதுரை முத்து அவர்கள் கைப்பட எழுதி பேரறிஞர் அண்ணா அவர்களது கரங்களால் நான் கழக உறுப்பினர் அட்டை பெற்றவன். இன்றைக்கு 91 வயதில் கழகம் இருக்கும் நிலையைக் கண்டு பெருமை அடைகிறேன். 1998–ஆம் ஆண்டுத் திருச்சி சங்கம் விடுதிக்கு ஒரு விழாவில் பங்கேற்க, பேராசிரியர் அவர்கள் வருகை தந்த போது, அன்றைக்குப் பகுதி அவைத் தலைவராக இருந்த எனக்கு ‘சுயமரி யாதை வீரர்’ என்று பட்டமளித்து வாழ்த்தினார். இன்று வரை என் இல்லத்தை அலங்கரிக்கும் புகைப்படமாக இப்படம் திகழ்கிறது..

**-வெ.மாறன்,**
**முன்னாள் தலைவர்,**
**மாவட்ட இலக்கிய அணி, திருச்சி**

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018.
வாட்ஸ்அப் எண்: 90033–24473
மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### மாநில சுயாட்சி மாநாடு

**1970–ஆம் ஆண்டு மாநில சுயாட்சி மாநாட்டை நடத்தியது கழகம். இந்த மாநாட்டில் தந்தை பெரியார் மற்றும் இயக்க முன்னோடிகள் பங்கேற்றனர். ‘கலைஞரின் மனசாட்சி’ எனப் போற்றப்படும் தலைவர் முரசொலி மாறன் அவர்களின் மாநில சுயாட்சி நூல் வெளியிடப்பட்டது. அந்த ஆண்டு, சூத்திரர் என்கிற இழிவை நீக்கும், கருவறை நுழைவுப் போராட்டத்தை அறிவித்தார் பெரியார். ஆனால், கலைஞரின் வேண்டுகோளுக்கு இணங்க அந்தக் கிளர்ச்சியை பெரியார் ஒத்தி வைத்தார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

329




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131